இயற்க்கைக்கு அப்பாற்பட்ட

# நாம் காணக்கூடாத தெய்வீக உலகை குறித்து பரிசுத்த வேதாகமத்தின் போதனை என்ன - அதின் முக்கியத்துவம் என்ன

மைக்கேல் S. ஹெசர்

மொழியாக்கம்

S. ஹேன்சன் மனோவா

*Supernatural*

Copyright © 2015 by Michael S. Heiser

*Supernatural Tamil* translation

© 2017, Miqlat

The entire contents of this translation may be copied and disseminated in any form by permission of the author and copyright holder. This permission applies only to the translation published by Miqlat.org. Miqlat.org is a United States 501(c)(3) non-profit corporation. This permission therefore does not extend to any translation in the same language, or any other language, published by Lexham Press.

ISBN

Translator: S. Hanson Manova

இயற்க்கைக்கு அப்பாற்பட்ட

பதிப்புரிமை © 2015, மைக்கேல் ஹெசர்

தமிழ் மொழிபெயர்ப்பின் பதிப்புரிமை

© 2017, Miqlat

இம்மொழிபெயர்ப்பின் எப்பகுதியும் பதிப்புரிமையாளர் மற்றும் ஆசிரியரின் அனுமதியுடன் நகல் எடுக்கப்பட்டு பயன்படுத்தப்படலாம். இவ்வுரிமை miqlat.org வெளியிடும் மொழிபெயர்ப்புக்கு மட்டுமே பொருந்தும்.Miqlat.org என்பது அமெரிக்க ஐக்கிய நாடுகள் 501(c)(3) சட்டத்தின் கீழ் செயல்படும் லாப நோக்கமற்ற ஒரு தொண்டு நிறுவனம். எனவே Lexham Press வெளியிடும் இப்புஸ்தகத்தின் மொழிபெயர்ப்புகளுக்கு இவ்வுரிமை பொருந்தாது.

ISBN

Translator: S. Hanson Manova

என் தாய் எட் மற்றும் தகப்பன் ஜன் ஸ்பிராவுக்கு,

இப்புஸ்தகத்தை அர்பணிக்கின்றேன்

இது நடக்குமென யார் நினைத்தது?

ஒரு வேளை நாம் அறிந்திருக்கலாம்.

*1* சாமுவேல் *1:1-28*

# ஆங்கில புஸ்தகத்திற்கான நன்றி செலுத்துதல்

இயற்க்கைக்கு அப்பாற்பட்ட என்ற இப்புஸ்தகம், காணப்படாத உலகம், என்ற என் ஆங்கில புஸ்தகத்தை தழுவி எழுதப்பட்டபடியால், அதற்கு கூறப்பட்ட நன்றிகள் அனைத்தும் இதற்கும் பொருந்தும்.

நான் எனது ஆராய்ச்சியின் கவணத்தை பரலோக ஆலோசனை சங்கம் மற்றும் காணக்கூடாத தெய்வீக உலகினை குறித்த வேதத்தின் போதனைகளுக்கு நேராக திருப்ப போகின்றேன் என்பதனை அறிந்தவுடன் ஒரு இணையதள கலந்துரையாடல் குழுவை தொடங்கினேன். அதற்கு நான் தெய்வீக ஆலோசனை சங்க ஆராய்ச்சி குழு என்று பெயரிட்டேன். 2004'ல் எனது முனைவர் படிப்பின் ஆராய்ச்சியை நான் முடித்தபோது அக்குழு கலைக்கப்பட்டது . பின்னர் நான் Logos Bible Software என்ற இடத்தில் வேலை செய்ய தொடங்கினேன், தற்போது இப்புஸ்தகங்களை எழுதி வெளியிடுதற்கு அக்குழு என்னை ஆயத்தப்படுத்தியது.

காண்ப்படாத உலகம் என்ற புஸ்தகம் மெய்யான புராணக் கதைகள் (*The Myth That Is True)* என்ற தலைப்பில் கட்டுரைகளாக இணையதளத்தில் வெளிவந்தது. பின்னர் ஒரு புனைகதையாக, *The Façade* என்ற பெயரில் வெளியிடப்பட்டது. இறுதியாக *2012'*ம் ஆண்டு அது *"the Myth book,"* என்ற தலைப்பில் முழுபுஸ்தகமாக வெளியிடப்பட்டது.

காணப்படாத உலகம் மற்றும் இயற்க்கைக்கு அப்பாற்பட்ட ஆகிய புஸ்தகங்கள் உருவாக காரணமாக மூன்று பிரதான நபர்கள் உள்ளனர் - அவர்கள் *Faithlife Corporation* மற்றும் *Logos Bible Software* ஆகியவற்றின் தலைவர்களான*:* பாப் பிரிட்செட், டேல் பிரிட்செட் மற்றும் பில் நெயின்ஹீஸ் *(Bob Pritchett, Dale Pritchett, and Bill Nienhuis).* அவர்கள் என் படைப்பை அடுத்த கட்டத்திற்கு எடுத்து சென்றது மட்டுமல்லாமல், இயற்க்கைக்கு அப்பாற்பட்ட என்ற இப்படைப்பு உருவாக காராணமானவர்கள்.

காணப்படாத உலகம், மற்றும் இயற்க்கைக்கு அப்பாற்பட்ட ஆகிய என் புஸ்தகங்களின் பதிப்பாசிரியர். அவரது அறிவும், அனுபவமும் இப்புஸ்தகத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் இடம் பெற்றுள்ளது. என் எழுத்துக்களை படிக்கவிருக்கும் எளிய மனிதர்களை எனக்கு எப்பொழுதும் அவர் நினைவுபடுத்தினார்.

இறுதியாக என் மனைவி, டிரினாவுக்கு நன்றி. என் படைப்புகள் சாத்தியமாக காரணமானவள் அவள்.

# மொழிபெயர்ப்புக்கான நன்றி செலுத்துதல்

miqlat.org சேர்ந்த நன்கொடையாளர்களுக்கு நான் நன்றி செலுத்துகின்றேன். அவர்களது உதாரத்துவமான காணிக்கைகள் இல்லாமல், இம்மொழிபெயர்ப்பு உருவாக்கப்பட்டிருக்காது.

# பொருளடக்கம்

அதிகாரம் ஒன்று: பரிசுத்த வேதாகமத்தை விசுவாசித்தல்

அதிகாரம் இரண்டு:  காணப்படாத உலகம்: தேவன் மற்றும் தேவர்கள்

அதிகாரம் மூன்று: முன் ஒரு நாளில் மற்றும் எதிர்காலத்தின் இராஜாக்கள்

அதிகாரம் நான்கு: தெய்வீக மீறுதல்கள்

அதிகாரம் ஐந்து : பிரபஞ்சத்தின் பூகோளம்

அதிகாரம் ஆறு: வார்த்தை, நாமம், மற்றும் தூதன்

அதிகாரம் ஏழு: உடன்படிக்கையின் நியமங்கள்

அதிகாரம் எட்டு: புண்ணிய ஸ்தலம்

அதிகாரம் ஒன்பது: பரிசுத்த யுத்தம்

அதிகாரம் பத்து: சாதாரண பார்வைக்கு மறைக்கப்பட்டவை

அதிகாரம் பதினொன்று: தெய்வீக நோக்கம்

அதிகாரம் பன்னிரெண்டு: மேகத்தின் மீது பவணி வருபவர்

அதிகாரம் பதின்மூன்று : மிகப்பெரிய தலைகீழ் மாற்றம்

அதிகாரம் பதினான்கு: இவ்வுலகை சேர்ந்தவர்களல்ல

அதிகாரம் பதினைந்து: திவ்விய சுவாபத்தின் பங்காளிகள்

அதிகாரம் பதினாறு: தேவதூதர்களை ஆளுபவர்கள்

முடிவுரை

பாவமன்னிப்பிற்கான ஒரு ஜெபம்

ஆசிரியடமிருந்து ஒரு விண்ணப்பம்

# அதிகாரம் ஒன்று

# பரிசுத்த வேதாகமத்தை விசுவாசித்தல்

நாம் பரிசுத்த வேதாகமத்தை உண்மையாகவே நம்புகிறோமா?

கிறிஸ்தவர்கள் படிக்க போகும் ஒரு புத்தகத்தில் இக்கேள்வியை கேட்பது சிலருக்கு சற்று விநோதமாக தோன்றலாம். இதனை அர்த்தமற்ற ஒரு கேள்வியாக கருத வேண்டாம். வேதாகமம் சில கடினமான கருத்துக்களை உள்ளடக்கியது - குறிப்பாக இந்த நவீன யுகத்தின் நம்பிக்கைக்கு முரண்படுகின்ற போதனைகள் கொண்டது.

இயேசு பூமிக்கு இறங்கி வந்த தேவனா? அவர் சிலுவையில் மரித்து மீண்டும் உயிர்தெழுந்தாரா? யாத்திராகமத்தில் கூறப்பட்டதுள்ளது போல் தேவன் சிவந்த சமுத்திரத்தை இரண்டாக பிளந்து இஸ்ரவேலரை மீட்டாரா? என்பது போன்ற கடினமான காரியங்களை குறித்து நான் பேசவில்லை. கிறிஸ்தவர்களில் பலர் அவற்றை நம்புகிறோம் என்றே கூறுவர். இயேசுவையோ, தேவனையோ, வேதத்தில் கூறப்பட்டுள்ள அதிசயங்களையோ ஏற்றுக்கொள்ளாதவரை கிறிஸ்தவர் என்று அழைப்பதில் பிரயோஜனம் என்ன?

ஒரு நபர் வேதத்தை வாசிக்கும்போது படிக்கக்கூடிய சில அசாத்தியமான உண்மைகளைக் குறித்தே நான் பேசுகின்றேன். இவைகளைக் குறித்து நாம் திருச்சபைகளில் அதிகமாக பேசுவதில்லை.

நான் பேசும் காரியத்தை குறித்த ஒரு உதாரணம். ஆகாப் என்ற இஸ்ரவேலின் தீமையான இராஜா ஒருவனைக் குறித்து நாம் *1* ராஜாக்கள் *22'*ல் வாசிக்கின்றோம். அவன் தன் எதிரிகளை தாக்குவதற்காக யூதாவின் ராஜாவோடு இணைந்து ராமோத்-கிலேயாத் என்ற இடத்தில் யுத்தம் செய்ய புறப்பட்டான். அச்சமயம் யூதாவின் ராஜா யுத்தத்தின் முடிவு என்னவாக இருக்கும் என அறிந்துக் கொள்ள விரும்பினான். எனவே அவனும், ஆகாபும் இணைந்து ஆகாபின் இராஜ்ஜியத்தில் வாழ்ந்த தீர்க்கதரிசிகளை அனுகினர். திர்க்கதரிசிகளும் அவர்கள் யுத்தத்தில் வெற்றி பெறுவர் எனக் கூறினர். அத்தீர்க்கதரிசிகள் ஆகாப் என்ன விரும்பினானோ அதனையே தீர்க்கதரிசினமாக உரைத்ததை உணர்ந்த இருவரும், மீகா என்ற தேவனுடைய தீர்க்கதரிசினிடத்தில் சென்றனர். அவன் உரைத்தது பிற தீர்க்கதரிசிகளைப் போல் ஆகாப் விரும்பின நற்செய்தியல்ல*:*

> *அப்பொழுது அவன் சொன்னது: கர்த்தருடைய வார்த்தையைக் கேளும்; கர்த்தர் தம்முடைய சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறதையும், பரமசேனையெல்லாம் அவரிடம் அவர் வலதுபக்கத்திலும் அவர் இடதுபக்கத்திலும் நிற்கிறதையும் கண்டேன்.அப்பொழுது கர்த்தர்: ஆகாப் போய், கீலேயாத்திலுள்ள ராமோத்தில் விழும்படிக்கு, அவனுக்குப் போதனை செய்கிறவன் யார் என்று கேட்டதற்கு, ஒருவன் இப்படியும் ஒருவன் அப்படியும் சொன்னார்கள்.அப்பொழுது ஒரு ஆவி புறப்பட்டு வந்து, கர்த்தருக்கு முன்பாக நின்று: நான் அவனுக்குப் போதனை செய்வேன் என்றது. எதினால் என்று கர்த்தர் அதைக் கேட்டார். அப்பொழுது அது: நான் போய், அவனுடைய தீர்க்கதரிசிகள் எல்லாரின் வாயிலும் பொய்யின் ஆவியாய் இருப்பேன் என்றது. அதற்கு அவர்: நீ அவனுக்குப் போதனைசெய்து அப்படி நடக்கப்பண்ணுவாய்; போய் அப்படிச் செய் என்றார். ஆதலால் கர்த்தர் பொய்யின் ஆவியை இந்த உம்முடைய தீர்க்கதரிசிகளாகிய இவர்கள் எல்லாருடைய வாயிலும் கட்டளையிட்டார்; கர்த்தர் உம்மைக் குறித்துத் தீமையாகச் சொன்னார் என்றான். (1 ராஜாக்கள் 22:19-23)*

மேலே கூறப்பட்டுள்ள வேத வசனங்களின் அர்த்தம் என்னவென்று உங்களுக்கு புரிகின்றதா? புமியில் என்ன நடக்க வேண்டுமென முடிவு செய்வதற்காக தேவன் பரலோக ஆவிகளின் கூட்டத்தோடு கலந்தாலோசித்து முடிவு செய்கின்றார். இது உண்மையா?

மேலும் ஒரு உதாரணத்தை யுதாவின் நிருபத்திலிருந்து பார்க்கலாம்:

> தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகா நாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார். (யுதா 1:6)

ஒரு குறிப்பிட்ட கூட்ட தூதர்களை தேவன் உண்மையாகவே பாதாள சிறையில் அடைத்து வைத்திருக்கின்றாரா? இது நம்பக் கூடியதா?

நான் முன்னதாக குறிப்பிட்டது போல், வேதம் பல விநோதமான கருத்துக்களை உள்ளடக்கியது. குறிப்பாக நாம் காணக்கூடாத, ஆவிக்குரிய உலகை குறித்து அதிக உண்மைகளை வெளிபடுத்துகின்றது. இயேசு கிறிஸ்துவைக் குறித்தும், அவர் செய்த அசாதரணமான செயல்களை குறித்தும் கூறப்பட்டுள்ளதை தயக்கம் காட்டாமல் ஏற்றுக்கொள்ளும் பல கிறிஸ்தவர்கள், நாம் காணக்கூடாத அசாதரணமான உலகை குறித்த வேதத்தின் கருத்துகளைக் ஏற்றுக்கொள்ளவதற்கு தயக்கம் காட்டுகின்றனர். எனவே இத்தகைய வேத வசனங்களை அவர்கள் புறகணித்து விடுகின்றனர். இதனை நான் கண்கூடாக கிறிஸ்தவர்கள் மத்தியில் பார்க்கின்றேன். ஒருமுறை நானும், என் மனைவியும் ஒரு திருச்சபைக்கு சென்றோம். அச்சபையின் போதகர் பேதுருவின் முதலாம் நிருபத்திலிருந்து பிரசங்கம் செய்து வந்தார். அன்று காலை அவர் மூன்றாம் அதிகாரத்தின் 18 முதல் 22 வாக்கியங்கள் அடங்கிய வேத பகுதியை போதிக்க வேண்டும், ஆனால் அவரோ, “நாம் இப்பகுதியை தியானிக்கப் போவதில்லை, இவ்வசனங்கள் விநோதமாக காணப்படுகின்றது,” என்று கூறினார். *விநோதமாக* எனற வார்த்தையின் முலம் அவர் கூறியது என்னவென்றால், அவரது இறையியலுக்கு முரணான அசாத்தியமான காரியங்களை அவ்வசனங்கள் கூறுகின்றது என்பதே.

> ஏனெனில், கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார். அந்த ஆவியிலே அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார். அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற் போனவைகள்; அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர்மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள். (1 பேதுரு 3:18-20).

ஒரு வேதாகம ஆராய்ச்சியாளராக இத்தகைய விநோதமான வசனங்களை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதுகின்றேன் (இதனை போன்று வேதத்தில் உள்ள பல வசனங்களை). அவை தேவனைக் குறித்தும், நாம் காணாத உலகை குறித்தும், நம் வாழ்வை குறித்தும் தெளிவாக போதிக்கும் வசனங்கள். அவை புரிந்துகொள்வதற்கு கடினமாக இருப்பினும், அவற்றை சரியாக கற்கும் பட்சத்தில், அது தேவனை குறித்தும், பிறரை குறித்தும், நம் வாழ்வை குறித்தும், நமது இறுதி முடிவை குறித்தும் நமக்கிருக்கும் கண்ணோட்டத்தை முற்றிலும் மாற்றி விடும்.

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியருக்கு எழுதிய தனது முதலாம் நிருபத்தில், கொரிந்து சபை விசுவாசிகளைக் குறித்து ஏமாற்றமுள்ளவராக எழுதுகின்றார். அவர்கள் தங்கள் பிரச்சனைகளை தீர்க்க நீதிமன்றத்தை அனுகினர். அது நேரத்தையும், உணர்வுகளையும் வீணடிக்கும் செயல். அவர்களது விசுவாசத்திற்கு எதிரான செயலாக பவுல் அதனை கருதினார். பவுல் கூறுவதை கவணியுங்கள், “நீங்கள் உலகை நியாயம் தீர்க்க போகின்றவர்கள் என்று உங்களுக்கு தெரியாதா? நீங்கள் தேவதூதர்களையும் ஆளப்போகின்றவர்கள் என்று உங்களுக்கு தெரியாதா!” (1 கொரிந்தியர் 6:3).

உலகை நீயாயதீர்பவர்கள்? தேவ தூதர்களை ஆள்பவர்கள்?

பவுலின் இக்குழப்பமான வார்த்தைகள் நம் சிந்தனைகளை விரிவுபடுத்தி, வாழ்வை மாற்றும் வல்லமையுள்ள வசனங்கள். அசாதரணமான ஆவிக்குரிய ஜீவராசிகளை, நம் வாழ்வுடனும், நித்திய நிலையுடனும் வேதம் தொடர்புப்படுத்தி பேசுகின்றது. பவுல் கூறுவது போல், ஒரு நாள் நாம் உலகை நியாயம்தீர்ப்போம், தேவதூதர்களை ஆள்வோம். அதனைக் குறித்து நாம் பின்வரும் அதிகாரங்களில் சிந்திப்போம்.

பவுல் கொரிந்து விசுவாசிகளிடம் இவ்வாறு கூறியதின் காரணம் - தேவன் நம்மை எவ்வாறு சிருஷ்டித்தார், பரலோக குடும்பத்தில் நம் பங்கு என்ன என்பதை குறித்த தேவனின் விருப்பம் என்னவென்ற வேதத்தின் போதனையே. தேவனைக் குறித்தும், இயேசு கிறிஸ்துவை குறித்தும், காணக்கூடாத ஜீவராசிகளைக் குறித்தும், நம்மைக் குறித்தும் காணப்படும் தொடர்பை வேதம் குடும்ப உறவுகளில் பயன்படுத்தப்படும் சொற்களைக் கொண்டு விளக்குவது விபத்தல்ல. தேவன் மனிதர்களை தன் குடும்பமாக கருதுகின்றார், தேவன் தன் சிருஷ்டிப்பினை ஆளும் தன் குடும்பத்தினராக மனிதர்கள் இருக்க வேண்டுமென விரும்புகின்றார்.

பரலோகத்தில் உள்ளது போல் பூலோகத்திலும் என்ற ஆங்கில கருத்து பிரபலமானது. அது மத்தேயு *6:10*'ல் கூறப்பட்டுள்ள பரமண்டல ஜெபத்திலிருந்து எடுக்கப்பட்டது. ஆதி முதல் தேவன் தான் படைத்த மனித குடும்பமும், பரலோக குடும்பமும் இணைந்து தன் முழுநிறைவான உலகில் வசிக்க வேண்டுமென விரும்புகின்றார். அவ்விருப்பத்தை இருளின் அதிகாரம் எவ்வாறு எதிர்க்கின்றது, அவ்வதிகாரம் எவ்வாறு முறிக்கப்பட்டு, முடிவில் தேவனது விருப்பம் எவ்வாறு நிறைவேற்றப்படும் என்பதினை எடுத்துரைக்கவே இப்புஸ்தகம் எழுதப்பட்டுள்ளது. தேவனது விருப்பத்தை இருளின் அதிகாரம் எவ்வாறு எதிர்கின்றது எனபதினை வேத வசனங்கள் மூலம் இப்புத்தகம் சித்தரிக்கும். வேத புஸ்தகத்தில் கூறப்பட்டுள்ள காணப்படாத ஜீவராசிகளைக் குறித்த தெளிவான அறிவில்லாமல், நம்மால் பரிசுத்த வேதாகமத்தை முழுமையாக அறிந்துக்கொள்ள முடியாது. இருப்பினும் காணக்கூடாத ஜீவராசிகளைக் குறித்த வேதப் போதனை இன்று பலரால் புறகணிக்கப்படுகின்றது.

மனிதர்களின் வாழ்வை பொருத்தமட்டில், பரலோக ஜீவராசிகள் அர்த்தமற்ற, தொடர்பற்ற நபர்களல்ல. அவர்கள் மிகவும் முக்கியமானவர்கள். இன்றைய நவீன யுகத்தில் வேதம் வாசிக்கும் பலர், வேதத்தில் பல இடங்களில் சித்தரிக்கப்பட்டுள்ள அசாதரமாண ஜீவராசிகளை குறித்து அலட்சியமாக கடந்து போகின்றனர். மிகவும் பிரபலமான வேதபகுதிகளிலும் அத்தகைய ஜீவராசிகளின் சுவாரசியமான பங்களிப்பு புறகணிக்கப்படுகின்றது. இதனை புரிந்து கொள்வதற்கு எனக்கு பல ஆண்டுகளானது - பல வருடங்களாக நான் கற்றுக் கொண்டவற்றின் கனியை உங்களுடன் நான் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

நான் முதலில் கேட்ட கேள்வியிலிருந்து உங்கள் கவணத்தை திசை திருப்ப விரும்பவில்லை. வேதம் கூறுவதை நீங்கள் உண்மையாகவே நம்புகின்றீர்களா? இக்கேள்வி மிகவும் முக்கியத்தும் வாய்ந்தது. வேதம் போதிக்கும் காணப்படாத உலகத்திற்கும், நமக்கும் இடையே உள்ள தொடர்பினை அறிவதின் மூலம் வேதவசனங்களின் அர்த்தத்தை நம்மால் முழுமையாக புரிந்துக்கொள்ள முடியும்

*2* ராஜாக்கள் *6:8-23*'ல் எலிசா என்ற தீர்க்கதரிசி (மீண்டும்) ஆபத்தில் சிக்கி கொண்டார். அவர் மீது சினம் கொண்ட இராஜா அவரை சுற்றி வளைக்கும்படி தனது இராணுவத்தை அனுப்பினான். அதனை கண்ட எலிசாவின் வேலைக்காரன் பயந்து நடுங்கினான், எலிசா தன் வேலைக்காரனை பார்த்து கூறியது, "பயப்படாதே; அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்." எலிசாவின் வேலைகாரன் அதனை மறுதலிக்கும் முன்னே, எலிசா ஏறெடுத்த ஜெபம், "கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும் என்றன்; உடனே கர்த்தர் அந்த வேலைக்காரன் கண்களைத் திறந்தார்; இதோ, எலிசாவைச்சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதை அவன் கண்டான்."

எலிசா ஏறெடுத்த ஜெபத்தையே நான் உங்களுக்காக ஏறெடுக்கின்றேன். நீங்கள் பார்க்கும்படி தேவன் உங்கள் கண்களை திறக்கட்டும், வேதத்தின் இரகசியங்களை நீங்கள் காணும்படி தேவன் உங்கள் கண்களை திறப்பாராக.

# அதிகாரம் இரண்டு
# காணப்படாத உலகம்: தேவன் மற்றும் தேவர்கள்

அசாதரணமவைகளைக் குறித்தும், அசாதரணமான மனிதர்களை குறித்தும் மனிதர்கள் தீவீர ஆர்வம் கொண்டவர்கள். சமீப கால பொழுதுபோக்கு தொழிற்சாலையின் படைப்புகளை சிந்திந்து பாருங்கள். தேவதூதர்கள், வேற்றுகிரக மனிதர்கள், இராட்சதர்கள், பேய்கள், பிசாசுகள், சுனியகாரர், மந்திரவாதிகள், இரத்த காட்டேரிகள், ஓநாயகளாய் மாறக்கூடும் மனிதர்கள், மற்றும் அசாதரணமான சக்தி படைத்த மனிதர்கள் என அசாதரணமான நபர்களை மையமாக கொண்ட ஆயிரக்கணக்கான புத்தங்கள், தொலைக்காட்சி தொடர்கள், மற்றும் திரைப்படங்கள் வெளிவந்த வண்ணமுள்ளன. ஹாலிவுட் என்றழைக்கப்படும் அமெரிக்க திரைதுறையில் அசாதரணமானவைகளை மையமாக கொண்ட: எக்ஸ்-மென், தி அவெஞ்சர்ஸ், தி ஹாரி பாட்டர் தொடர்கள், மற்றும் தி டுலைட் சாகா போன்ற திரைப்படங்கள் பெரும் வெற்றி பெற்றவை. அதனை போன்று அமெரிக்க தொலைக்காட்சி தொடர்களில் பிரிஞ், சுப்பர் நேச்சுரல், மற்றும் எக்ஸ்-பைல்ஸ் என அசாதரணமான நிகழ்வுகளையும், நபர்களையும் மையமாக கொண்ட தொடர்கள் மிகவும் பிரபலம். இத்தகைய கதை புஸ்தகங்களும், ஒவியங்களும், கட்டுரைகளும் எப்பொழுதுமே பிரபலமானவை அல்லவா?

ஏன்?

அவை இயற்கையான நிகழ்வுகளிலிருந்து வேறுபட்ட ஒரு உலகை சித்தரிப்பது ஒரு காரணமாகலாம். மேலும் நாம் வாழும் உலகை காட்டிலும் சுவாரசியம் நிறைந்த ஒரு மாறுபட்ட உலகை நமக்கு காட்டுவதினால். உலகில் காணப்படும் நன்மைக்கும், தீமைக்கும் ஏதோ ஒரு தொடர்பு உள்ளது, அது பெரிதுபடுத்தி காண்பிக்கப்படும் போது, நம்மை பரவசப்படுத்துகின்றது. அரை நூற்றாண்டுக்கு முன்பே தி லாட் அப் தி ரீங்க்ஸ் என்ற கதையில் நல்லவர்களான கதாநாயகளுக்கும் (காண்டாப், புரேடோ மற்றும் நண்பர்கள்), இருளின் தேவனான சாவ்ரோன் என்ற தீயவனுக்குமிடையே நடக்கும் போராட்டம் அநேகரை மிகவும் கவர்ந்தது. அசாதரமான ஒரு வில்லன் முற்றிலும் வேறுபட்ட உலகை சேர்ந்தவனாக தோன்றும் கதைகளில், அவனை மேற்கொள்ளும் வெற்றியும் வியக்கதக்கதாக அனுபவிக்கப்படுகின்றது.

அத்தகைய கதைகள் பெரும் வரவேற்பை பெற மற்றொரு காரணம், பிரசங்கியின் புஸ்தகத்தில் சொல்லப்பட்டுள்ளது போல் "நித்தியத்தை தேவன் மனிதர்கள் உள்ளத்தில் வைத்தார்" (பிரசங்கி *3:11*). மனித சூழலுக்கு அப்பாற்பட்ட ஒரு தெய்வீக அனுபவத்தை மனிதர்கள் தேடுவதற்கு காரணம் உள்ளது. தேவன் படைத்த உலகில் வாழும் மனிதர்களுக்கு தோன்றும் ஒரு ஏக்கம் இது எனப் பவுல் ரோமர் *1:18-23* வசனங்களில் கூறுகின்றார். தேவன் படைத்த காணக்கூடிய இவ்வுலகம், காணக்கூடாத உலகை குறித்து நமக்கு நினைப்பூட்டுகின்றது. சில சமயங்களில் இவ்வுறிவை மனிதர்கள் தங்கள் சிந்தனைகளால் வீணாக்கினார்கள் எனவும் பவுல் கூறுகின்றார்.

அசாதரணமான கதைகளில் அதிக ஆர்வம் கொண்ட நாம் வேதத்தில் காணப்படும் அசாதரணமான நபர்களை நம் புஸ்தகங்கள், திரைபடங்கள் மற்றும் கதைகளில் பார்ப்பதுபோல் பார்ப்பதில்லை. அதற்கு காரணம் நாம் வேதத்தில் தோன்றும் நபர்களை மிகவும் எளியவர்களாக அல்லது நம் தாத்தாக்களை போல் சித்தரிப்பதே. அவர்கள் கதாநாயர்களாகவோ அல்லது பராக்கிரமசாலிகளாகவோ பேசப்படுவதில்லை. சிறுவயது முதல் ஞாயிறு பாடசாலைகளிலிருந்தே அக்கதைகளை நாம் கேட்டுக் கொண்டிருப்பதினால் அவைகளை நாம் அலட்சியம் செய்கின்றோம். நம் கலாச்சாரமும் வேதத்தின் மனிதர்களை நாம் முழுமையாக அறிய நமக்கு ஒரு தடையாகயுள்ளது.

அதுமட்டுமின்றி திரையுலகில் நாம் பார்ப்பது போல் வேதத்தின் அசாதரணமான மனிதர்கள் சித்தரிக்கப்படுவதில்லை. வேதத்தின் சுவாரசியமான சம்பங்களும் திருச்சபைகளில் மிகவும் வெறுப்படையக் கூடிய வண்ணம் போதிக்கப்படுகின்றன. காணக்கூடாத உலகின் உண்மைகள் நமக்கு அவசியமற்றவை என்பது போன்ற ஒரு போதனையும் பிரபலமானது.

காணக்கூடாத உலகை குறித்த கிறிஸ்தவர்களின் கற்பனைகள் பல தவறானவை. தேவதூதர்களுக்கு இறக்கைகள் இல்லை. (சேராபீன்கள் அதற்கு விதிவிலக்கு, அவை தேவதூதர்கள் என்றழைக்கப்படாமல் பரலோகவாசிகளாக தோன்றுகின்றன. வேதத்தில் தேவதூதர்கள் எப்பொழுதும் மனித வடிவிலே தோன்றினர்.) பிசாசுகளுக்கு கொம்பும், வாலுமில்லை, அவைகளின் வேலை நம்மை பாவம் செய்ய வைப்பதில்லை (நாமாகவே பாவம் செய்வதில் வல்லவர்கள்). வேதம் மனிதர்களை பிசாசுகள் தன் பிடியில் வைத்திருப்பதை மிகவும் கொடுரமான முறையில் சித்தரித்தாலும், மனிதர்களை ஆட்கொள்வது மட்டுமே அவைகளின் தொழில் அல்ல. மனிதர்களை ஆட்கொள்ளக் கூடிய பிசாசுகளை பற்றி மட்டுமே நாம் திருச்சபைகளில் அதிகம் கேள்விபடுகின்றோம். அதனை கடந்து அறிவும், புத்தி கூர்மையுடைய தேவர்களை குறித்து நாம் திருச்சபைகளில் கேள்விப்படுவதில்லை.

## தேவர்கள் இருப்பது உண்மை

நான் முதல் அதிகாரத்தின் தொடக்கத்தில் உங்களிடம் கேட்ட கேள்வியை நினைவுபடுத்த விரும்புகின்றேன், நீங்கள் உணமையாகவே வேதம் கூறுவதை நம்புகிறீர்களா?.

தனது தீர்மானங்களை நிறைவேற்ற ஒரு கூட்ட ஆவிகளை தேவன் வைத்துள்ளார் என வேதாகமம் கூறுகின்றது. அது தேவனுடைய சபை, ஆலோசனை கூடம், அல்லது மன்றம் என்றழைக்கப்படுகின்றது (சங்கீதம் *89:5-7;* தானியேல் *7:10*). அதனை தெளிவாக எடுத்துரைக்கும் ஒரு வசனம் சங்கீதம் *82:1*. அவ்வசனம் குட் நியுஸ் என்ற ஆங்கில மொழிபெயர்ப்பில் இவ்வாறாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது: "தேவன் பரலோக ஆலோசனை சங்கத்தை தலைமையேற்று; தேவர்களுக்கு முன் தன் திட்டத்தை அறிவிக்கின்றார்."

அவ்வசனத்தை நான் முதலில் படித்தபோது, அது என்னை நிலைகுலைய செய்தது. உங்களுக்கும் அவ்வாறு நேர்ந்திருக்கலாம். வேதத்தின் பிற வசனங்களை போலவே சங்கீதம் *82:1* அதின் சுழலை மையமாக கொண்டு புரிந்துக்கொள்ளப்பட வேண்டும். அப்படியென்றால் தேவர்கள் என்றால் என்ன அர்த்தம், அது எவ்வாறு விளக்கப்பட வேண்டும்.

எபிரேய மொழியின் ஏலோகீம் என்ற பதமே "தேவர்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. நம்மில் பலர் ஏலோகீம் என்ற வார்த்தை பிதாவாகிய தேவனை குறிக்கும் வார்த்தையாகவே அறிந்துள்ளோம். அதின் விரிவான பொருளடக்கத்தை நாம் அதிகம் சிந்திப்பதில்லை. அப்பதம் காணக்கூடாத ஆவிகளின் உலகில் காணப்படும் எந்தவொரு ஜீவராசிக்கும் பொருந்தும். அதினால் தான் அப்பதம் பிதாவாகிய தேவனை குறிக்கவும் (ஆதியாகமம் *1:1*), பேய்களைக் குறிக்கவும் (உபாகமம் *32:17*), மற்றும் மரித்த மனிதர்களைக் குறிக்கவும் (*1* சாமுவேல் *28:13*) என்று பல்வேறுபட்ட பரிமானங்களில் வேதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. வேதத்தை பொருந்தமட்டில் காணக்கூடாத ஆவி உலகை சேர்ந்த எந்தவொரு ஜீவராசியும் ஏலோகிமே.

ஏலோகீம் என்ற எபிரேய பதம் தேவனுக்குரிய தன்மைகள் அனைத்தும் உள்ளடக்கியது அல்ல. வேதாகத்தின் இறைவனை மற்ற தேவர்களிலிருந்து வேறுபடுத்தி காண்பிக்க ஏலோகீம் என்ற பதத்தை மாத்திரம் வேதாகமம் சாராமல், வேறு சில வழிமுறைகளை பின்பற்றுகிறது. உதாரணமாக வேதம் எவ்வாறு இறைவனை வேறுபடுத்தி காண்பிக்கின்றது என்பதை விளக்கும் சில வாக்கியங்களை பார்க்கலாம். வேதம் தேவர்களே தேவனை தொழுது கொள்ளுங்கள் என்று கட்டளையிடுகின்றது (சங்கீதம் *29:1*). அவரே அவர்களின் சிருஷ்டிகரும், இராஜாவுமாவார் (சங்கீதம் *95:3; 148:1-5*). "பரலோகில் உம்மைப் (தேவனை) போல் ஒருவருமில்லை, பரலோக வாசிகளில் உமக்கு ஒப்பானவர் ஒருவருமில்லை," என சங்கீதம் *89:6,7* வசனங்கள் கூறுகின்றன. மேலும் *1* ராஜாக்கள் *8:23;* சங்கீதம் *97:9* வசனங்கள், "தேவர்கள் மத்தியில் நீர் உயர்ந்தவர், பயப்படதக்கவர்" ஏன போதிக்கின்றன. வேதாகம ஆசிரியர்கள் எழுதும் ஒரு வெளிப்படையான உண்மை இஸ்ரவேலின் தேவனுக்கு நிகரானவர் ஒருவரும் இல்லை - அவரே "தேவர்களுக்கு எல்லம் தேவன்" (உபாகமம் *10:17;* சங்கீதம் *136:2*).

“பரிசுத்தரின் ஆலோசனை சங்கத்தில்” அமர்த்தப்பட்டிருக்கும் இவ்வாவிகள் உண்மையானவை. ஆகாப் என்ற இராஜாவை எவ்வாறு அழிக்கலாம் என தேவன் பரலோக வாசிகளுடன் ஆலோசனை நடத்தினர் என்ற வேத வசனத்தை நான் ஏற்கனவே கோடிட்டு காண்பித்தேன். அவ்வசனத்தில் பரலோகவாசிகள், ஆவிகள் என்றழைக்கபடுகின்றனர். ஆவி உலகம் உண்மையானது, அது தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட ஆவிகள் (தேவதூதர்கள்) நிரம்பியது என்பதை நாம் நம்பினால், மேலே குறிப்பிடபட்டுள்ள தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றும் ஆவிகள் உள்ளனர் என்பதினையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லையெனில் நாம் வேதம் கூறும் ஆவி உலகை முழுமையாக நம்பவில்லை என்று அர்த்தம்.

வேதம் தெய்வீக ஆலோசனை கூடத்தில் காணப்படும் நபர்களை ஆவிகள் என்று அழைப்பதினால், உலகில் காணப்படும் தெய்வங்கள் சாதாராண ஒரு கல்லினாலோ அல்லது மரத்தினாலோ செய்யப்பட்ட விக்கிரகங்கள் அல்ல. அத்தகைய சிலைகளால் தேவனது ஆலோசனை கூட்டத்தில் பங்கு கொள்ள முடியாது. பண்டைய உலகில் மெய்யான தேவனை வழிபாடாதவர்கள் தங்களுக்கென்று விக்கிரகங்களை வார்பித்தனர் என்பது உண்மையே. ஆனால் அவ்விக்கிரகங்கள் வலிமையற்றவை என அவர்கள் அறிந்திருந்தனர். அவ்விக்கிரகங்களில் தாங்கள் வழிபடும் ஆவிகள் தங்கி தங்கள் பலிகளை ஏற்றுக்கொண்டு, தங்களை வழிபடும் பக்தர்களுக்கு ஞானமளிக்கும் என நம்பினர். அவற்றை செய்தவர்கள் முறையான வழிபாட்டின் (மந்திரங்கள்) முலம் ஆவி உலகை சேர்ந்த தேவர்கள் தா ங்கள் செய்த விக்கிரகங்களை ஆட்கொண்டு அவற்றில் தங்குமென நம்பினர்.

## ஆலோசனை சங்கத்தின் வடிவமைப்பும், செயல்பாடும்

சங்கீதம் *82:1*’ல் தோன்றும் தேவர்கள் என்பவர்கள் பின்னர் *6*’ம் வசனத்தில் “உன்னதமானவரின் புத்திரர்கள் (மக்கள்)” என்றழைக்கப்படுகின்றனர். தேவகுமாரர்கள் (தேவ புத்திரர்கள்) என்ற பதம் வேதாகமத்தில் பலமுறை தோன்றுகிறது (யோபு *1:6;2:1*). தேவன் உலகையும், மனிதனையும் படைக்கும் முன்னரே தேவகுமாரர்கள் இருந்தனர் என யோபு *38:7*’ல் கூறப்பட்டுள்ளது.

தேவன் ஆவிக்குரிய ஜீவராசிகளான தேவர்களை தன் புத்திரர்கள் என அழைப்பது நம் கவணத்தை ஈர்க்கும் காரியம். உங்களுக்கு பிறக்கும் பிள்ளைகளை நீங்கள் மகன் அல்லது மகள் என அழைப்பது இயல்பு, அவர்களின் பிறப்புக்கு நீங்கள் காரணமாயிருப்பதால் அவர்களை அவ்வாறு அழைக்கின்றீர்கள். அதனைப் போன்றே தேவன் அவர்களை (தேவர்களை) சிருஷ்டித்தப்படியால், “குடும்ப” உறவை மையப்படுத்தும் புத்திரர் என்ற வார்த்தையை பயன்படுத்தி அவர்களை அழைக்கின்றார். தேவன் அவர்களுக்கு பிதா மட்டுமல்ல, அவர்களுடைய இராஜாவுமாவர். பண்டைய உலகில் இராஜாக்கள் தங்கள் குடும்பத்தினரை தங்களுடன் சேர்ந்து ஆளும்படி அனுமதிப்பர், இராஜாரிகம் அவர்கள் வம்சத்தினருக்கு கடத்தப்படும். ஆளுமை ஒரு குடும்ப சொத்து. கர்த்தர் ஆலோசனை சங்கத்தின் தேவன், அவருக்கு அடுத்தபடியான அதிகாரமுடையவர்களாக அவரது புத்திரர்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். ஆனால் அவர்களில் சிலரோ அவருக்கு துரோகம் செய்தனர். அதனைக் குறித்து இப்புஸ்தகத்தில் பின்னர் விரிவாக சிந்திக்கலாம்.

தேவபுத்திரர்கள் தேவனது ஆலோசனை சங்கத்தில் முடிவு எடுக்கும் அதிகாரம் கொண்டவர்கள். தேவன் மனித வரலாற்றில் இடைபடுகின்றவர் என்பதனை *1* இராஜாக்கள் *22* போன்ற வேத பகுதிகளிலிருந்து அறியலாம். தீயவனாகிய ஆகாப் கொல்லப்பட வேண்டுமென தேவன் தீர்மானித்தபோது, அவன் எப்படி கொல்லபட வேண்டும் என்ற தீர்மானத்தை தேவபுத்திரர்கள் கையில் ஒப்படைத்தார்.

சங்கீதம் *82* மற்றும் *1* இராஜாக்கள் *22*’ல் காணப்படும் ஆலோசனை சங்கம் மனிதர்கள் வாழ்வில் தொடர்புடைய சங்கம் மட்டுமல்ல, அது புமியின் இராஜ்ஜியங்களின் முடிவை தீர்மானிக்கும் சங்கமாகும்.

தானியேல் 4'ம் அதிகாரத்தில் நேபுகாத்நேச்சார் என்ற பாபிலோனிய இராஜா தற்காலிகமாக பைத்தியக்காரனாக மாறும்படி தேவனால் தண்டிக்கப்பட்டான். அதனை நிறைவேற்றும் பொறுப்பு காவலாளரின் கையில் (தானியேல் 4:17) ஒப்புவிக்கப்பட்ட “உன்னதமானவருடைய தீர்மானம்.” இவ்வசனத்தில் காவாளலிகள் என்ற பதம் தேவனுடைய ஆலோசனை சங்கத்தில் வீற்றிருக்கும் ஆவிகளை குறிக்கின்றது. அவர்கள் ஒய்வில்லாமல், மனித வரலாற்றை கவணிக்கின்றனர் என்பதினை உணர்த்துகின்றது.

தேவனது ஆலோசனை கூடத்தில் அமர்ந்திருக்கும் தேவபுத்திரர்கள் அவரது அரசாட்சியின் பங்காளிகள் என்பதினை இவ்வதிகாரங்கள் நமக்கு விளக்குகின்றன. தேவன் என்ன செய்யப்பட வேண்டுமென சில சமயங்களில் தீர்மானித்து, அது எவ்வாறு செய்லபடுத்தப்பட வேண்டுமென்ற சுதந்திரத்தை தேவபுத்திரரின் கரத்தில் ஒப்படைக்கின்றார்.

தேவதூதர்கள் தேவனது ஆலோசனை சங்கத்தில் பங்குகொள்கின்றனர். பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் தேவதூதன் என்ற பதத்தின் அர்த்தம் தூதன் (செய்தி கொண்டுசெல்பவன்) என்பதாகும். தேவதூதன் என்ற பதம் அவர்களின் பணியை சித்தரிக்கும் வார்த்தை. தேவதூதர்களின் தொழில் என்ன, தேவனது ஆலோசனை கூடத்தில் வீற்றிருக்கும் தேவர்களின் கடமைகள் என்ன எனபதினை இப்புத்தகத்தின் பின்பகுதியில் சிந்திக்கலாம்.

## இதின் முக்கியத்துவம் என்ன

இதுவரை இப்புத்தகத்தை படிக்கும் நீங்கள், “ஆ! இது ஆச்சரியமாய் உள்ளதே, இப்படிபட்ட கருத்தை நான் வேதத்தில் இதுவரை கவணிக்கவே இல்லை என கருதலாம். ஆனால் இதற்கும் உங்கள் தினசரி வாழ்விற்கும், திருச்சபைக்கும் உள்ள தொடர்பு என்ன?” அதற்கான பதில், உங்கள் வாழ்வின் நோக்கமும், நீங்கள் உலகில் ஈடுபடும் அனைத்து காரியங்களும் உங்கள் தேவன் யார் என்பதின் அடிப்படையில் தான் அமையும். அதனை வலியுறுத்தும் விதம் நான் ஒவ்வொரு அதிகாரத்தின் முடிவிலும் நாம் கற்றுக்கொள்ளும் உண்மைகளை எவ்வாறு நமது தினசரி வாழ்வில் பயன்படுத்த முடியும் என்ற துணுக்களுடன் முடிப்பேன்.

இவ்வதிகாரத்தில், தேவன் எவ்வாறு உலகை நிர்வாகிக்கின்றார் எனவும், அதின் வழியாக தேவன் யார் என்பதினையும், அவருக்கும் நமக்கும் என்ன தொடர்பு என்பதினையும் கற்றுக்கொண்டோம்.

முதலில், தேவன் புமியில் எவ்வாறு செயல்படுவார் என்பதற்கு அவர் தனது பரலோக குடும்பத்தை எவ்வாறு நடத்துகின்றார் என்பது ஒரு சான்று. அதனை விரிவாக நாம் அடுத்த அத்தியாயத்தில் சிந்திக்கலாம். அதற்கு முன்பு உங்களுக்கு ஒரு உதாரணத்தை காட்ட நான் விரும்புகின்றேன். தேவனுக்கு எதற்காக ஒரு ஆலோசனை சங்கம் தேவை என நீங்கள் சிந்திக்கலாம். ஆவிக்குரிய உலகை ஆள தேவனுக்கு பிறரது உதவி அவசியமில்லை! இருப்பீனும் தன்னைவிட தாழ்வான ஜீவராசிகளைக் கொண்டு தேவன் தனது திட்டத்தை செயல்படுத்துகின்றார்.

அவருக்கு ஆலோசனை கொடுக்க ஒரு சங்கம் அவசியமில்லை, ஆனால் தேவன் ஒரு ஆலோசனை சங்கத்தை தெரிந்துக்கொண்டார். தேவன் எவருக்கெல்லாம் சுவிசேஷம் தேவை என்று சித்தம் கொள்கின்றாரே அவர்கள் செவிகளில் அவரே சுவிஷேசத்தை அறிவிக்கலாம். அவர்கள் அதற்கு செவிகொடுக்கும்படி செய்யவும் தேவனால் கூடும். ஆனால் தேவன் அவ்வாறு செய்யாமல், உங்களையும், என்னையும் கொண்டு அதனை செயல்படுத்துகின்றார்.

இரண்டாவது, எல்லாவற்றையும் தான் விரும்பும் வண்ணம் மாத்திரம் நடக்கும்படி தேவன் தீர்மானிக்கலாம், ஆனால் அவர் அவ்வாறு செய்வதில்லை. ஆகாபின் கதையில் அவனது முடிவு எவ்வாறு செயல்படுத்தப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை தனது பரலோக ஆலோசகர்கள் கையில் அர்பணிக்கின்றார். எனவே காணப்படாத உலகிலும், நாம் வாழ்கின்ற

உலகிலும் எல்லா காரியங்களும் எப்படி செயல்பட வேண்டுமென்பதை தேவன் முற்றிலும் தீர்மானிக்கவில்லை.

காணக்கூடாத உலகில் தேவன் மேலான அதிகாரமுடையவர். அவருக்காக பணிபுரிபவர்கள் அவரது குடும்பத்தினர், அவர்களுக்கு ஆளுமையில் பங்கு உண்டு. அவரது உலகம் எவ்வாறு நிர்வாகிக்கப்பட வேண்டுமென்பதில் அவர்கள் பங்கு கொள்கின்றனர்.

மனிதகுலத்தை குறித்தும் வேதம் அவ்வாறே பேசுகின்றது ஆதியில் தேவன் ஏதேனில் ஆதாமை வைத்த நாள் தொடங்கி மனிதன் தன்னுடன் இணைந்து உலகை ஆள வேண்டுமென தேவன் விரும்புகின்றார். ஆதாம் மற்றும் ஏவாளிடம் தேவன் கூறியது, " நீங்கள் புமியையும், அதிலுள்ள யாவையும் ஆளும்படி அநேக பிள்ளைகளை பெற்றுக் கொள்ளுங்கள்" (ஆதியாகமம் *1:28*). ஆதாமும், ஏவாளும் தேவனுடைய புத்திரர்கள் - தேவனுடைய பூலோக குடும்பத்தினர். அவர்கள் தேவனுடன் இணைந்து முழு உலகையும் ஏதேனைப் போல் மாற்ற வேண்டுமென அவர் விரும்பினார்.

ஆதாம் மற்றும் ஏவாள் இவர்கள் இருவர் மட்டும் ஏதேனில் வசிக்கவில்லை, தேவனும் அவரது தெய்வீக குடும்பத்தினரும் அவர்களுடன் இணைந்து ஏதேனில் வசித்தனர். தேவன் ஏதேனில் தன் தெய்வீக குடும்பத்துடன் வசித்தார். பரலோகம் என்பது தேவனும், அவரது தூதர்களும் வசிக்கும் இடமாக நாம் கருதுகின்றோம். தேவன் தன் தெய்வீக குடும்பமும், பூலோக குடும்பமும் இணைந்து வசிக்க வேண்டுமென விரும்பினார், அவ்வாறே நித்தியத்தில் இருக்கும். அதினால் தான் வேதத்தின் இறுதி புஸ்தகத்தில் பரலோகம் பூமிக்கு இறங்கி வரும், மீண்டும் அந்த தோட்டத்தில் - ஏதேனில் தேவனது குடும்பம் காணப்படுமென வெளிப்படுத்தப்பட்டுள்ளது (வெளிப்படுத்தல் *21-22*).

நமது நித்திய நிலை எப்படியிருக்கும் என்பதினை அறிய, நாம் மீண்டும் அவரது இரண்டு குடும்பங்களும் சேர்ந்து வாழ்ந்த இடத்திற்கு செல்ல வேண்டும். நாம் அத்தோடத்திற்கு திரும்பி செல்ல வேண்டும்.

## அதிகாரம் மூன்று

# முன் ஒரு நாளில் மற்றும் எதிர்காலத்தின் இராஜாக்கள்

தேவனுடைய காணக்கூடாத குடும்பம் மற்றும் அவரது பரலோக ஆலோசனை கூடத்தின் நிர்வாகிகளைக் குறித்து நாம் சுருக்கமாக கற்றுக்கொண்டோம். இதனை குறித்து இன்னும் பல போதனைகள் வேதத்தில் உள்ளன. நாம் காணக்கூடாத தெய்வீக உலகில் இயேசு கிறிஸ்து மற்றும் சாத்தானின் ஈடுபாடு என்ன என்பதினை நாம் அறிதல் அவசியம். காணக்கூடாத உலகில் என்ன நடக்கின்றது என்பதினை அறியும் முன் நாம் யார் என்பதினை குறித்த தெளிவு நமக்கு அவசியம். தேவன் காணக்கூடாத உலகை எவ்வாறு நிர்வாகம் செய்கின்றார் என்பது அவர் இவ்வுலகை எவ்வாறு நிர்வகிக்கின்றார் என்பதற்கு ஒரு சான்று-அதனை இறையியலாளர்கள் தேவனுடைய ராஜ்ஜியம் என்றழைக்கின்றனர். அது ஆதியாகமத்தில் ஏதேன் என்ற தோட்டத்தில் தொடங்கியது.

## ஏதேன் - தேவனுடைய தலைமை அலுவலகம்

“ஏதேன் தோட்டம்” என்றவுடன் உங்கள் நினைவுக்கு வருவது என்ன? நான் இக்கேள்வியை பலரிடம் கேட்டபோது, அவர்கள் ஏதேன் என்றவுடன் ஆதாம், ஏவாளை நினைக்கின்றனர். மேலும் அத்தோட்டத்தில் தேவன் அவர்களை வசிக்க செய்தார் என்பதினையும் நினைவு கூருகின்றனர். (ஆதியாகமம் *2:15-25*).

ஆனால் ஏதேன் தேவனுடைய வீடு. எசேக்கியேல் தீர்க்கதரிசன புஸ்தகம் ஏதேனை “தேவனுடைய தோட்டம்” என்றழைக்கின்றது (எசேக்கியேல் *28:13; 31:8-9*). அதில் ஆச்சரிமளிக்கக்கூடிய காரியம் என்னவென்றால் ஏதேனை “தேவனுடைய தோட்டம்” என்றழைத்த எசேக்கியேல் அதனை “தேவனுடைய பரிசுத்த பர்வதம்” எனவும் சித்தரிக்கின்றார் (எசேக்கியேல் *28:14*). பழங்கால மதங்களில் ஆடம்பர தோட்டங்களும், ஒருவரும் செல்லக்கூடாத மலைகளும் தேவர்களின் வீடாக கருதப்பட்டது. அவ்விரண்டு வர்ணனைகளையும் வேதம் ஏதேனை குறிக்கும் விதம் பயன்படுத்துகின்றது. ஏதேன் தேவனுடைய வீடு, அங்கிருந்து தேவன் யாவற்றையும் நிர்வாகித்தார். அது தேவனுடைய தலைமையகம், அல்லது அவரது வீட்டு அலுவலகம்.

தேவன் எங்கேயோ, அங்கே அவருடன் அவரது ஆலோசனை சங்கமும் இருந்தது.

## தேவசாயலுடையவர்கள்

தேவனும், அவரது ஆலோசனை சங்கமும் ஏதேனில் இருந்தனர் என்பதினை குறிக்கும் ஒரு முக்கியமான வேதவசனமுண்டு. ஆதியாகமம் *1:26*’ல் தேவன், “மனிதனை நமது சாயலின்படி உருவாக்குவோம்” எனக் கூறினார். தேவன் தன் விருப்பத்தை ஒரு கூட்டத்தில் முன்மொழிகின்றார். அவர் யாரிடம் இதனை கூறுகின்றார்? தனது பரலோக சேனைகளுடன் - அவரது ஆலோசனை சங்கத்துடன். இது திரியேக தேவனுக்குள் நடக்கும் ஆலோசனையல்ல, ஏனென்றால் திரியேக தேவனுக்குள் இரகசியமில்லை. தேவன் தன் திட்டத்தை அதனை அறியாத ஒரு கூட்டத்திற்கு அறிவிக்கின்றார்.

தேவனது அறிவிப்பு புரிந்துகொள்வதற்கு எளிமையானது. அது நண்பர்களுடன் பேசுவது போன்றது, “நாம் போய் ஏதாவது சாப்பிடலாம்” அல்லது நாம் இதை செய்யலாம்! என்பது போன்றது. இதில் நாம் தவற விடக் கூடாத ஒரு காரியமுண்டு. தேவன் தன் தீர்மானத்தை நிறைவு செய்ய வேறு ஒருவரையும் தன்னுடன் இணைத்துக் கொள்ளவில்லை.

நாம் முன்னதாக சிந்தித்த பிற தெய்வீக ஆலோசனைகளைப் போல், இவ்வாலோசனையை நிறைவேற்ற தேவன் எவரையும் பயன்படுத்தவில்லை. அடுத்த வசனத்தில் (ஆதியாகமம்

*1:27)* மனிதர்கள் சிருஷ்டிக்கப்பட்ட போது தேவன் தாமாகவே அவர்களை சிருஷ்டித்தார். தேவன் ஒருவர் மாத்திரமே மனிதனை படைத்தார். ஒரு உதாரணம், நான் என் நண்பர்கள் அனைவரையும் சாப்பிட போகலாம் என்றழைத்து, நானே வாகனத்தை ஓட்டுச் சென்று, அவர்கள் சாப்பிட செலவும் செய்தால், எல்லா வேலையும் நானே செய்கின்றவனாவேன். அது தான் இங்கே நடைபெறுகின்றது.

தேவன் மாத்திரமே மனிதர்களை சிருஷ்டித்தார் என்பது முறையானது. ஏனென்றால் அவரது ஆலோசனை சங்கத்தில் இருக்கும் ஆவிகளுக்கு அதற்குரிய வல்லமையில்லை. ஆதியாகமம் *1:27'*ல் தேவன் மனிதர்களை தனது சாயலாக சிருஷ்டித்தார் என வாசிக்கின்றோம். அப்படியென்றால் *26'*ல் நமது சாயலில் என்று அவர் சொன்னது என்னவானது.

அவை இரண்டுக்குமிடையே எவ்வித வித்தியாசமுமில்லை. ஆதியாகமம் *1:26,27'*ல் பயன்படுத்தப்பட்டுள்ள "நமது சாயல்" மற்றும் "தனது சாயல்" என்ற பதங்கள் கூறுவது தேவனுடைய சாயலிலும், அவரது ஆவிக்குரிய ஜீவராசிகளின் சாயலிலும் மனிதர்களுக்கு பங்குண்டு. நாம் தேவனுடைய சாயலில் மட்டுமல்ல, அவரது ஆலோசனை சங்கத்தில் இடம்பெறும் ஆவிகளுடைய சாயலிலும் சிருஷ்டிக்கப்பட்டுள்ளோம்.

அவர்களுக்கும், மனிதர்களுக்கும் இருக்கும் பொதுவான இயல்பையே "தேவனுடைய சாயல்" என்று வேதம் அழைக்கின்றது. ஆதியாகமம் *1:26* சொல்வது தேவன் மனிதர்களை தனது சாயலாக சிருஷ்டித்தார். மனிதன் என்பவன் தேவனுடைய சாயல் (பிரதிபலிப்பு). அதின் அர்த்தம், நாம் தேவனுடைய பிரதிநிதிகள்.

தேவனுடைய சாயல் என்பது தேவன் தனது ஆற்றல்களை மனிதனுக்கு கொடுப்பதல்ல, உதாரணமாக சிந்திக்கும் ஆற்றல். ஏனென்றால் ஆற்றல்கள் இழக்கக் கூடியவை. ஆனால் தேவனுடைய சாயலை மனிதன் ஒருப்போதும் இழப்பதில்லை. மனிதர்களாக இருப்பதே தேவனுடைய சாயல், பிறப்பு முதல் இறப்பு வரை மனிதன் தேவசாயலாக இருக்கின்றான். அதினால் தான் மனித உயிர் மதிப்புள்ளது.

நாம் எவ்வாறு தேவனை பிரதிபலிக்கின்றோம்? முந்தைய அதிகாரத்தில் தேவன் தனது அதிகாரத்தை பரலோகத்திலுள்ள ஆவிகளுடன் பகிர்ந்து கொள்கின்றார் என்று வாசித்தோம். பூமியில் வாழும் மனிதர்களுடனும் தேவன் தன் அதிகாரத்தை பகிர்ந்து கொள்கின்றார். தேவனே காணக்கூடியவைகளுக்கும், காணக்கூடாதவைகளுக்கும் இராஜா. இராஜாவாகிய தேவன் ஆவிக்குரிய உலகிலும், பூமியிலும் தன் அதிகாரத்தை தன் குடும்பத்துடன் பகிர்ந்து கொள்கின்றார். தேவன் இவ்வுலகம் எவ்வாறு இருக்க வேண்டுமென விரும்புகின்றாரோ அதனை அவ்வாறு மாற்றி, அவருடன் இணைந்து அதனை நாம் அனுபவிக்க வேண்டும்.

நாம் தேவனது விருப்பத்தை எவ்வாறு செயல்படுத்த முடியுமென தேவன் நமக்கு காண்பித்துள்ளார். இயேசுவே தேவனை பிரதிபலிக்கும் சிறந்த எடுத்துக்காட்டு. அவர் அதரிசனமான தேவனின் தற்சுரூபம் (கொலோசியர் *1:15*) மற்றும் தேவனின் முழுமையான வெளிப்பாடு (எபிரெயர் *1:3*). எனவே தான் நாம் இயேசுவை பின்பற்ற வேண்டும் (ரோமர் *8:29*; 2 கொரிந்தியர் *3:18*).

## இரண்டு ஆலோசனை சங்கத்தினர்களின் ஒரே முடிவு

நான் கூறுவதை நீங்கள் சரியாக பின்பற்றுகீறிர்கள் என நம்புகின்றேன். மனிதர்கள் தேவனுடைய நிர்வாகிகள் - பூமியில் அவரது ஆலோசகர்கள். நாம் தேவனுடனும், அவரது தெய்வீக குடும்பத்துடன் இணைந்து வாழும்படி சிருஷ்டிக்கப்பட்டவர்கள். நாம் அவரில் களிகூர்ந்து, அவரை என்றென்றைக்கும் சேவிக்க வேண்டும். தேவன் ஆதியில் மனிதனை படைத்தபோது பூமிக்குரிய ஏதேனில் மனிதன் தேவனுடனும், அவரது தெய்வீக குடும்பத்தினருடன் இணைந்து வாழ்ந்திருக்க வேண்டும். ஏதேனில் பரலோகமும், பூலோகமும் ஒன்றை ஒன்று சந்தித்தன. தேவனும், அவரது ஆலோசகர்களும், ஒரே இடத்தில் மனிதனுடன் ஏதேனில் வசித்தனர்.

அதின் விளைவு என்ன?

தேவன் ஆதாம் மற்றும் ஏவாளிடம் கூறியது, "நீங்கள் பலுகி, பெருகி பூமியை நிரப்புங்கள், அதில் காணப்படும் யாவற்றையும் ஆண்டுக் கொள்ளுங்கள்" (ஆதியாகமம் 1:28). தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் செய்ய வேண்டியது இதுவே. அவர்கள் இராஜாவாகிய தேவனுடைய நிர்வாகிகளாக செயல்பட வேண்டும். மனிதர்களின் கடமை அவர்கள் வாழும் பூமியை கர்த்தருடைய தோட்டமாகிய ஏதேனை போல் மாற்றுவதே- தேவனுடைய இராஜ்ஜியமாக மாற்றுவதே. அது ஆதாம், ஏவாள் என்ற இரண்டு நபர்களைக் கொண்டு சாத்தியமாகாது. எனவே தான் அவர்களை பிள்ளைகளை பெற்றுக்கொள்ளும்படி தேவன் கட்டளையிட்டார்.

நாம் அறிந்தவாறு ஆதாமும், ஏவாளும் அவர்களது சந்ததியும் அதில் தோல்வியுற்றனர். அவர்கள் தோல்வியுறாமல் இருந்திருந்தால் உலகம் முழுவதும் ஏதேனைப் போல் மாற்றப்பட்டிருக்கும். முழுநிறைவான உலகில் மனிதன் தேவனுடனும், அவரது தெய்வீக குடும்பத்துடனும் நித்தியமாக வாழ்ந்திருப்பான்.

தேவன் மனிதகுலத்தை நேசித்தார், எனவே ஆதாமையும், ஏவாளையும் அவர் மன்னித்தார். ஆனால் அவர்களுக்கு பின் அவர்களிலிருந்து தோன்றிய மனிதகுலம் அனைத்தும் அவர்களைப் போல் பாவத்தில் சிக்குண்டது. தேவன் மனித வரலாற்றில் இடைபடாவிட்டால் நாம் அனைவரும் பாவத்தில் மரித்திருக்க வேண்டும் (ரோமர் 6:23). நாம் அழியக்கூடியவர்கள், பாவிகள். நமக்கு இரட்சிப்பு அவசியம்.

நாம் தேவனது தெய்வீக குடுமபத்தில் இணைந்து அவருடன் ஒன்றாக வாழ தே வன் விருப்பமுள்ளவராக இருக்கின்றார் என்பது வேதத்தின் சில ஆச்சரியமூட்டும் காரியங்களை புரிந்துகொள்ள உதவுகிறது.

நாம் எதினால் "தேவனுடய புத்திரர்" அல்லது "தேவனுடைய பிள்ளைகள்" (யோவான் 1:! 2; 11:52; கலாத்தியர் 3:26; 1 யோவான் 3:1-3) என வேதத்தில் அழைக்கபடுகின்றோம் என்று விளங்குகின்றது. ஏன் விசுவாசிகள் தேவனுடைய குடும்பத்தில் "புத்திரர்களாக தத்தெடுக்கப்படுகிறார்கள்" (கலாத்தியர் 4:5-6; ரோமர் 8:14-16) என்று புரிகின்றது. நாம் ஏன் தேவனுடைய இராஜ்ஜியத்தில் "உடன் சுதந்திரர்கள்" (கலாத்தியர் 4:7; தீத்து 3:7; யாக்கோபு 2:5) மற்றும் "அவரது திவ்விய சுவாபத்தின் பங்காளிகள்" (2 பேதுரு 1:4; 1 யோவான் 3:2) என்பது புரிகின்றது. ஏன் இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு பின் அவர் விசுவாசிகளுக்கு "தேவனுடைய இராஜ்ஜியத்தில் ஜீவவிருச்சத்தின் கனியை புசிக்க கொடுப்பார்" என்பது புரிகின்றது (வெளிப்படுத்தல் 2:7). நாம் அவருடன் இணைந்து ஆட்சி செய்வோம் என்பது புரிகின்றது (வெளிப்படுத்தல் 3:21). நாம் ஏதேனின் வாழ்வை நோக்கி முன்னே செல்கின்றோம். பரலோகம் மீண்டும் பூமிக்கு இறங்கி வரும்.

நாம் நமது மரணத்திற்கு பின் புதிய ஏதேனில் ஆட்சி செய்யப்போகின்றோம். ஆதாமும், ஏவாளும் எதனை செய்யும்படி படைக்கப்பட்டார்களே அதனையே நாம் மகிழ்வுடன் செய்வோம். நித்திய வாழ்வு என்பது இசை கருவிகளை ஓயாமல் மீட்டு, இருப்பத்தினான்கு மணிநேரமும் பாடல்கள் பாடுவதல்ல. அது தேவனது புதிய பூமியை, அதின் வியக்கதக்க முழுமையுடன் தேவனோடும், உயிர்தெழுந்த இயேசுவோடும், நம் சக சாயலுடையவர்களோடும், மற்றும் தெய்வீக ஆவிகளுடன் இணைந்து சுதந்தரித்து ஆளுவதே.

## இதின் முக்கியத்துவம் என்ன

இதினால் என்ன பயன் என்று நாம் சிந்திகலாம், ஆனால் நம் வாழ்வை மாற்றக்கூடிய பல கருத்துக்கள் இதில் அடங்கியுள்ளன. நாம் தேவனுடைய பிரதிநிதிகள், அவரது எதிர்கால திட்டத்தின் பங்காளிகள் என்பது நமது தினசரி வாழ்க்கையை மாற்றக்கூடியது.

முழு உலகையும் ஏதேனைப் போல் மாற்றுவதே தேவனது திட்டம். தேவன் மனிதர்களுடன் இணைந்து தனது நல்லாட்சியை உலகம் முழுவதும் செயல்படுத்த விரும்புகின்றார். ஆதாமையும், ஏவாளையும் பிள்ளைகள் பெற்றுக்கொண்டு உலகின் தேவர்களாகவும் (எஜமான்களாக) மற்றும் நிர்வாகிகளாகவும் மாற வேண்டுமென தேவன் விரும்பினார் (ஆதியாகமம் *1:26-28*). அத்திட்டம் அவர்களின் வீழ்ச்சி பின்னர் மாற்றப்படவில்லை. நோவாவின் காலத்தில் ஏற்பட்ட பெருவெள்ளத்திற்கு பின்னரும் மீண்டும் ஒருமுறை தேவனால் அது வழியுறுத்தப்பட்டது (ஆதியாகமம் *8:17; 9:1*). ஏதேன் தொலைந்து போனாலும், தேவன் மீண்டும் அதினை மீட்டெடுப்பார். இயேசு கிறிஸ்து மீண்டும் வந்த பின்னர் தோற்றுவிக்கப்படப் போகும் புதிய வானம், புதிய பூமியில் தேவன் தன் இராஜ்ஜியத்தை முழுமையாக செயல்படுத்துவார் (வெளிப்படுத்தல் *21,22*). அது பல வகைகளில் ஏதேனைப் போல் தோற்றமளிக்கின்றது. அது நிறைவேறும் வரை நாம் சந்திக்கும் அனைவரிடமும் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிக்க வேண்டும். பூமியில் தேவனது இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கும் தேவனுடைய பிரதிநிதிகள் நாம். இயேசு கிறிஸ்து தேவராஜ்ஜியத்தை முழுவதுமாக கொண்டுவரும் வரை நாம் தேவனுடைய இராஜ்ஜியத்தை அவரது சுவிசேஷத்தின் மூலம் உலகில் பரவ செய்ய வேண்டும்.

நாம் தேவனுடைய சாயலுடையவர்கள், அவரது பிரதிநிதிகள் என்ற சிந்தையுடையவர்களாக இருப்போமானால் - நாம் எடுக்கும் தீர்மானங்களும் முக்கியமானவை என்பதை உணர்வோம். இயேசுவை விசுவாசிக்கும் கிறிஸ்தவர்கள் பாவத்தில் தொலைந்து போனவர்களல்ல, அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையால் தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றும் திறனுடையவர்கள். வாழ்வின் முழுமையை மனிதர்கள் எவ்வாறு அனுபவிக்க முடியும் என சுவிஷேசத்தின் மூலம் எல்லா மனிதருக்கும் சொல்ல கடமைப்பட்டவர்கள். மனிதர்களாகிய நாம் தேவனுடன் இணைந்து வாழ்வது என்றால் என்ன அல்லது தேவனற்ற வாழ்வு என்றால் என்ன என்பதினை பிரதிபலிப்பவர்கள். இதற்கு இடைபட்டது என்று ஒன்றுமில்லை.

எல்லா மனிதரும் தேவனுடைய சாயலுடையவர்கள் என்பது, மனித உயிரின் மகத்துவத்தை நமக்கு உணர்த்த வேண்டும். நாம் ஒருவரை ஒருவர் எவ்வாறு பார்க்கின்றோம், அவர்களிடம் எவ்வாறு தொடர்புகொள்கின்றோம் என்பதினையும் இது மாற்றியமைக்கும். மனிதர்கள் மத்தியில் பாகுபாடுகள் இருக்கக்கூடாது. அநீதி ஒருப்போதும் தேவனை பிரதிபலிப்பதில்லை. விட்டிலோ, நாம் வேலை பார்க்கும் இடத்திலோ, அல்லது அரசாங்க அலுவல்களிலோ நம் அதிகாரத்தை தவறாக பயன்படுத்து தெய்வ்பக்திக்கு எதிரானது. தேவன் ஏதேனில் தன் சாயலை தரித்தவர்களை இழிவாக நடத்தவில்லை, எனவே தேவனுடைய பிள்ளைகளின் வாழ்வில் அது காணப்படக் கூடாது.

இறுதியாக, தேவனை கனப்படுத்தும் எல்லா தொழிலும் ஒரு ஆவிக்குரிய அழைப்பே. நாம் செய்யும் எந்த நேர்மையான பணியும், நமது உலகை ஏதேனுக்கு நேராக நடத்தி சென்று நம் சக சாயலுடையவர்களுக்கு ஆசீர்வாதத்தை கொண்டு வரும் ஆற்றலுடையது. தேவன் ஊழியக்காரர்களை அவர்கள் ஊழியத்தின் நிமித்தம் பரிசுத்ததில் மிகுதியானவர்களாக கருதுவதல்ல. நாம் அனைவரும் தேவன் நம்மை வைத்த இடத்தில் அவரை எவ்வாறு பிரதிபலிக்கின்றோம் என்பதில் தேவன் கரிசனையுள்ளவர். நாம் இருளுக்கு எதிர்த்து நின்று, தேவன் விரும்புகின்ற வாழ்விற்கு நேராக மனிதர்களை வழிநடத்துபவர்கள் அல்லது இருளுக்கு துணை போகின்றவர்கள். அவ்வாறு ஒளியை பரப்பும் வாய்ப்பு எல்லா கிறிஸ்தவர்களுக்குற்கும் அருளப்பட்டுள்ளது, அதனை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தேவன் ஒரு மகத்தான திட்டத்துடன் ஏதேனை படைத்தார், ஆனால் அது வேகமாக மறைந்தது. தேவன் ஒருவரே முழுநிறைவானாவர். முழுநிறைவற்ற ஜீவராசிகளுக்கு கொடுக்கப்படும் சுதந்திரம் கொடூரமான முடிவுகளை சந்திக்க நேரிடும் என்பது இதின் மூலம் அறியப்படுகின்றது.

# அதிகாரம் நான்கு

# தெய்வீக மீறுதல்கள்

கடந்த அதிகாரத்தின் முடிவில் முழுநிறைவற்ற ஜீவராசிகளுக்கு (மனிதர்களானலும் அல்லது தேவர்களானலும்) கொடுக்கப்படும் சுதந்திரம் கொடூரமான விளைவுகளை பிறப்பிக்கும் எனக் குறிப்பிட்டேன். வேதாகமத்தின் முதல் சில அதிகாரங்களில் காணப்படும் சில நிகழ்வுகள் மேலே கூறிய கருத்தை உறுதிப்படுத்தும்.

தேவன் தன் அதிகாரத்தை பரலோகத்திலுள்ள ஆவிகளுடனும் மற்றும் பூமியிலுள்ள மனிதர்களுடனும் பகிர்ந்து கொள்ள தீர்மானித்தார். தேவன் தனது சாயலில் மனிதனை உருவாக்கினார். தேவன் "நமது சாயலில் மனிதனை உருவாக்குவோம்" (ஆதியாகமம் *1:26)* என்பதின் பொருள் அதுவே. ஆவிக்குரிய ஜீவராசிகளும், மனிதர்களும் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டவர்கள். அவரது அதிகாரத்தின் பங்காளிகள், தேவனை பிரதிபலிக்கும் அவரின் உடன்-ஆளுனர்கள்.

தேவன் அவர்களை தனது சாயலில் படைத்து, தன் அதிகாரத்தை பகிர்ந்து கொண்டதற்கு இரண்டு பரிமானங்கள் உண்டு. ஒருபுறம், அது ஒரு உன்னதமான தீர்மானம். தேவனைப் போல் இருப்பதின் முதல் பரிமானம், சுதந்திரம். சுதந்திரமில்லாமல் மனிதர்கள் தேவனைப் போலிருப்பது சாத்தியமற்றது. சுதந்திரமில்லாமல் அன்பு, தியாகம் போன்றவை இல்லை. சுதந்திரமில்லாமல் அன்பு செலுத்தும்படி தீர்மானம் எடுக்க முடியாது. சுய சித்தமில்லாமல் நாம் அன்பு செலுத்துகிறவர்களாக மாத்திரம் படைக்கப்பட்டிருந்தால் இயந்திரங்களைப் போல் இருந்திருப்போம். ஸ்டார் வார்ஸ் என்ற திரைபட வரிசையில் ஒரு படத்தை நான் நினைவு கூறுகின்றேன், தி ரீடன் அப் தி ஜெடி. அதில் வரும் ஆவியாகிய ஒபிவான் கேனோபி என்ற கதாபாத்திரம் தன் தகப்பனாகிய லூக்காவை பார்த்து, டார்த் வாடெர் என்ற கதாபாத்திரத்தை குறித்து கூறுவது, "அவன் ஒரு மனிதனல்ல ஒரு இயந்திரம்." இருப்பீனும் அக்கதையின் முடிவில், அது உண்மையல்ல என நாம் கண்டறியலாம். டார்த் வாடெர் தன் உயிரை விலையாக கொடுத்து இராஜாவாகிய லூக்காவை காப்பாற்றுவான். அவன் ஒரு சதாரண இயந்திரமாக அக்கதையில் தோன்றவில்லை. தனது இருதயத்திலிருந்து, தன் சுய சித்தத்துடன் தீர்மானம் எடுக்கக்கூடிய ஒருவனாக இடம் பெறுகின்றான். சுயமாய் சிந்தித்து தீர்மானம் எடுக்க முடியாத பட்சத்தில் மனிதன் ஒரு இயந்திரத்தைப் போல் இயங்குவான். எனவே தேவன் மனிதனை முழு சுதந்திரமுடையவனாய் அவரது சாயலில் சிருஷ்டித்தார்.

ஆனால் தேவன் மனிதர்களை அவ்வாறு உருவாக்கியதில் ஒரு ஆபத்தான பரிமானமும் உண்டு. புத்தியுள்ள ஜீவராசிகளுக்கு சுதந்திரத்தை அளித்தால் அவர்கள் தவறான தீர்மானங்கள் எடுக்க கூடும், அவர்களது சித்தத்தை கீழ்படியாமைக்கும் பயன்படுத்த முடியும். தேவன் ஒருவரே பரிபூரணமானவராதலால், அவரைத் தவிர பிற ஜீவராசிகளுக்கு சுதந்திரம் கொடுக்கப்பட்டால் அது தவறாக பயன்படுத்தப்படுவது இயல்பானதே. அதுவே ஏதேனில் தவறு நடப்பதற்கு காரணம்.

## ஏதேனில் பாவம்

ஏதேன் எப்படிப்பட்ட இடமாக இருந்தது என சிந்திப்போம். ஆதாமும், ஏவாளும் அங்கே தனியாக வசிக்கவில்லை. தேவனும் அவரது தெய்வீக குடும்பமும் ஆதாம் ஏவாளுடன் ஏதேனில் வசித்தனர். ஏதேன் என்பது மனிதர்களும், தேவர்களும் ஒன்றிணைந்து பூமியை ஆளும் தலைமை அலுவலகமாக செயல்பட்டது (ஆதியாகமம் *1:26-28*). ஏதேனின் வாழ்வை பூமி முழுவதும் பரவ செய்யும் அலுவலகம் அது. ஆனால் அங்கு தேவனுடைய ஆலோசனை சங்கத்தினை சேர்ந்த ஒரு நபர் மட்டும் மகிழ்ச்சியாக காணப்படவில்லை.

ஆதியாகமம் ஒன்றில் கூறப்பட்டது போல் மூன்றாம் அதிகாரத்திலும் ஏதேனில் பிற தெய்வீக ஜீவராசிகளும் வசித்தது உறுதியாகின்றது. "மனிதன் நம்மில் ஒருவரைப் போல்

நன்மை தீமை அறியதக்கவனானான்" என்று தேவன் கூறியது "நமது சாயலில்" என்று ஆதியாகமம் *1:26'*ல் தேவன் கூறிய வார்த்தைகளுக்கு இணையானது.

ஆதியாகமம் *3'*ல் தோன்றும் சர்ப்பம் ஒரு சாதாரண பாம்பல்ல. அது விலங்கல்ல. அதனை ஒரு மிருக காட்சி சாலையில் அடைப்பதுப் போல் ஒரு கண்ணாடி கூட்டில் அடைத்து வைக்க முடியாது. அவன் ஒரு தெய்வீக ஜிவராசி. வெளிபடுத்தல் *12:9*, அவனை பிசாசு, சாத்தான் என்று அடையாளம் காண்பிக்கின்றது.

ஒரு சில கிறிஸ்தவர்கள் வெளிபடுத்தல் *12:7-12* வசனங்களை மையமாக கொண்டு தேவன் எல்லாவற்றையும் சிருஷ்டித்தப் பின்னர் தூதர்கள் மத்தியில் ஒரு மீறுதல் காணப்பட்டது எனக் கருதுகின்றனர்:

> வானத்திலே யுத்தமுண்டாயிற்று; மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம்பண்ணினார்கள்; வலுசர்ப்பமும் அதைச்சேர்ந்த தூதரும் யுத்தம்பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை.வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற்போயிற்று. உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள். (வெளிபடுத்தல் *12:7-9*)

ஆனால் பரலோகத்தில் நடக்கும் இந்த யுத்தம் மேசியாவின் பிறப்போடு சம்மந்தப்பட்டது (வெளிபடுத்தல் *12:4-5,10*):

> அதின் வால் வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றிலொருபங்கை இழுத்து, அவைகளைப் பூமியில் விழத்தள்ளிற்று; பிரசவவேதனைப்படுகிற அந்த ஸ்திரீ பிள்ளைபெற்றவுடனே, அவளுடைய பிள்ளையைப் பட்சித்துப்போடும்படிக்கு அந்த வலுசர்ப்பம் அவளுக்கு முன்பாக நின்றது. சகல ஜாதிகளையும் இருப்புக்கோலால் ஆளுகைசெய்யும் ஆண்பிள்ளையை பெற்றாள்; அவளுடைய பிள்ளை தேவனிடத்திற்கும் அவருடைய சிங்காசனத்தினிடத்திற்கும், எடுத்துக்கொள்ளப்பட்டது.
>
> அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி:
>
> இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும்
>
> நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய
>
> கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது;
>
> இரவும் பகலும் நம்முடைய தேவனுக்குமுன்பாக நம்முடைய
>
> சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன்
>
> தாழத் தள்ளப்பட்டுப்போனான்.

வெளிப்படுத்தல் *12* ஆதியில் சிருஷ்டிப்பு நடந்தவுடன் தெய்வீக ஆவிகள் மத்தியில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டது என்று கூறாமல் மாறாக மேசியா உலகில் பிறந்த சமயத்தில் ஏற்பட்ட தெய்வீக யுத்ததினை குறிக்கின்றது. ஏதேனில் நடைபெற்ற சம்பங்களுக்கு முன் தனது சாயலில் படைக்கப்பட்டவர்கள் தனக்கு விரோதமாக முரட்டாட்டம் பண்ணினார்கள் என்று தேவன் வேதத்தில் எங்கும் குறிப்பிடவில்லை. ஆதியாகமம் *3'*ல் சூழ்நிலை தலைகீழாக மாறியது. அதுவே முதல் முறை தேவனின் சாயலில் படைக்கப்பட்டவர்களின் வீழ்ச்சியை சித்தரிக்கின்றது.

சர்ப்பத்தின் குற்றம் என்னவென்றால் அவன் தேவனுடைய அதிகாரத்தை நிராகரித்தான். தேவன் ஆதாமையும், ஏவாளையும் சிருஷ்டித்தவுடன் அவர்களை தேவனுடைய குடும்பத்தில் நிர்வாகிகளாக இணைத்து கொண்டார். அவர்கள் பிள்ளைகள் பெற்று ஏதேனின் வாழ்வை பூமி முழுவதும் நிரப்பக்கூடிய திறனுடையவர்களாய் சிருஷ்டிக்கப்பட்டவர்கள். ஆனால் சத்துருவோ அதனை விரும்பவில்லை. அவன் தேவனுடைய ஸ்தானத்தில் தன்னை அமர்த்திக் கொண்டான். அவன் தனக்குதானே கூறியது, "நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்குமேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன்" (ஏசாயா 14:13).

அவன் தன்னை தேவனுக்கு நிகராக கருதியவனாக மூர்க்கத்துடன் புறப்பட்டான். தனது வஞ்சனையால் ஆதாமையும், ஏவாளையும் பாவம் செய்ய தூண்டினபடியால், அவன் தேவனுடைய வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டான் (எசேக்கியேல் 28:14-16), பூமியிலிருந்து அகற்றப்பட்டான்- "அவன் தரையிலே விழ தள்ளப்பட்டான்" (ஏசாயா 14:12) - மரணம் ஆண்டுகொள்ளும், நித்திய வாழ்வற்ற இடத்திற்கு தள்ளப்பட்டான். ஜீவனின் தேவனாயிருக்க வேண்டியவன், மரணத்தின் தேவனாக மாறினான், அவன் மனிதகுலம் அனைத்தையும் தன் பக்கம் ஈர்த்தபடியால், மனிதர்கள் சாவமையை இழந்தனர். மீண்டும் சாவமையை அடைவதற்கு மனிதகுலம் மீட்கப்பட வேண்டும்.

மனிதனின் வீழ்ச்சி பல சாபங்களை கொண்டு வந்தது. சர்ப்பத்தை தேவன் சபித்தபோது அதில் தீர்க்கதரிசனும் இடம் பெற்றது. ஏவாளின் வித்துக்கும், சர்ப்பத்தின் வித்துக்கும் பகை உண்டாகும்: "அப்பொழுது தேவனாகிய கர்த்தர் சர்பத்தை பார்த்து……… உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்" (ஆதியாகமம் 3:14-15). ஏவாளின் வித்து யார்? மனிதகுலம். சர்பத்தின் வித்து யார்? அது ஒரு பொதுவான பதம். தேவனை எதிர்க்கும் அனைவருமே பிசாசின் பிள்ளைகள். அப்போஸ்தலனாகிய யோவான் அதனை குறித்து சில உதாரணங்கள் கொடுக்கின்றார் - அவ்வித்து இயேசுவை எதிர்த்த யூதத் தலைவர்கள். இயேசு தன் ஊழியத்தை எதிர்த்த யூத மத தலைவர்களை பார்த்து சென்னது: "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்." மேலும் தன்னை காட்டிக்கொடுத்த யூதாஸை அவர் பிசாசு (யோவான் 6:70) என்றழைத்தார். எனவே தேவனுடைய திட்டத்திற்கு எதிராக செயல்படும் அனைவரும் சர்பத்தின் வித்துக்களே.

## தீய வித்து

மனிதனுடைய வீழ்ச்சியை தொடர்ந்து பூமியில் பிரச்சனைகள் அதிகரிக்க தாமதமாகவில்லை. ஆதாம், ஏவாளின் பிள்ளைகள் கொலைகாரர்களாய் மாறினர். காயீன் ஆபேலை கொன்றான், அது அவன் "பொல்லாங்கனால் உண்டானாவன்" என்பதை உறுதிபடுத்தியது. மனிதகுலம் பூமியில் பெருகியப்போது தீமையும் பெருகியது (ஆதியாகமம் 6:5).

ஆதியாகமம் 6'ல் மீண்டும் ஒரு அசாதரணமான மீறுதல் நடைபெற்றது, அதனை குறித்து நாம் ஞாயிறு ஆராதனைகளில் அதிகம் கேள்விபடாமலிருக்கலாம், ஆனால் அதின் விளைவாக தீமை பூமியில் பெருகியது. இம்முறை நடைபெற்ற மீறுதலின் நிமித்தம் தீமை மனுகுலத்தை முற்றிலும் சீர்கெடுத்தது. ஆதியாகமம் 6: 1-5 வசனங்களில் தேவகுமாரருக்கு பிறந்த மனுபுத்திரர்கள் அசாதரணமான இராட்சதகர்களாயிருந்தார்கள் என்று வாசிக்கின்றோம்.

அங்கு என்ன நடந்தது என்பதினை குறித்து ஆதியாகமம் முழுமையாக குறிப்பிடவில்லை, ஆனால் அது சம்பந்தப்பட்ட உண்மைகள் வேதத்தின் பல இடங்களிலும், யூத பாரம்பரியத்திலும் எழுதப்பட்டுள்ளது. அதனை நன்றாய் அறிந்த புதிய ஏற்பாட்டின் ஆக்கியோன்களும் தங்கள் எழுத்திகளில் அதனை பதிவு செய்தனர்.

உதாரணமாக, பேதுரும், யூதாவும் பெருவெள்ளத்திற்கு முன் பாவம் செய்த தூதர்களைக் குறித்து எழுதுகின்றனர் (2 பேதுரு 2:4-6; யூதா 5-6). அவர்கள் குறிப்பிடும் சில தகவல்கள் யூதர்களுடைய பாரம்பரிய நூல்களிலிருந்து எடுக்கப்பட்டவை. பேதுரும், யூதாவும்

தேவனுக்கு விரோதமாக பாவம் செய்த தேவகுமாரர்கள் பாதாளத்தில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர், அதாவது இறுதி நியாயதீர்ப்புகென்று கட்டப்பட்டுள்ளனர் என அவர்களை குறித்து எழுதியுள்ளனர். “தேவனுடைய நீயாயதீர்ப்பின் நாளில்” அவர்களுக்கு இறுதி தீர்ப்பு வழங்கப்படும்.

பேதுருவும், யூதாவும் முதலாம் ஏனோக்கு என்ற யூத புஸ்தகத்திலிருந்து அச்செய்தியை அறிந்தனர். அது தேவ ஆவியானவரால் அருளப்படாத ஒரு புத்தகமாயினும், அது இயேசு கிறிஸ்துவின் நாட்களிலும், ஆதி திருச்சபையின் நாட்களிலும் மிகவும் பிரபலமானது. அதில் கூறப்பட்ட சில உண்மைகள் மிகவும் முக்கியத்துவம் வாழ்ந்ததாக பேதுரும், யூதாவும் கருதினபடியால் அதனை தங்கள் எழுத்துக்களில் பதிவு செய்தனர்.

ஆதியாகமம் *6'*ல் நடைபெற்ற அசாதரணமான மீறுதலை குறித்து யூதர்களுடைய பாரம்பரியத்தில் தெளிவாக எழுதப்பட்டுள்ளது. தேவகுமாரர்கள், மனுஷகுமாரத்திகளை சேர்ந்து பிள்ளைகள் பெற்றுக்கொண்டதை யூதர்களுடைய எழுத்துக்களில் தேவகுமாரர் மனிதர்களுக்கு தெய்வீக அறிவளித்து உதவ வேண்டுமென முற்பட்டு வழிவிலகினர், அல்லது அவர்கள் தேவனைப் போலவே தங்கள் சாயலில் ஜீவராசிகளை உருவாக்க முற்பட்டனர் என கூறப்பட்டுள்ளது. மேலும் பிசாசுகள் எவ்வாறு தோன்றின என்பதினை குறித்தும் யூத பாரம்பரிய புஸ்தகங்களில் விளக்கப்பட்டுள்ளது. பிசாசுகள் என்பவை வெள்ளத்திற்கு முன் வாழ்ந்த தேவகுமாரகளுக்கும், மனுஷகுமாரத்திகளும் உண்டான இரட்சதர்களின் ஆவிகள் என யூத பாரம்பரியம் நம்புகின்றது. அவைகள் பூமி முழுவதும் சுற்றி மனிதர்களை ஆட்கொண்டு மீண்டும் சரீரம் பெற சுற்றி திரிகின்றன. ஆதியாகமத்திற்கு பின்வரும் வேத புஸ்தகங்களில் இரட்சதகர்களின் வம்சத்தில் தோன்றியவர்கள் ஏமியர் மற்றும் இரட்சதர் என்ற அழைக்கப்பட்டுள்ளனர் (எண்ணாகமம் *13:32-33*; உபாகமம் *2:10-11*). சர்ப்பம் தள்ளப்பட்ட பாதாளத்தில் பூமியின் அதிபதிகளாகிய இரட்சதகர்கள் வேதத்தில் மீண்டும் தோற்றமலிக்கின்றனர் (ஏசாயா *14:9-11*). அப்பாதாளத்தை புதிய ஏற்பாட்டின் ஆக்கியோன்கள் நரகம் என்றழைக்கின்றனர்.

யூத பாரம்பரியத்தின்படி ஆதியாகமம் *6:1-4* வசனங்களில் காணப்பட்ட ஆபத்து, தேவகுமாரர்கள் மீண்டும் ஏதேனைப் போல் ஒரு நிலை உருவாக்க முயற்சித்ததே. அவர்கள் தங்கள் முயற்சியால் தேவர்களும், மனிதர்களும் இணைந்து வாழும் இடமாக பூமியை மாற்ற நினைத்தனர். அவ்வாறு தேவனது திட்டத்தை மாற்ற முயற்சித்தது ஒரு மோசமான சுழலை கொடியதாக மாற்றியது.

ஆதியாகமம் *6:1-4* வசனங்கள் சர்பத்தின் வித்து தீவிரமாக தேவனை எதிர்த்தது என்பதினை மட்டும் பிரதிபலிக்கவில்லை, மாறாக இனி வரப்போகும் கொடுங்தீமைகளின் தொடக்கமுமாகும். மோசே மற்றும் யோசுவாவின் நாட்களில் அவர்கள் வாக்குதத்தம் பண்ணப்பட்ட பூமியை சுதந்தரிப்பதற்கு தடையாக காணப்பட்டவர்கள் இரட்சத கூட்டத்தினர் (உபாகமம் *2-3*). இந்த இரட்சத கூட்டதினருக்கு பல பெயர்களுண்டு. எண்ணாகமம் *13:32-33'*ல் அவர்கள் ஏமியர் என்றழைக்கப்பட்டுள்ளனர். ஏமியர் என்பவர்கள் ஆதியாகமம் *6:1-4*ல் குறிப்பிடபட்டது போல் தேவகுமாரர் வழியில் தோன்றிய இரட்சதர்கள். இரட்சதர்கள் என்பதினை குறிக்கும் எபிரேய பதமாகிய நெபிலீம் என்பதின் பொருள் வீழ்ந்து போனவர்கள். தாவீதின் காலம் வரை உருவத்தில் அசாதரணமான இரட்சதகர்களுடன் இஸ்ரவேலர் போராடி வந்தனர் (*1* சாமுவேல் *17*), தாவீது கோலியாத்தையும் அவன் சகோதரையும் வீழ்த்தியதின் மூலம் அப்போராட்டம் முடிவுக்கு வந்தது (*2* சாமுவேல் *21:15-22*).

## இதன் முக்கியத்துவம் என்ன

சர்பத்தின் மீது சுமத்தப்பட்ட தீர்க்கதரிசன சாபமும், அதனை தொடர்ந்து நடந்த தெய்வீக மீறுதலும் நன்மைக்கும், தீமைக்கும் இடையே ஏற்பட்ட ஆவிக்குரிய யுத்தம் என இறையியலாளர்கள் கருதுகின்றனர். தேவனுக்கும், தன் மக்களுக்கும் இடையே ஏற்பட்ட நீண்ட யுத்தம். அது காணக்கூடிய மற்றும் காணக்கூடாத இரண்டு உலகிலும் நடைபெறுகின்ற யுத்தம்.

இக்கதையின் விநோதம் என்னவென்றால் மனிதர்களின் முடிவினிமித்தம் தேவனுக்கு எதிராக ஒரு தெய்வீக சக்தி போட்டியிடுகின்றது. பூமியில் கர்த்தருடைய சித்தம் நிறைவேற பூவுலகிலும், ஆவிக்குரிய உலகிலும் எதிர்ப்பு காணப்படுகின்றது. இருப்பினும் எவ்வாறு பரலோகமும், பூமியும் சுத்தம் செய்யப்பட வேண்டுமென்று தேவன் தனக்கென்று ஒரு திட்டம் வைத்துள்ளார். தேவனுக்கு எதிராக முரட்டாட்டம் பிடிக்கும் சக்தி தண்டிக்கப்படாமல் விடபடப்போவதில்லை. மனிதகுலம் மிகவும் விலையேறப் பெற்றது. தேவன் மனிதகுலத்திற்கென்று வைத்திருக்கும் திட்டம் ஒரு நாளும் மாற்றப்படுவதோ, முறியடிக்கப்படுவதோ இல்லை.

இப்பகுதிகள் சில ஆக்கபூர்வமான பாடங்களை கற்பிக்கின்றன. தேவனுக்கு எதிரான இந்த யுத்தம் தேவன் தேவர்களையும், மனிதர்களையும் தனது சாயலில் சுதந்திரமுடையவர்களாய் படைத்ததின் விளைவு, இருப்பினும் தேவன் தீமைக்கு காரணமல்ல.

வேதத்தில் ஒருப்போதும் தேவன் தனது சாயலில் படைக்கப்பட்டவர்கள் கீழ்படியாமல் போக வேண்டும், அல்லது அவர்கள் கீழ்படியாமல் வாழ வேண்டுமென தீர்மானித்ததாக போதிக்கப்படவில்லை. தேவன் எதிர்காலத்தை முழுமையாக அறிந்திருக்கின்றார் என்பது அவர் சகல தீமையும் முன்குறித்தார் என்று பொருளல்ல. அதனை நாம் 1 சாமுவேல் 23:1-14'ல் தெளிவாக அறிந்து கொள்ளலாம். தாவீது பெலிஸ்திரோடு யுத்தம்பண்ணி கேகிலா என்ற மதில் போடப்பட்ட பட்டிணத்தை மீட்டான். அப்பொழுது தாவிது அப்பட்டிணத்தில் உள்ளான் என சவுலுக்கு அறிவிக்கப்பட்டது. சவுல் தாவீதிடம் தன் சிங்காசனத்தை இழந்து விடக் கூடும் என்ற பயத்தினால் அவனை கொல்ல முற்பட்டான். சவுலின் திட்டத்தை குறித்து கேள்விபட்ட தாவீது தேவனிடம் விண்ணப்பித்தான்:

> கேகிலா பட்டணத்தார் என்னை அவன் கையில் ஒப்புக்கொடுப்பார்களோ, உம்முடைய அடியான் கேள்விப்பட்டபடி சவுல் வருவானோ, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, இதை உம்முடைய அடியானுக்குத் தெரிவிக்கவேண்டும் என்றான். அதற்குக் கர்த்தர்: அவன் வருவான் என்றார். கேகிலாபட்டணத்தார் என்னையும் என் மனுஷரையும் சவுலின் கையில் ஒப்புக்கொடுப்பார்களோ என்று தாவீது கேட்டதற்கு கர்த்தர்: ஒப்புக்கொடுப்பார்கள் என்றார்.

கர்த்தரின் உத்தரவை பெற்ற தாவீது நாம் எதை செய்திருப்போமோ அதனையே செய்தான், தீவிரமாக அப்பட்டிணத்தை விட்டு ஓடினான். இதன் மூலம் கர்த்தர் சகலத்தையும் அறிந்திருக்கின்றார் என்பது அவர் சகலத்தையும் (தீமையை) முன்குறித்தார் என்று பொருளல்ல என்பதினை அறியலாம். தெய்வீக ஆவிகளும், மனிதர்களும் தேவனுக்கு விரோதமாக செயல்படுவர் என தேவன் முன்கூட்டியே அறிந்திருந்தார் என்பது தேவன் அவர்கள் செய்யப்போகும் தீமையை முன்குறித்தார் என்றாகாது.

ஆதாமும், ஏவாளும் வீழ்ந்துபோவார்கள் என்று தேவன் அறிந்திருந்தார். அவர்களது வீழ்ச்சியால் அவர் வியப்படையவில்லை. அவர் சகலத்தையும் அறிந்தவர், என்ன நடக்கும் மற்றும் என்ன நடக்கக் கூடும் என்பதனை அறிந்தவர். தேவன் தெய்வீக ஆவிகள் மத்தியிலும், பின்னர் அவர்கள் மூலமாய் முரடாட்டம் மனிதருக்குள்ளும் ஊடுருவும் என்பதினை முன்கூட்டியே அறிந்தது அவரே அம்முரட்டாட்டத்திற்கு காரணர் என்றாகாது.

நமது வாழ்விலும் நடைபெறும் தீமைகளை குறித்து நமக்கு இதே தெளிவு இருக்க வேண்டும். தேவன் வீழ்ச்சியை முன்பே அறிந்திருந்தபடியால் அதனை நிவிர்த்தி செய்ய ஒரு திட்டத்துடன் ஆயத்தமாகயிருந்தார். நாம் பாவிகளாய் பிறந்து, விழ்வோம் என்பது அவருக்கு தெரியும். ஆனால் அவர் நம் விழ்ச்சிகளை முன்குறிக்கவில்லை. நாம் பாவம் செய்தால், அதற்கு பொறுப்பு நாமே. நாம் நம் சுயவிருப்பத்துடன் பாவம் செய்கிறோம். தேவன் அதனை திட்டமிட்டார் அல்லது அவர் முன்குறித்தபடியால் நான் பாவம் செய்தேன் என்று ஒருவரும் சொல்ல முடியாது.

ஆனால் தேவன் நம்மீது அன்பு வைத்தபடியால் "நாம் பாவிகளாயிருக்கையில், கிறிஸ்து நமக்காக மரித்தார்" (ரோமர் 5:6-8). நாம் எப்படிபட்டவர்கள் என்பதை அறிந்திருந்தும் தேவன் நம்மீது அன்பு வைத்தார். அவர் நமக்கு அருளிய சுதந்திரம் பாவம் செய்வதற்கு மட்டுமல்ல,

நாம் அவரது சுவிஷேசத்தை விசுவாசித்து, இயேசுவுக்காக வாழும்படியாக அது கொடுக்கப்பட்டது.

தீமையான காரியங்கள் மனிதர்களுக்கு, கிறிஸ்தவர்களுக்கும் கூட நடைபெறும் என்பதை தேவன் அறிந்திருக்கின்றார், நாமும் அறிந்திருக்கிறோம். தீமை உலகில் காணப்படுவதற்கு காரணம், மனிதர்கள் தீமை செய்யக் கூடிய சுதந்திரத்துடன் இருப்பது தான். நமது தேவன் இப்பூமியில் கொடூரமான செயல்களும், பாவங்களும் நடக்க வேண்டுமென முன்குறிப்பவர் அல்ல, ஏதோ கொடூரமான பாவங்கள் விளைவிக்கபடுவதின் மூலம் ஒரு மேலான இரட்சிப்பின் திட்டம் ஸ்தாபிக்கப்படும் என திட்டமிடுபவரல்ல. தேவனுக்கு தீமை அவசியமற்றது. ஆனால் தீமையால் அவரது திட்டம் தடுத்து நிறுத்தப்படுவதில்லை, அவர் அதனை மேற்கொண்டு, இறுதியில் அதனை நியாயம்தீர்ப்பார்.

ஏன் தேவன் இப்பொழுதே தீமை முற்றிலும் அகற்றிவிடக் கூடாது என நாம் கேள்வி எழுப்பலாம். தேவன் தீமையை முற்றிலும் அகற்ற வேண்டுமென்றால், தனது சாயலில் படைக்கப்பட்ட, தன்னை போல் பூரணமற்ற மனிதர்கள் மற்றும் தேவர்களை முற்றிலும் அழிக்க வேண்டும். அது தீமையை முற்றிலும் நீக்கிவிடும், ஆனால் அது தேவன் அவர்களை படைத்ததே தவறு என்றாகிவிடும், தேவன் ஒருப்போதும் தவறு செய்பவரல்ல.

தேவன் மனிதர்களுக்கு சுதந்திரம் கொடுத்திருக்கவே கூடாது எனவும் நாம் சிந்திக்கலாம், அவ்வாறு நம்மை சுதந்திரமில்லாதவர்களாய் தேவன் படைத்திருந்தால் நாம் எப்படி இருந்திருப்போம்? தேவன் நமக்கு சுதந்திரம் அருளியபடியால், அவர் நம்மை உரிமையற்ற அடிமைகளாகவோ அல்லது இயந்திர மனிதர்களாகவோ படைக்கவில்லை. சுதந்திரமற்றவர்களாய் நாம் படைக்கப்பட்டிருந்தால் நாம் அடிமையைப் போல் அல்லது இயந்திர மனிதனைப் போல் இருந்திருப்போம், அதுவே மாற்று வழி. ஆனால் நம்மை அவர் தன்னை போல் சிருஷ்டித்தார். அது ஒரு பிழையல்ல. தேவன் மனிதகுலத்தை மிகவும் நேசித்தபடியால் அவர் அவர்களை முழு சுதந்திரத்துடன் படைத்தார். எனவே தீமையிலிருந்து மீட்கும் வழியை திட்டமிட்டார், உலகில் தீமை புகுந்தவுடன், ஏதேனை புதுபித்து, அவர்கள் கண்ணிரையெல்லாம் துடைக்க தீர்மானித்தார் (வெளிபடுத்தல் *7:17; 21:4*).

தேவன் தனக்கு எதிரான யுத்தத்தை எவ்வாறு முடிவுக்கு கொண்டு வரவேண்டுமென ஒரு திட்டம் வகுத்துள்ளார். ஆனால் அது முடிவுக்கு கொண்டு வரப்படும் முன் தீமை மிகவும் தீவிரமடையும்.

# அத்தியாயம் ஐந்து

# பிரபஞ்சத்தின் பூகோளம்

நாம் கடந்த பாடத்தில் பார்த்த தெய்வீக மீறுதல்கள் எல்லாவற்றிலும் ஒரு பொதுவான காரியம் உண்டு. அவை தேவன் மனிதனைக் குறித்து வைத்திருக்கும் திட்டத்திற்கும், அவரது ஆட்சியை மீண்டும் கொண்டு வரும் முயற்சிகளுக்கும் எதிரான அசாதரணமான போராட்டங்கள்.

தேவனுக்கு விரோதமான இப்போரட்டத்தில் நாம் அனைவரும் ஒரு சங்கடமான நிலையில் உள்ளோம், அதில் தேவர்களும் அடங்கியுள்ளனர். தேவனுக்கும், தேவர்களுக்கும் இடையேயான இந்த இமாலய பிரச்சனையை இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையே முடிவுக்கு கொண்டு வரும்.

## பாபேல் கோபுரம்

வேதாகம கதைகளில் மிகவும் பிரபலமான ஒன்று பாபேல் கோபுரத்தின் கதை (ஆதியாகமம் *11:1-9*), இருப்பினும் அது பலரால் முறையாக புரிந்துக் கொள்ளப்படவில்லை.

தேவன் ஆதாமுக்கும், ஏவாளுக்கும் பூமியை நிரப்பி ஆண்டுக் கொள்ளுங்கள் என்று கட்டளையிட்டது போல், பெருவெள்ளம் வற்றிய பின்னர் நோவாவின் குடும்பத்திற்கும் கட்டளையிட்டார். மனிதர்கள் மூலமாக தேவன் தனது ஆட்சியை பூமி முழுவதும் ஸ்தாபிக்க விரும்பினார். மனிதர்கள் அதனை எதிர்த்தனர். அவர்கள் இருதயத்தின் சிந்தனைகள் தேவனுக்கு விரோதமாக இருந்தது, தேவனைக் காட்டிலும் தங்களை புத்திசாலிகளாக எண்ணினர். அவர்கள் பூமி முழுவதும் சிதறிப் போகாதபடி வானத்தை எட்டும் ஒரு கோபுரத்தை கட்ட முயற்சித்தனர் (ஆதி. *11:4*). அக்கோபுரத்தை கட்டுவதின் மூலம் அவர்கள் மிகவும் பிரபலமாகலாம், ஆனால் அவர்கள் எவ்வாறு சிதறாமல் பாதுக்காக்கப்படுவார்கள்?

அதற்கான பதில் அக்கோபுரமே. வேத ஆராய்ச்சியாளர்களும், தொல்பொருள் நிபுணர்களும் பாபேல் பகுதியில் வாழ்ந்த பாபிலோனியர்கள் ஷிகுரட் என்ற வடிவில் கோபுரங்கள் கட்டியதை கண்டறிந்துள்ளனர் (எகிப்திய பிரமிட் போன்ற வடிவம் கொண்ட உயரமான கோபுரங்கள்). அக்கோபுரங்களை அவர்கள் கட்டியதின் நோக்கம் மனிதர்கள் அக்கோபுரங்களின் வழியாக ஏறி தேவர்களை சந்திப்பதே. அவர்களது கோவில் வளாகங்களில் அத்தகைய கோபுரங்கள் கட்டப்பட்டன. தேவனது ஆட்சியையும், அவரை குறித்த அறிவையும் உலகம் முழுவதும் பரவ செய்வதற்கு பதிலாக அவர்கள் தேவனை ஒரு இடத்திற்குள் மட்டுபடுத்த விரும்பினர்.

அது தேவனுடைய திட்டமல்ல, அதனை தேவன் விரும்பவில்லை. அவர் மீண்டும் தனது ஆலோசனை சங்கத்தாரிடம் கூறுவதை கவனியுங்கள்-"நாம் இறங்கிப்போய் அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோம்" (ஆதி. *11:7*). தேவன் ஒருவர் பேசிவதை மற்றவர்கள் புரிந்து கொள்ளாதபடி பாஷையை தாறுமாறாக்கினார், அவர்கள் சிதறிப் போனார்கள். ஆதியாகமம் *10*'ல் கொடுக்கப்பட்ட தேசங்கள் எவ்வாறு உருவாகின என இச்சமபவம் விவரிக்கின்றது.

இது பெரும்பாலான கிறிஸ்தவர்கள் அறிந்ததே, அவர்கள் அறியாதது என்னவென்று பார்ப்போம்.

## தேவர்களும், அவர்களது தேசங்களும்

பாபேல் கோபுரத்தின் கதை ஆதியாகமம் *11*'ல் மட்டும் காணப்படவில்லை, அதனை உபாகமம் *32:8-9* பின்வருமாறு விவரிக்கின்றது:

> உன்னதமானவர் ஜாதிகளுக்குச் சுதந்தரங்களைப் பங்கிட்டு, ஆதாமின் புத்திரரை வெவ்வேறாய்ப் பிரித்தகாலத்தில், இஸ்ரவேல் புத்திரருடைய தொகைக்குத்தக்கதாய், சர்வஜனங்களின் எல்லைகளைத் திட்டம்பண்ணினார். கர்த்தருடைய ஜனமே அவருடைய பங்கு; யாக்கோபு அவருடைய சுதந்தரவீதம்.

சில வேதாகம மொழிபெயர்ப்புகளில் "இஸ்ரவேல் புத்திரர்" என்ற இடத்தில் "தேவனுடைய புத்திரர்" என்று மொழிபெயக்கப்பட்டுள்ளது. ஆனால் பாபேல் கோபுரம் கட்டப்பட்ட நாட்களில் இஸ்ரவேல் இன்னும் தோன்றவில்லை. பாபேலுக்கு பின்னரே தேவன் ஆபிரகாமை அழைத்தார் (ஆதி. *12*). அவ்விடத்தில் "இஸ்ரவேல் புத்திரர்" என்ற பதத்தைக் காட்டிலும் "தேவபுத்திரர்கள்" என்ற மொழிபெயர்ப்பே உகந்தது. சவக்கடல் அருகில் கண்டெக்கப்பட்ட வேதாகம சுருள்களிலும் "தேவனுடையபுத்திரர்" என்ற பதமே இவ்வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அம்மொழிபெயர்ப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. தேவன் தேசங்களை பிரித்தபோது, அதனை தேவபுத்திரர்களுக்கு பிரித்து கொடுத்தார். தனது தெய்வீக ஆலோசனை கூடத்தில் வீற்றிருத்த தேவபுத்திரர்களுக்கு பங்காக கொடுத்தார். பிற தேசங்கள் ஏன் பிற தேவர்களை வணங்குகின்றது என்பதற்கான வேதத்தின் விளக்கம் அதுவே. பாபேலின் நாட்கள் வரை தேவன் எல்லா மனிதர்களுடன் நெருக்கமாக இருக்க விரும்பினார். ஆனால் பாபேலின் முரட்டாட்டதிற்குப் பின் தேவன் தனது ஆலோசனை சங்கத்தில் காணப்பட்ட தேவர்களிடம் தேசங்களை ஆளும் பொறுப்பினை ஒப்படைத்தார்.

பெருவெள்ளத்திற்கு பின்னரும் தேவன் விரும்பியவாறு ஏதேனைப் போல் பூமி முழுவதும் மாற்றப்பட வேண்டுமென்ற அவரது திட்டத்தினை மனிதர்கள் நிறைவேற்ற விருப்பம் காட்டவில்லை. அதினால் தேவன் மனுகுலத்தை நியாயம் தீர்த்தார். மனுகுலத்தை ஜாதிகளாக பிரித்து, அவர்கள் தேசங்களை தேவர்களுக்கு பங்காக கொடுத்தார். அப்பொழுது தனக்கென்று, தன் "பங்காக" ஒரு புதிய தேசத்தை தெரிந்துக் கொண்டார் (உபாகமம் *32:9*), அவர் தெரிந்துகொண்ட கூட்டம் தான் இஸ்ரவேல். ஆபிரகாமை அழைத்ததின் மூலம் (ஆதி. *12*) தனது திட்டத்தை செயல்படுத்த தொடங்கினார், பாபேல் கோபுரம் இடம் பெற்ற அடுத்த அதிகாரத்திலே அதனை நாம் வாசிக்கலாம்.

தேவன் பிற தேசங்களை பங்காக கொடுத்தார் என்பதே பழைய ஏற்பாட்டின் கதையை நகர்த்தி செல்கின்றது. எவ்வாறு? பழைய ஏற்பாடு முழுவதும் தேவனுக்கும், அவரது பிள்ளைகளுக்கும் பிற தேசத்தின் தேவர்களுக்கும், அதின் மக்களுக்கும் இடையே நடைபெறும் பிரச்சனைகளே.

தேவன் பாபேலின் நாட்களில் தேசங்களை நியாயம்த்தீர்த்தலும், அவைகளை கைவிடவில்லை. எனவே தான் அவர் ஆபிராகமை அழைத்தபோது தனது விருப்பத்தை தெளிவுபடுத்தினார். அவர் ஆபிரகாமிடம் கூறியது, "பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" (ஆதி. *12:3*). எல்லா தேசங்களையும் தேவன் தனது குடும்பத்தில் மீண்டும் இணைக்க விருப்புமுள்ளவராக ஆபிரகாமை அழைத்தார்.

இதனை அறிந்த பவுல், அத்தேனே பட்டிணத்தை சேர்ந்த சித்தாந்தவாதிகளிடம் பிரசங்கத்தது:

> மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்;

கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார்; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே. *(அப். 17:26-27)*

இஸ்ரவேல் மக்கள் "வானத்தின் சர்வ சேனைகளை" ஆராதிக்க கூடாது என தேவன் மோசேயின் மூலம் எச்சரித்தார் (உபாக. *4:19,20*), வானத்தின் சர்வ சேனைகள் என்பது தேவனது ஆலோசனை கூடத்தில் இடம்பெறும் தேவர்களை குறிக்கின்றது (*1* இராஜ. *22:19*). மனிதர்கள் அத்தகைய தேவர்களை சேவியாமல் தன்னை எப்படியாவது அறிய வேண்டுமென்று தேவன் விரும்புவதை அப்போஸ்தலர் *17:26-27*'ல் வாசிக்கின்றோம்.

ஆனால் தேசங்களை பங்காக பெற்றுக் கொண்ட தேவர்கள் தேவனது திட்டத்தை இரண்டு வழிகளில் தடுக்கின்றனர்.

சங்கீதம் *82:1*'ல் தேவனது ஆலோசனை சங்கத்தில் தேவர்கள் இடம் பெறுகிறார்கள் என நாம் வாசித்தோம். சங்கீதம் *82* முழுவதும் வாசிக்கப்படும் வேளையில் அதின் அர்த்தம் தெளிவாகும். தேவனது விருப்பத்திற்கும், நீதிக்கும் மாறாக தேவர்கள் தங்கள் தேசங்களை ஆண்டனர். எனவே தேவன் ஆலோசனை கூட்டம் தொடங்கியவுடன் தேவர்களை பின்வருமாறு கடிந்துக் கொண்டார்: "எதுவரைக்கும் நீங்கள் அநியாயத்தீர்ப்பு செய்து, துன்மார்க்கருக்கு முகதாட்சிணியம் பண்ணுவீர்கள்?" (சங். *82:2*). அவர்களது அநீதியை மேலும் சில வசனங்களில் கடிந்துக் கொண்ட பின் அவர்கள் எவ்வாறு மனிதர்கள் தேவனிடம் திரும்பாதபடி அவர்களை இருளில் வைத்துள்ளனர் எனக் கூறுகிறார்: "அறியாமலும் உணராமலும் இருக்கிறார்கள், அந்தகாரத்தில் நடக்கிறார்கள்; தேசத்தின் அஸ்திபாரங்களெல்லாம் அசைகிறது" (சங். *82:5*). அந்நிய தேவர்கள் துன்மார்க்கரை ஆதரித்து, மனிதர்கள் மெய்யான தேவனை அறியாதவாறு இருளை பரப்பினர்.

இஸ்ரவேலர் பரிதாபமாக உண்மையான தேவனை தேடாமல் "தங்களுக்கு பங்காக பெறாத" அந்நிய தேவர்களை வணங்கி காயமடைந்தனர் (உபாக. *29:26; 32:17*). தேவன் கோபமும், கடினமும் நிறைந்தவராய் அவர்களுக்கு உத்தரவு அருளினார் (சங் *82:6-7*): "ஆனாலும் நீங்கள் மனுஷரைப் போலச் செத்து, லோகப்பிரபுக்களில் ஒருவனைப்போல விழுந்துபோவீர்கள். தேவனே எழுந்தருளும், பூமிக்கு நியாயத்தீர்ப்புச் செய்யும்; நீரே சகல ஜாதிகளையும் சுதந்திரமாகக் கொண்டிருப்பவர்."

மனிதர்களை வஞ்சித்ததின் விளைவாக தேவர்கள் தங்கள் சாவாமையை இழந்து மனிதர்கள் போல் மரிப்பார்கள் (சங். *82:7*). இறுதி நாளில் நடைபெறும் நியாயத்தீர்ப்புகளில் இதுவும் ஒன்று என ஏசாயாவில் வாசிக்கலாம் (ஏசா. *31:1-4*). சங்கீதம் *82*'ன் முடிவில் சங்கீதக்காரன் கடைசி நாளில் தேவன் மீண்டும் தேசங்களை தன் சுதந்திரமாக மீட்பார் என்ற நம்பிக்கையுடன் முடிக்கின்றார். அவர் விரும்பியவாறே புதிய ஏற்பாட்டில் அவரது மீட்பை காணலாம்.

## உபாகமம் *32*'ல் காணப்படும் உலகப்பார்வை

உபாகமம் *32*'ம் அதிகாரத்தில் காணப்படும் உலகப் பார்வையின்படி பூமியானது ஒன்று யேகோவாவிற்கு அர்பணிக்கப்பட்டு பரிசுத்தமாக அல்லது வேறே தேவர்களின் இராஜ்ஜியமாக காணப்படுகின்றது. இக்கருத்து வேதாகமத்தின் பல பகுதிகளில் தோன்றுகிறது. உதாரணமாக தானியேலின் தீர்க்கதரிசன புஸ்தகத்தில் அந்நிய தேசங்கள் தெய்வீக "அதிபதிகளால்" ஆளப்படுவதாக கூறப்பட்டுள்ளது (தானி. *10:13, 20-21*). மற்றொரு உதாரணம் தாவீது சவுல் இராஜாவுக்கு பயந்து பெலிஸ்தியரின் இராஜ்ஜியத்தினுள் நுழைந்த போது அவன் உரைத்த வார்த்தைகளில் தென்படுகின்றது. *1* சாமுவேல் *26:19*ல், தாவீது பின்வருமாறு அழுதான், "அவர்கள்: நீ போய், அந்நிய தேவர்களைச் சேவி என்று சொல்லி, அவர்கள் இன்று என்னைக் கர்த்தருடைய சுதந்தரத்திற்கு அடுத்தவனாயிராதபடிக்கு, துரத்திவிட்டார்களே." தாவீது வேறே தெய்வங்களை சேவிக்கவில்லை. தேவன் எல்லா இடத்திலும் இருப்பவர் என்பதனையும் மறுக்கவில்லை. ஆனால் இஸ்ரவேல் தேசம் தேவனுடைய பரிசுத்த பூமி, அது தேவனுடைய சுதந்திரம். அதிலிருந்து அவன் வெளியேறிய போது, தான் அந்திய தெய்வத்தின் இராஜ்ஜியத்தில் மாட்டிக் கொண்டதாக உணர்ந்தான்.

இக்கருத்தை விளக்கும் எனக்கு பிடித்த மற்றொரு பழைய ஏற்பாட்டின் கதை 2 இராஜாக்கள் 5'ல் உள்ளது. சீரிய இராணுவத்தின் படைத்தலைவன் நாகமான். அவன் ஒரு குஷ்டரோகி. எலிசாவின் வாக்குப்படி அவன் யோர்தான் நதியிலே ஏழு முறை மூழ்கியபோது அதிசயதக்கவிதமாய் குணமடைந்தான். அப்பொழுது நாகமான் எலிசாவிடம் கூறியது, "இதோ, இஸ்ரவேலிலிருக்கிற தேவனைத்தவிர பூமியெங்கும் வேறே தேவன் இல்லை என்பதை அறிந்தேன்" *(5:15)*. நாகமான் தன் தேசத்திற்கு திரும்பிய போது இஸ்ரவேல் தேசத்திலிருந்து ஒரு கழுதையின் மேல் இரண்டு பொதி மண்ணை எடுத்து சென்றான். அவன் எதற்காக மண்ணை எடுத்து செல்ல வேண்டும்? ஏனென்றால் அது இஸ்ரவேலின் தேவனுடையது. அது பரிசுத்தமானது.

இச்சிந்தனை ஒரு விபத்தல்ல, இதனை போன்ற சிந்தனை புதிய ஏற்பாட்டிலும் காணப்படுகின்றது. பவுல் தேவனுக்கு எதிரான தெய்வீக சக்திகளை குறித்து: துரைத்தனம், அதிகாரம், வல்லமை, கர்த்தத்துவம் (எபே. *1:20-21; 3:10; 6:12;* கொலே. *1:16;2:15*) என்ற வார்த்தைகளை பயன்படுத்துகின்றார். இதில் காணப்படும் பொதுவான காரியம் என்ன? அவை அனைத்தும் தேசங்களை ஆளுபவர்களுக்கு பயன்படுத்தப்படும் பதங்கள்.

கொரிந்து பட்டிணத்தின் திருச்சபையில் நிழவிய பிரச்சனைகளுக்கு பதில் அளிக்குமாறு பவுல் இரண்டு நிருபங்களை எழுதினார். தனது முதல் நிருபத்தில் கொரிந்து திருச்சபையில் பாலியல் ரீதியான பாவத்தில் ஈடுபட்டு மனம்திரும்பாமல் வாழ்ந்த நபரை திருச்சபையிலிருந்து நீக்கும்படி அறிவுறுத்தினார் *(1* கொரி. *5:1-13)*. அந்நபரை "சாத்தானிடம் ஒப்படையுங்கள்" *(1* கொரி. *5:5)* எனக் கூறினார். அதின் பொருள் என்ன?

பழைய ஏற்பாட்டில் பூமியை குறித்து காணப்பட்ட உலகப்பார்வையே அதற்கு பதிலளிக்கும் பிண்ணனி. பழைய ஏற்பாட்டின் இறையியலின்படி, இஸ்ரவேல் யேகோவாவின் "சுதந்திரம்," அதுவே இஸ்ரவேலருக்கு அருளப்பட்ட கானான் தேசம். அவரது பிரசன்னம் அப்பூமியை பரிசுத்தமாக்கியது. முதலில் யேகோவாவின் பிரசன்னம் ஆசாரிப்பு கூடாரத்தில் இருந்தது. வானந்திரத்தில் இஸ்ரவேலர் சுற்றி திரிந்த நாட்களில் அவர்கள் தங்கும் இடத்தின் மையத்தில் உடன்படிக்கை பெட்டி வைக்கப்பட்டது, அது இஸ்ரவேலர் தங்கின இடத்தை பரிசுத்தமாக்கியது. இஸ்ரவேலர் கானான் தேசத்தை சுதந்தரித்தப் பின்னர் தேவனது பிரசன்னம் தேவாலயத்தில் தங்கி, அத்தேசத்தை தேவனின் வீடாகவும், பரிசுத்தமாகவும் மாற்றியது. இப்பொழுது யேகோவாவின் பிரசன்னம் விசுவாசிகளில் வாசம் செய்கின்றது-நாம் தேவனுடைய ஆலயமாயிருக்கின்றோம் *(1* கொரி. *6:19; 2* கொரி. *6:16;* ரோ. *8:9*). அதின் பொருள் கிறிஸ்துவின் சரீரமாகிய விசுவாசிகள், தேவனின் புதிய ஜனம், புதிய இஸ்ரவேல். அதனை பவுல் கலாத்தியர் *3*'ல் பின்வருமாறு விளக்குகின்றார்:

> ஆகையால் விசுவாசமார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக.
>
> நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக, ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள். நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயுமிருக்கிறீர்கள். (கலா. *3:7, 26-29*).

விசுவாசிகளும், அவர்கள் கூடிய இடமும் பரிசுத்தமுள்ளதானபடியால், அவர்கள் மத்தியிலிருந்து பாவம் நீக்கப்பட வேண்டும். பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலுக்கு புறம்பே இருந்த இடங்கள் பரிசுத்தமற்ற பூமியாக கருதப்பட்டதுப் போல்- இப்பொழுது - இவ்வுலகமும் பரிசுத்தமில்லாத இடம். எனவே தான் விசுவாசிகளின் ஐக்கியத்திலிருந்து, சாத்தானின் இராஜ்ஜியமாகிய உலகத்தில் பாவம் செய்து வந்த நபரை விட்டுவிடும்படி பவுல் அறிவுறுத்தினார். திருச்சபையிலிருந்து ஒரு விசுவாசி நீக்கபடுவது அவனை மீண்டும்

பரிசுத்தமற்ற இராஜ்ஜியத்திற்கு அனுப்புவது. அதுவே பாவம் வாசம் செய்ய வேண்டிய இடம்.

## இது ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது

பாபேலுக்கு பின் தேவன் பூமியின் இராஜ்ஜியங்களை நியாயம்த்திர்த்ததே பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலின் போராட்டத்தின் பிண்ணனி. அன்று முதல் தேவனது சுதந்திரமான அவரது பிள்ளைகளுக்கும், தேவர்கள் சுதந்திரமாக பெற்ற இராஜ்ஜியங்களின் பிள்ளைகளுக்கும் இடையே யுத்தம் தொடங்கியது. அத்தகைய யுத்தம் சுவிசேஷத்திற்கான வாய்ப்பினையும் உருவாக்கியது. பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் தேவனுடைய சுதந்திரம். ஆனால் இயேசு கிறிஸ்து சிலுவையில் மனிதர்களை மீட்க மரித்ததில் உள்ள நற்செய்தி என்னவென்றால், இனி யூதர்கள் மட்டுமல்ல இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் அனைவரும் தேவனுடைய பிள்ளைகளே (கலா. 3). இயேசுவின் சீஷர்கள் உலகத்தினுள் செல்லும்போது, சாத்தானின் இராஜ்ஜியம் தேவனுடைய எல்லையாக மறுரூபமாக்கப்படுகின்றது. தேவனுடைய இராஜ்ஜியம் பெருகி, மீண்டும் தேசங்கள் அவரது ஆளுகைக்குள் கொண்டு வரப்படுகின்றது.

நாம் கற்றுக்கொள்ளும் பாடம் இந்த பூமி நம் வீடல்ல. நம் பிரபஞ்சத்தை இருள் சூழ்ந்துள்ளது. அவிசுவாசிகள் ஆவிக்குரிய வல்லமைகளின் அதிகாரத்தின் பிடியில் பிணை கைதிகளாகயுள்ளனர். அவர்கள் விடுவிக்கப்படுவதற்கு இயேசுவின் சுவிஷேசம் அவர்கள் மத்தியில் அறிவிக்கப்படுவது அவசியம். மறந்துவீடாதீர்கள்: சுவிசேஷமே நம் ஆயுதம். துரைத்தனங்களையும், வல்லமைகளையும் நேரடியாக கடிந்து கொள்ளும் அதிகாரம் நமக்கு அருளப்படவில்லை. ஆனால் தேவனுடைய சுவிஷேத்தை உத்தமமாய் அறிவிப்பதினால் அவற்றின் ஆளுகையை நாம் விரட்டலாம். பின்வரும் அத்தியாயங்களில் நாம் அதனை குறித்து அதிகம் கற்றுக் கொள்ளலாம்.

மற்றுமொரு பாடம்: விசுவாசிகள் கூடி வரும் ஒவ்வொரு திருச்சபையும் பரிசுத்த பூமியாக பார்க்கபட வேண்டும். கட்டிடத்தின் அளவு, தோற்றம், விசுவாசிகளின் எண்ணிக்கை இவை எல்லாம் தேவன் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. எங்கே இரண்டு அல்லது மூன்று பேர் கூடி வருகிறார்களோ அங்கே இயேசு பிரசன்னமாவார் (மத். 18:20). அது பரிசுத்தமான இடம். எல்லா திருச்சபைகளும், சிறிதானாலும் அல்லது பெரிதானாலும் ஆவீக்குரிய யுத்தத்தின் முண்ணனில் உள்ளது. எல்லா திருச்சபையின் கடமையும் ஒன்றே. இருளின் அதிகாரத்தை சுவிசேஷத்தினால் முறியடிப்பது. இருளானது அதனை மேற்கொள்ள முடியாது.

இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தை குறித்து படிக்கும் போது நாம் மீண்டும் பிரபஞ்சத்தின் பூகோளத்தை குறித்து சிந்திக்கலாம். தற்போது யூத்தத்தின் எல்லைகள் குறிக்கப்பட்டுள்ளது என்பதை அறிவோம். பூமியின் தேசங்கள் தேவனால் நியாயதிர்க்கப்பட்டு அவரது இராஜ்ஜியத்திற்கு அப்பாற்பட்டுள்ளது. தனது எல்லையை தேவன் விரிவாக்கி, மனிதர்களை தேவன் தன் பங்காக மீட்கும் நேரமிது. அதனை மனிதர்களாகிய நம் மூலமாக அவர் செயல்படுத்துகின்றார்.

## அதிகாரம் ஆறு

# வார்த்தை, நாமம், மற்றும் தூதன்

பிரபஞ்சத்தின் பூகோளத்தை குறித்து வேதம் என்ன சொல்கின்றது என கடைசி அதிகாரத்தில் கற்றுக் கொண்டோம். மனிதர்கள் தேவனுக்கு விரோதமாக பாபேலில் முரட்டாட்டம் செய்தபடியால் தேவன் தேசங்களை தள்ளிவிட்டார். தனது ஆலோசனை சங்கத்தின் தேவர்களான தேவபுத்திரருக்கு தேசங்களை பங்காக கொடுத்தார் (உபாக. *32: 8-9*). தான் தள்ளிவிட்ட தேசங்களுக்கு பதிலாக ஒரு புதிய மக்களை, ஒரு தேசத்தை தனக்காக உருவாக்கினார். அவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தை பூமியில் மீண்டும் உருவாக்கும் தேவனது பிரதிநிதிகள். அது மிக கடினமான ஒரு பொறுப்பு, அதினிமித்தம் அந்நிய தேவர்களும், அவர்களது இராஜ்ஜியத்தில் வசிக்கும் மனிதர்களும், இஸ்ரவேலுக்கும், அதின் தேவனுக்கும் எதிராக வீரியத்துடன் போராடுவார்கள்.

தேவனது புதிய ஜனம் அபிராம் என்ற பெயர் கொண்ட ஒரு மனிதன் வழியாக தோன்றும், அவனது பெயர் பின்னர் ஆபிரகாம் என்று மாற்றப்படும். பாபேலை நியாயம்த்தீர்த்தவுடன் தேவன் அவனை சந்தித்தார்.

### ஆபிரகாம் வார்த்தையானவரை சந்தித்தான்

ஆதியாகமம் *12'*ல் தேவன் ஆபிரகாமை அழைத்தார். தேவன் ஆபிரகாமை தன் சொந்த வீட்டையும், நாட்டையும் விட்டு அவர் அவனுக்கு காண்பிக்க போகும், அவன் கண் கண்டிராத புதிய தேசத்திற்கு போகும்படி கட்டளையிட்டார். அபிரகாமை வழிநடத்துவேன் என்று அவனுக்கு தேவன் வாக்களித்தார். அவர் ஆபிரகாமின் தேவனாயிருந்து, அவனுக்கு சிறப்பான உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களை வாக்களித்தார். ஆபிரகாமும், சாராளும் வயது சென்றவர்களாய் இருந்தாலும், அவர்களுக்கு ஒரு மகனை அருள்வதாக வாக்களித்தார். அவனிலிருந்து ஒரு மக்கள் கூட்டம் உருவாகி, பூமியில் தேவனது புதிய குடும்பம் ஸ்தாபிக்கப்படும். அவர்கள் மூலமாக தேசங்கள் ஆசீவதிக்கப்படும்.

ஆபிரகாமுடன் தேவன் வானத்திலிருந்து ஒரு சத்தத்தின் மூலம் பேசினார், அல்லது அவனது கனவில் பேசினார் அல்லது அவன் இருதயத்தில் பேசினார் என நாம் கற்பனை செய்யலாம். தேவன் தன் தீர்க்கதரிசிகளுடனும் அல்லது தனது தாசர்களுடனும் அம்முறைகளை பயன்படுத்தினார் என வேதாகமம் திட்டமாக கூறுகின்றது. ஆனால் ஆபிரகாமுடன் அவர் அவ்வாறு பேசவில்லை. அவர் சற்று வித்தியசமாக ஆபிரகாமுடன் உரையாடினார். அவர் மனிதனாக தோன்றினார். தேவனும், ஆபிரகாமும் முகமுகமாய் பேசினர்.

ஆதியாகமம் *12:6-7'*ல் தேவன் ஆபிரகாமுக்கு தரிசமானார் என வேதம் கூறுகின்றது. மூன்று அதிகாரங்களுக்கு பின் தேவன் மீண்டும் ஆபிரகாமுக்கு தரிசனமானார் (ஆதி. *15:1-6*). இம்முறை கர்த்தர் “தேவனின் வார்த்தையானவராக” அவனுக்கு தரிசனத்தில் தோன்றினார். அது ஒரு சத்தமல்ல, ஏனென்றால் அவனது தரிசனத்தில் தோன்றிய “வார்த்தையானவர்” ஆபிரகாமை அவனது கூடாரத்திற்கு வெளியே அழைத்து வந்து வானத்து நட்சத்திரங்களைப் போல் உன் சந்ததியை பெருகப் பண்ணுவேன் என்று கூறினார் (ஆதி, *15:5*).

பிற இடங்களில் தேவன் ஆபிரகாமுக்கு ஒரு மனிதனைப் போல் தோற்றமளித்தார் (ஆதி. *18*). அவர் ஆபிரகாமுக்கு வாக்களித்த குமாரனான ஈசாக்குக்கும் அவ்வாறே தோன்றினார் (ஆதி. *26:1-5*), பின்னர் ஈசாக்கின் மகனாகிய யாக்கோபுக்கும் அவர் மனிதனாக காட்சியளித்தார் (ஆதி. *28:10-22; 31:11-12; 32:24-30*).

மனிதனாய் தோற்றமளித்த வார்த்தையானவர், எதிர்பாராத நேரங்களில் வேதத்தில் தோன்றுகின்றார். அதில் எனக்கு பிடித்த ஒரு சம்பவம் *1* சாமுவேல் *3*. சிறுவனாகிய சாமுவேல்

இரவில் படுத்து தூங்க முற்படும்போது ஒரு சத்தம் அவனை அழைத்தது. அவன் ஆசாரியனாகிய ஏலி தன்னை அழைத்ததாக நினைத்து அவனிடம் சென்றபோது அது தேவனுடைய சத்தம் என்று ஏலி உணர்ந்தான். தேவன் சாமுவேலிடம் மீண்டும் வந்தார் என்று வசனம் *10* கூறுகின்றது: “அப்பொழுது கர்த்தர் வந்து நின்று, முன்போல: சாமுவேலே சாமுவேலே என்று கூப்பிட்டார்; அதற்குச் சாமுவேல்: சொல்லும்; அடியேன் கேட்கிறேன் என்றான்.” தேவன் அவன் பக்கத்தில் வந்து நின்றார் என்பது அவர் சாமுவேலுக்கு மனிதனை போல் காட்சியளித்தார் என்பதை சித்தரிக்கின்றது. கர்த்தர் தன் “வார்த்தையினாலே” சாமுவேலுடன் பேசுவது ஒரு வழக்கமாக மாறியது (*1* சாமுவேல் *19-21*), அவர் அவனோடு கூட இருந்தார்.

மற்றொரு தீர்க்கதரிசியான ஏரேமியாவுக்கு “வார்த்தையானவர்” மனித உருவில் தோற்றமளித்தார். ஏரேமியா *1’*ம் அதிகாரத்தில் அவன் தீர்க்கதரிசியாக அழைக்கப்பட்டது பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில் ஏரேமியா கர்த்தருடைய வார்த்தை என்னிடத்தில் வந்தது. கர்த்தருடைய “வார்த்தையை” ஏரேமியா தேவனாக பார்க்கின்றார். கர்த்தருடைய வார்த்தையானவர் ஏரேமியாவை தன் கைகளினால் தொட்டார் (ஏரேமியா *1:1-9*).

## மனித உருவில் தேவன்

நசரேயனாகிய இயேசு கிறிஸ்து பூமிக்கு வரும் முன்னரே, மனித உருவில் தேவன் தோற்றமலிப்பது பழைய ஏற்பாட்டில் வழக்கமான ஒரு செயல். மனிதரில் ஒருவரும் தேவனை அவரது முழு மகிமையில், அவரது முழுநிறைவான வடிவில் பார்த்து உயிர் பிழைக்க முடியாது என வேதம் கூறுகின்றது. தேவனை நேரில் சந்தித்த வேதாகம நபர்களும் தாங்கள் உயிர் பிழைக்கப் போவதில்லை எனக் கருதினர் (ஆதி. *32:30*; உபாக. *5:24*; நியா. *6:22-24*). ஆனால் அவர்கள் மரிக்கவில்லை, ஏனென்றால் தேவன் அவர்கள் தன்னை காணும்படி தன்னை சுருக்கிக் கொண்டு - நெருப்பை போல், மேகத்தை போல் மற்றும் பல இடங்களில் மனிதனைப் போல் தோற்றமளித்தார்.

பழைய ஏற்பாட்டின் பல இடங்களில் மனிதர்கள் மனித வடிவில் தோன்றிய தேவனை சந்தித்தது, அவர்கள் “கர்த்தருடைய தூதனானவரை” கண்டனர் என அறியப்படுகின்றது. மோசேயிக்கு எரிக்கின்ற முட்செடியில் அவர் தோன்றினார் (யாத். *3:1-3*). முட்செடியில் மோசேக்கு தரிசனமான தேவன் அவனைக் கொண்டு இஸ்ரவேலரை எகிப்திலிருந்து விடுவிப்பேன் என்று வாக்களித்தார். யாக்கோபுக்கு பெத்தேல் என்ற இடத்தில் கனவில் தோன்றினார் (ஆதி. *28:10-22*), தன் கனவில் தோன்றியவரை யாக்கோபு தேவன் (யேகோவா) என அடையாளம் கண்டுக் கொண்டார். பின்னர் யாக்கோபை சந்தித்த கர்த்தருடைய தூதனானவரே தனக்கு பெத்தேலிலும் காட்சியளித்தவர் என யாக்கோபு அறிந்தார் (ஆதி. *31:11-12*).

பல வேதப் போதகர்கள் கர்த்தருடைய தூதனானவரை தேவன் என அழைக்க தயங்குகின்றனர். ஆனால் அவர் தேவன் என்பதற்கு பல காரணங்கள் உள்ளன. மோசேக்கு தேவன் நியாயபிரமாணத்தை அருளிய பின்னர் இஸ்ரவேலர் வாக்குதத்தம் பண்ணப்பட்ட பூமிக்கு செல்ல ஆயத்தமானபோது அவர் மோசேயிடம் கூறியது:

> அவர் சமுகத்தில் எச்சரிக்கையாயிருந்து, அவர் வாக்குக்குச் செவிகொடு; அவரைக் கோபப்படுத்தாதே; உங்கள் துரோகங்களை அவர் பொறுப்பதில்லை; என் நாமம் அவர் உள்ளத்தில் இருக்கிறது. நீ அவர் வாக்கை நன்றாய்க் கேட்டு, நான் சொல்வதையெல்லாம் செய்வாயாகில், நான் உன் சத்துருக்களுக்குச் சத்துருவாயும், உன் விரோதிகளுக்கு விரோதியாயும் இருப்பேன் என் தூதனானவர் உனக்குமுன் சென்று, எமோரியரும் ஏத்தியரும் பெரிசியரும் கானானியரும் ஏவியரும் எபூசியரும் இருக்கிற இடத்துக்கு உன்னை நடத்திக்கொண்டுபோவார்; அவர்களை நான் அதம்பண்ணுவேன் (யாதிராகமம் *23: 20-23*).

இவர் சதாரண ஒரு தூதனல்ல. இத்தூதன் பாவங்களை மன்னிப்பவர் (தண்டிப்பவரும் கூட). அத்தூதன் கர்த்தரின் நாமத்தை உடையவர், அவரது பிரசன்னம் யேகோவாவின்

பிரசன்னம். உதாரணமாக, ஏசாயா *30:27-28'*ல் கர்த்தரின் நாமம் கர்த்தருக்கு சமமாக கருதப்பட்டுள்ளது:

இதோ, கர்த்தருடைய நாமம் தூரத்திலிருந்து வரும்;

அவருடைய கோபம் எரிகிறதும் கனன்று புகைகிறதுமாயிருக்கும்;

அவருடைய உதடுகள் சினத்தால் நிறைந்து,

அவருடைய நாவு பட்சிக்கிற அக்கினிபோல இருக்கும்.

அவர் சுவாசம் ஆற்று வெள்ளத்தைபோல் எழும்பும்

இன்றும் யூதர்கள் கர்த்தருடைய நாமம் கர்த்தருக்கு இணையானது என்பதினை குறிக்கும் வகையில் ஹா-ஷெம் (நாமம்) என்ற சொல்லை பயன்படுத்துகின்றனர்.

கர்த்தருடைய தூதனானவர் மனித உருவில் தோன்றிய தேவன் என்பதனை அறிய யாத்திரகமம் *23: 20-22* வசனங்களை பிற வேதபகுதிகளோடு ஒப்பிட்டு பார்க்க வேண்டும். கர்த்தருடைய தூதனானவர் மோசேயை எரிகின்ற முட்செடியில் சந்தித்தார், கர்த்தருடைய நாமம் தரித்த அத்தூதன், இஸ்ரவேலரை எகிப்திலிருந்து விடுவித்து வாக்குதத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு அழைத்து வந்தார் (நியாய. *2:1-3*). இஸ்ரவேலரோடு தேவன் பயணித்தார் (யோசுவா *24:17-18*) மற்றும் தேவனது பிரசன்னம் அவர்களுடன் இருந்தது (உபாக. *4:37-38*). தேவன், அவரது பிரசன்னம் மற்றும் கர்த்தருடைய தூதனானனவர் இவையனைத்தும் ஒரே நபரான தேவனை குறிக்கின்றது.

இதனை வழியுறுத்தும் மற்றொரு வேதபகுதி கிறிஸ்தவர்களால் அதிகம் கவனிக்கப்படாத ஒன்று. அது யாக்கோபின் மரணப்படுக்கை. அவன் மரிக்கும் முன் யோசேப்பின் பிள்ளைகளை ஆசீர்வதிக்க விரும்பினான். அது சமயம் அவன் தேவனை சந்தித்த சில சம்பங்களை நினைவு கூறுகின்றான். அவனது ஆசீர்வாதத்தை பின்வருமாறு தொடங்கினான் (ஆதி. *48:15-16*):

என் பிதாக்களாகிய ஆபிரகாமும் ஈசாக்கும் வழிபட்டு வணங்கிய தேவனும்,

நான் பிறந்த நாள்முதல் இந்நாள்வரைக்கும் என்னை ஆதரித்துவந்த தேவனும்,

எல்லாத் தீமைக்கும் நீங்கலாக்கி என்னை மீட்ட தூதனுமானவர்....

பின்னர், *16'*ம் வசனத்தில் அவன் ஜெபித்தபோது, "அவர் இந்த பிள்ளைகளை ஆசீர்வதிப்பாராக." அவன் "அவர்கள் இந்த பிள்ளைகளை ஆசீர்வதிப்பாராக" என்று தேவனையும், தூதனானவரையும் பிரிக்காமல், தூதனும், தேவனும் ஒருவரே என அறிந்திருந்தான். எனவே தன் ஜெபத்தில் ஒருமையில்: அவர் இந்த பிள்ளைகளை ஆசீர்வதிப்பாராக என்றான்.

அதனைக்காட்டிலும் நியாயதிபதிகள் *6'*ல் கிதியோனின் அழைப்பு சிந்தனைகளை வருடுவது. தேவனும், தூதனானவரும் ஒரே சமயத்தில் தோன்றினர் (நியாய. *6:22-23*). பழைய ஏற்பாட்டிலும் தேவன் ஒன்றுக்கும் மேற்பட்டவராக காட்சியளித்தார், அதில் ஒருவர் மனிதனாக வெளிப்பட்டார்.

## இயேசு: வார்த்தையானவர், நாமமானவர், தூதனானவர்

வார்த்தை, நாமம், தூதன் என்று தேவனை குறித்து நாம் சிந்தித்த பதங்கள் நீங்கள் அறிந்த பதங்களாக தோன்றக்கூடும்- அவை புதிய ஏற்பாட்டில் இயேசு எவ்வாறு வர்ணிக்கப்பட்டாரோ அதனை போன்ற பழைய ஏற்பாட்டு பதங்கள்.

ஆபிரகாம் மனிதனாக வெளிப்பட்ட தேவனாகிய வார்த்தையை கண்டான். யோவான் *1:1*'ல், அப்போஸ்தலன் எழுதுவது: "ஆதியில் வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது." முதல் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு யூதர் அவ்வசனங்களை படித்தால் அவரது நினைவு வார்த்தையாக தோன்றிய தேவனை நோக்கி செல்லும். இயேசுவும் ஆபிரகாம் "என் நாளைக் கண்டு களிகூர்ந்தான்," மேலும் தான் ஆபிரகாமுக்கு முன்னே இருந்தவர் என்று கூறினார் (யோவான் *8:56-58*).

அதன் பின்னர் கர்த்தருடைய தூதனானவரை மனித உருவில் மோசே எரிக்கின்ற முட்செடியில் கண்டான். அத்தூதன் இஸ்ரவேலரை எகிபதிலிருந்து விடுவித்து, வாக்குதத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு அழைத்து வந்தார். யூதா இதனை தன் நிருபத்தில் குறிப்பிட்டுள்ளார், " நீங்கள் முன்னமே அறிந்திருந்தாலும், நான் உங்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறதென்னவெனில், கர்த்தர் (இயேசு) தமது ஜனத்தை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணி இரட்சித்து, பின்பு விசுவாசியாதவர்களை அழித்தார்" (*1:5*). மனித வடிவில் தோன்றிய தூதனானவர், தேவன். அவர் திரியேகத்தின் இரண்டாம் நபர்- அவரே பின்னர் கன்னி மரியாளின் வயிற்றில் பிறந்தவர்.

தேவனுடைய பிரசன்னமாகிய அவரது நாமம் தரித்த தூதனானவர் மற்ற தூதர்களிலிருந்து வேறுபட்டவர். புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்து பிதாவாகிய தேவனைக் குறித்து பேசும் போது அவரை நாமம் என்று குறிப்பிடுகின்றார். தாம் காட்டி கொடுக்கப்படுவதற்கு முன், கெத்சமெனே தோட்டத்தில் அவர் ஜெபித்தது: "பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும். நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன்.....உம்முடைய நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்" (யோவான் *17:5-6,26*). உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன் என்று இயேசு கூறியதின் அர்த்தம் என்ன? தேவனுடைய நாமம் (பெயர்) என்னவென்று அவர்களுக்கு அவர் அறிவிக்கவில்லை. அவர்கள் யூதர்கள். அவர்களுக்கு தேவனுடைய பெயர் யாகுவே என்று தெரியும். அவரது பெயர் ஆயிரக்கனக்கான வசனங்களில் தோன்றியுள்ளது. இயேசு தேவனுடைய நாமத்தை மனிதர்களுக்கு வெளிப்படுத்தினேன் எனக் கூறியது, அவர் தேவனையே மனிதர்களுக்கு வெளிப்படுத்தியதை அறிவுறுத்தியது. அவர்கள் கண்களுக்கு முன் தோன்றிய தேவன் அவரே. அவரே மாம்சத்தில் வெளிப்பட்ட நாமமானவர்.

## இதன் முக்கியத்துவம் என்ன

வேதம் இராஜ்ஜியங்களை குறித்து என்ன சொல்கின்றது என்று அதிகம் கற்றுக் கொண்டோம். நாம் படிக்கும் வேதாகம கதைகள் அனைத்தும் நாம் காணக்கூடாத உலகில் நடக்கும் ஆவிக்குரிய போராட்டத்தின் பிண்ணனியில் அமைந்தவை. அதில் தேவன் நிச்சயம் வெற்றி பெறுவார், இருப்பீனும் பிற தேவர்கள் அவரை எதிர்த்து இறுதி வரை போராடுவார்கள்.

வேதாகமத்தின் பார்வையில் நாம் காணக்கூடாத உலகில், தேவனுக்கு விரோதமாக வீரியமான எதிரிகள் உண்டு, தான் சிருஷ்டித்து தனக்கு சில காலம் உத்தமாய் இருந்து பின்னர் தேவனை விட்டு பிரிந்து தங்கள் வழியில் சென்ற தேவர்களே அவரது சத்துருக்கள். அவர்களை தான் பவுல் காணக்கூடாத உலகின் அதிகாரங்கள், இருளின் அதிபதிகள், துரைத்தனங்கள், கர்த்தத்துவத்துவங்கள் என்றழைக்கின்றார் (எபே. *6:11;* கொலே. *1:16*). அவர்கள் இன்றும் உள்ளனர். அவர்கள் இல்லை என புதிய ஏற்பாடு எங்கும் மறுதலிக்கவில்லை. அவர்கள் தேவனை எதிர்த்து - தனது சுவிசேஷத்தின் மூலம் தான் நேசிக்கும் குடும்பத்துடன் இணையும் அவரது விருப்பத்தினை சீர்குலைக்கின்றனர்.

அத்தகைய இருளின் அதிபதிகளில் ஒருவன் மரணத்தின் தேவன். அவன் ஆதாமையும், ஏவாளையும் வஞ்சித்து அவர்களை மரணத்திற்குட்படுத்தியபடியால் மனிதர்கள் மீது அவனுக்கு உரிமை உண்டு. அவனது லட்சியம்-யோகோவாவின் பிள்ளைகளை அழிப்பதே. இஸ்ரவேலர் தேவன் அவர்களுக்கு வாக்களித்த கானானுக்குள் நுழைந்தபோது அவருக்கு எதிரான தேவகுமாரர்கள் இஸ்ரவேலர் அப்பூமியை சுதந்தரிப்பதை எதிர்த்தனர், இஸ்ரவேலரை

கொல்ல வேண்டும் அல்லது அவர்களோடு யூத்தமிட்டு மடிய வேண்டும் என்ற கொள்கையுடன் செயல்பட்டனர். ஆனால் இஸ்ரவேலர் கானானை சுதந்தரித்த பின்னர் தங்கள் திட்டத்தை மாற்றிக் கொண்டனர், அது இஸ்ரவேலரை வஞ்சித்து அவர்களை அந்நிய தேவர்களை சேவிக்க வைப்பதே, அப்பொழுது யோகோவாவே அவர்களை அப்பூமியை விட்டு விரட்டுவார். அவ்வாறே இஸ்ரவேலர் பாபிலோனியரால் சிறை பிடிக்கப்பட்டனர்.

தேவன் தன் திட்டத்தை மாற்றிக் கொள்வதில்லை என இருளின் வல்லமை அறிந்திருக்கின்றது. அவன் மீது தேவன் இட்ட சாபம்: ஒரு நாள், ஏவாளின் வித்தாக தோன்றும் ஒரு மனிதனால் ஏதேனின் தோல்வி சரி செய்யப்படும் என்பதே. ஒரு நாள் தேவன் வாக்களித்த இரட்சகர் தோன்றுவார் என்று அவைகள் அறிந்திருந்தாலும், தேவன் எவ்வாறு அவர் மூலமாக செயலாற்றுவார் என்பதினை தேவன் அவர்களிடமிருந்து மறைத்து இரகசியமாக வைத்தார் என பவுல் கூறுகின்றார் (*1* கொரி. *2:6-8;* எபே. *3:100; 6:12*). தேவன் அதனை வேண்டுமென்றே அவர்களுக்கு மறைத்து வைத்திருந்தார்.

# அதிகாரம் ஏழு

## உடன்படிக்கையின் நியமங்கள்

பாபபேலின் நாட்களுக்கு பின்னர் தேவன் தேசங்களையும், அதின் ஜனங்களையும் தள்ளி வைத்தார் என நாம் இதுவரை கற்றுக் கொண்டோம். தேவன் தன் ஆலோசனை சங்கத்தை சேர்ந்த தேவர்களுக்கு அத்தேசங்களை பங்காக கொடு (உபாக. *32:8-9*). ஆபிரகாமை தேவன் அழைத்தபோது இஸ்ரவேலரைக் கொண்டு அவர் ஒரு நாள் எல்லா தேசங்களையும் தன்னிடத்தில் சேர்த்து கொள்வார் என்பது தெளிவானது (ஆதி. *12:3*). அது நடக்கும்போது தேசங்களின் தேவர்கள் அனைவரும் தேவனுக்கு தங்கள் வல்லமையை சமர்ப்பணம் செய்து, தாங்கள் தொழுதுகொள்ளப்படுவதை விட்டுவிட வேண்டும் (சங். *82:6-8*). இஸ்ரவேல் ஒரு தேசமாக உருவாகியவுடன், அது பிற தேவர்களுக்கு எரிச்சலுட்டியது. அதின் நிமித்தம் நாம் காணக்கூடிய மற்றும் காணக்கூடாத உலகில் ஒரு மிகப்பெரிய ஆவிக்குரிய போராட்டம் நடக்கின்றது.

### யாகுவே (யேகோவா) என்பவர் யார்?

வேதாகம கதையில் இஸ்ரவேல் ஆபத்தான நிலைக்கு தள்ளப்பட அதிக நாட்கள் தேவைப்படவில்லை. இஸ்ரவேலர் எகிப்துக்கு அனுப்பட்டதின் காரணத்தை யோசேப்பின் கதை (ஆதி. *37-50*) விளக்குகின்றது. யோசேப்பின் சகோதரர்கள் அவனுக்கு தீங்கு செய்ய முற்பட்டாலும் தேவன் தனது அருளால் அத்தீங்கினை நன்மையாக மாற்றி பஞ்சத்திலிருந்து இஸ்ரவேலரை இரட்சித்தார் (ஆதி. *46:3-4; 50:20*). தேவன் இஸ்ரவேலரை உடனடியாக எகிப்திலிருந்து வெளியேற சொல்லவில்லை. யோசேப்பை அறிந்த பார்வோன் மரித்த பின்னர் இஸ்ரவேலரை பகைக்கும் ஒரு பார்வோன் தோன்றுவான் என தேவன் அறிந்திருந்தார் (யாத். *1*). எகிப்தியர் இஸ்ரவேலரை அடிமைபடுத்துவர் என்பதினையும் தேவன் அறிவார் (ஆதி. *15:13-16*). ஏற்றகாலத்தில் அவர்களை எகிப்திலிருந்து விடுவிக்கவும் தீர்மானித்திருந்தார் (ஆதி. *46:4*).

ஏன் தேவன் காத்திருந்தார். சோதனைகளை தேவன் ஒரு நல்ல நோக்கத்துடன் அனுமதிக்கின்றார். அதனை நம்மால் எப்பொழுதும் புரிந்து கொள்ள முடியாது. இஸ்ரவேலர் எகிப்தில் சோதிக்கப்பட்டதின் நோக்கம் வேதத்தில் தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளது.

எகிப்திலிருந்து தப்பி ஓடிய மோசே வனாந்திரத்தில் குடியிருந்தான், அப்பொழுது எரிகிற முட்செடியில் தோன்றிய தேவன் அவனை எகிப்துக்கு மீண்டும் போகும்படி அழைத்தார் (யாத். *3:1-14*). மோசே என்ன செய்ய வேண்டுமென தேவன் அவனுக்கு கொடுத்த கட்டளை மிகவும் எளியது: பார்வோனிடம் சென்று “என் ஜனங்களை போகவிடு” என்று சொல்ல வேண்டும் (யாத் *5:1*). ஆனால் பார்வோன் அதற்கு செவிகொடுக்கவில்லை. அவன் மாம்சத்தில் வாழ்ந்த எகிப்தின் தேவன், எகிப்தின் மகிமையும், வலிமையும் அவனே. தான் கண்ணால் காணாத எபிரேய மேய்ப்பர்களின் தேவன் தனக்கு கட்டளையிடுவதை அவன் விரும்பவில்லை. மோசேயின் தேவன் உண்மையாகவே இருக்கின்றாரா என்று கூட அவனுக்கு தெரியாது. அவன் மோசேயை கேலி செய்யும் வகையில் சொன்னது, “நான் இஸ்ரவேலைப் போகவிடக் கர்த்தரின் வார்த்தையைக் கேட்கிறதற்கு அவர் யார்?” (யாத். *5:2*).

அக்கேள்விக்கான பதிலை மிகுந்த வேதனையோடு அவன் கற்றுகொள்ளும்படி தேவன் அவனை நெருக்கினார். “நான் அவன்(பார்வோன்) இருதயத்தைக் கடினப்படுத்துவேன்; அவன் ஜனத்தைப் போகவிடான்” (யாத். *4:21*) என்று தேவன் மோசேயிடம் கூறினார். தேவன் ஒரு யூத்தத்தில் இறங்கினார். இஸ்ரவேலரை பல வருடங்களாக துன்புறுத்திய எகிப்தும், அதின் தேவர்களும் தண்டிக்கப்பட வேண்டும். அவ்வாறு பார்வேனின் இருதய கடினம் வழிவகுக்கும். எகிப்தின் மீது தேவன் அனுப்பிய வாதைகள் அனைத்தும் எகிப்தின் தேவர்களுக்கு எதிரானது- குறிப்பாக முதற்பிறப்பின் இறப்பு(யாத். *12:12*; எண். *33:4*), அது பார்வோனின் குடும்பத்தை நேரடியாக வாதித்த கடைசி வாதை: “ ந டு ரா த்தி ரி யி லே

*சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் பார்வோனுடைய தலைப்பிள்ளை முதல் காவல் கிடங்கிலிருக்கும் சிறைப்பட்டவனின் தலைப்பிள்ளை வரைக்கும், எகிப்து தேசத்தில் இருந்த முதற்பேறனைத்தையும் மிருகஜீவன்களின் தலையீற்றனைத்தையும் கர்த்தர் அழித்தார்" (யாத். 12:29).*

தேவனை கேலி செய்த பார்வோனின் நிலை பரிதாபமாக மாறியது. அதனை பவுலின் வார்த்தைகளில் விவரித்தால், *"மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" (கலா. 6:7).* எகிப்திலிருந்து இஸ்ரவேலர் கர்த்தருடைய பலத்த கரத்தினால் விடுவிக்கப்பட்டதற்கு ஒரு நோக்கம் உண்டு. எகிப்தையும், அதின் தேவர்களையும் தேவன் எவ்வாறு சங்கரித்தார் என்று கானானியர் அறிந்தனர் (யாத். *15:16-18;* யோசு. *9:9*). மீதியானினாகிய மோசேயின் மாமனார், யேத்ரோ மோசேயை சந்தித்தபோது கூறியது: *"கர்த்தர் எல்லாத் தேவர்களைப் பார்க்கிலும் பெரியவர் என்பதை இப்பொழுது அறிந்திருக்கிறேன்" (யாத். 18:11).*

*சிவந்த சமுதிரத்தில் கர்த்தரை கேலி செய்த பார்வோனின் இராணுவத்தை தேவன் தண்ணிரீல் முழ்கடித்ததை கண்ட மோசே பாடியது: கர்த்தாவே, தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்? (யாத். 15:11).*

எகிப்தையும், சிவந்த சமுதிரத்தையும் கடந்த இஸ்ரவேலர் தாங்கள் பூமியில் தேவனது புதிய தலைமையகமான அவரது புதிய வீடாகிய சீனாய் மலைக்கு அழைத்து செல்லப்படுவதை உணர்ந்தனர்.

உண்மையில், இஸ்ரவேலர் தேவனை முழுமையாக அறியாதவர்கள். யாத்திராகமத்தின் நாட்களில் அவர்கள் கையில் வேதாகமம் இல்லை. தேவனைக் குறித்து அவர்கள் அறிந்த உண்மைகள் அனைத்தும் அவர்கள் முன்னோர்கள் மூலம் அவர்கள் தலைமுறை தலைமுறையாக கேள்விப்பட்டதே. இஸ்ரவேலர் தேவனை குறித்து அறிய வேண்டிய காரியங்கள் நிறைய இருந்தது, தேவன் தன்னை குறித்து இஸ்ரவேலருக்கு கற்பித்த பாடசாலையே, சீனாய் மலை.

## இஸ்ரவேல் - தேவனுடைய குடும்பம் மற்றும் பூமிக்குரிய பிரதிநிதிகள்

இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்படும் முன் பார்வோன் முன் நின்ற மோசே, அவனிடம் தேவனது வார்த்தைகளை உரைத்தான்: " அப்பொழுது நீ பார்வோனோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: இஸ்ரவேல் என்னுடைய குமாரன், என் சேஷ்டபுத்திரன். எனக்கு ஆராதனை செய்யும்படி என் குமாரனை அனுப்பிவிடு என்று கட்டளையிடுகிறேன்" (யாத்தி. *4:22-23*). தேவன் ஆபிரகாமின் சந்ததியில் தோன்றிய அனைவரையும் என் குமாரன் என்றழைப்பது முக்கியத்துவம் வாய்ந்தது. அது தேவன் ஆதாம், ஏவாளை சிருஷ்டித்த விதத்தை நினைப்பூட்டுகிறது.

தேவன் தனது பூமிக்குரிய குடும்பத்தை நேசிக்கின்றார். அவர் தன் பூமியில், தன் சிருஷ்டிப்புகளுடனும், தன் குடும்பத்துடனும் சேர்ந்து வாழ விரும்பினார். காணக்கூடாத தன் குடும்பமும் (ஆவிகள்), காணக்கூடிய தன் குடும்பமும் தன்னுடன் இணைந்து வாழ்ந்து, தன்னை சேவிக்க வேண்டுமென தேவன் விரும்புகிறார். மனிதர்கள் பலுகி பெருகி உலகம் முழுவதினையும் ஏதேனைப் போல் மாற்ற வேண்டுமென தேவன் விரும்பினார். ஆனால் பாபேலில் மனிதர்கள் தேவனுக்கு எதிராக முரட்டாட்டம் செய்தபோது தேவன் அவர்களை கைவிட்டார், அவர் ஆபிரகாமை அழைக்கும் வரை அவருக்கு பிள்ளைகள் இல்லாதிருந்தது. ஆதாமும், ஏவாளும் பூமியில் தேவனை பிரதிபலிக்கும் அவரது சாயலாய் இருந்ததுபோல், இஸ்ரவேல் தேவனை பிரதிபலிக்கும் சாயலாய் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள்.

இஸ்ரவேல் மக்கள் சீனாய் மலை நோக்கி பயணித்தது, அவர்கள் தங்கள் இருப்பீடத்திற்கு திரும்பும் பயணம். தேவனது ஆலோசனை சங்கமும் அங்கு தேவனது செயலை கவணிக்கும்படி இறங்கி வந்தது. அவர்கள் தேவன் தன் மக்களுடன் நியாயபிரமானத்தின் வழியாக ஏற்படுத்திய புதிய உடன்படிக்கையின் சாட்சிகள்.

## தேவனுடைய நியாயபிரமானம் - தேவனது ஆலோசனை சங்கத்தால் அருளப்பட்டது

தேவன் பத்து கட்டளைகளை சீனாய் மலையில் அருளிய வேளையில் அவரது ஆலோசனை சங்கமும் அவருடன் அங்கு இருந்தது என்பது உங்களுக்கு ஆச்சரியமூட்டுகின்றதா? பத்து கட்டளைகளை அருளப்பட்டதை சித்தரிக்கும் திரைபடங்களிலும், சீனாய் மலைக்கு சுற்றுலா செல்லும்போதும் அங்கே தேவதூதர்கள் காணப்படுவதில்லை. ஆனால் வேதம் அவர்கள் சீனாய் மலையில் இருந்ததாக கூறுகின்றது. அது தேவதூதர்களால் அருளப்பட்டது என போதிக்கின்றது (அப். *7:52-53*; எபி. *2:1-2*).

தேவனுடைய கட்டளைகள் “அவரது விரல்களால்” எழுத்தப்பட்டவை என வேதம் கூறுகின்றது (உபாக. *9:9-10*). ஆதியாகம கதைகளில் கர்த்தருடைய தூதன் தோன்றியது போல் தேவன் சீனாய் மலையில் ஒரு மனிதனைப் போல் தன் தூதர்களுடன் தோன்றினார். அவரும், அவரது பரலோக சேனையும், மோசேயின் மூலம் இஸ்ரவேலருக்கு கட்டளை அருளினர்.

நியாயபிரமானம் அருளப்பட்டப் பின், ஆரோனும், அவனது குமாரரும், மற்றும் இஸ்ரவேலின் மூப்பர் எழுபது பேரும் இஸ்ரவேலின் தேவனை மனித உருவில் மீண்டும் தரிசித்தனர். அவர்கள் உணவு அருந்துபடி ஒன்றாக கூடினர் (யாத். *24:9-11*). இயேசு கிறிஸ்து தன் சீஷர்களோடு பந்தி அமர்ந்த போது அவரது இரத்ததினால் ஒரு புதிய உடன்படிக்கையை உருவாக்கியவாறு, அன்று தேவன் தான் இஸ்ரவேலருடன் ஏற்படுத்திய புதிய உடன்படிக்கையை உணவு அருந்துவதின் மூலம் உறுதி செய்தார்.

இஸ்ரவேலர் பரிசுத்தமாய் வாழும்படி தேவன் அவர்களுக்கு நியாயபிரமானத்தை அருளினார் (லேவி. *19:2*). தேவன் பிற நபர்களிலிருந்து இஸ்ரவேல் வேறுபட்டு, தன் குடும்பமாக வாழ வேண்டுமென விரும்பினார். தேவன் பிற தெய்வங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவரானபடியால், அவரது ஜனமும் வேறுபட்டவர்களாய் அறியப்பட வேண்டும்.

பரிசுத்தம் என்றால் என்ன? அதின் பொருள் என்ன? பரிசுத்தம் என்பது தனித்து வாழும் வாழ்க்கையல்ல. பரிசுத்தம் என்பது தேவனோடு இணைந்திருப்பது, தேவனுக்கு தன்னை அர்பணித்து தேவன் நல்லதாக காண்கின்ற அனைத்தையும் அனுபவித்து மகிழ்வது (உபாக. *4:6-8*; *28:9-10*). ஆகையினால் தான் வேதாகமம் இஸ்ரவேலை “ஆசாரிய ராஜ்ஜியம்” என்றும் (யாத். *19:6*) “ஜாதிகளுக்கு ஒளி” என்றும் அழைக்கின்றது(ஏசா. *42:6; 49:6; 51:4:60:3*). ஆபிரகாமை போல் இஸ்ரவேல் முழுவதும் பிறருக்கு ஆசீர்வாதமாய் திகழும்படி அழைக்கப்பட்டவர்கள் (ஆதி, *12:3*).

## நேர்மையான விசுவாசம்

தேவனோடு ஒப்புரவாகுதல் என்பது இரட்சிப்பின் மறு பெயர். இஸ்ரவேலர் கட்டளைகளை பின்பற்றியதின் மூலம், அல்லது அவைகளுக்கு கீழ்படிந்ததினால் இரட்சிக்கப்படவில்லை. பழைய ஏற்பாடானாலும் சரி, புதிய ஏற்பாடானாலும் சரி, இரட்சிப்பு மனித முயற்சியினால் சாத்தியமாகும் காரியமல்ல. அது விசுவாசத்தினால் தேவனுடைய கிருபையின் மூலம் பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

புதிய ஏற்பாட்டின் விசுவாசிகளைப் போல், இஸ்ரவேலரும் தேவனை விசுவாசிக்க வேண்டும். தேவன் அவர்களை தன் ஜனமாக மாற்றினார், அவரே தேவர்களுக்கு எல்லாம் தேவன் என்பதினை விசுவாசிக்க வேண்டும். நியாயபிரமானத்தின் மூலம் அவர்கள் இரட்சிக்கப்படவில்லை, அதனை கைகொள்வதின் மூலம் அவர்கள் தேவனுக்கு எவ்வளவு உண்மையானவர்கள் என்பதினை காண்பித்தனர். இஸ்ரவேலருக்கு இரட்சிப்பு தேவனை விசுவாசிப்பதின் மூலம், அவரே தேவர்களுக்கெல்லாம் தேவன் என நம்பி அவரை தவிர பிற தெய்வங்களை வழிபடாமல் வாழ்வதின் மூலம் அருளப்பட்டது. இரட்சிப்பு கீழ்படிதலை

அடிப்படையாக கொண்டு அமையாமல், நேர்மையான விசுவாசத்தின் அடிப்படையில் அமைந்தது.

தாவிது இராஜா மிகவும் கொடூரமான பாவங்களான விபச்சாரம் மற்றும் கொலை செய்தான் (2 சாமு. 11). நியாயபிரமானத்தின்படி அவன் தனது பாவங்களுக்காக கொல்லப்பட வேண்டும். ஆனால் அவன் மிகவும் உன்னதமான யேகோவாவை விட்டு வழிவிலகவில்லை, வேறு தெய்வங்களின் பின் செல்லவில்லை, எனவே தேவன் அவன் மீது இரக்கம் காட்டினார்.

புதிய ஏற்பாட்டிலும் இது உண்மை. தேவனை விசுவாசிப்பது என்பது, இஸ்ரவேலின் தேவன் பூமிக்கு மனிதனாக வந்தார், நமது பாவங்களுக்கு பரிகார பலியாக சிலுவையில் மாண்டார், மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார் என்பதினை நம்புவதே சுவிஷேசத்தினை விசுவாசிப்பது. இயேசுவை விசுவாசத்தினால் பற்றிக்கொண்டு பிற தெய்வங்களை விட்டுவிடுவது. இரட்சிப்பைக் குறித்து பிற தெய்வங்களும், மதங்களும் என்ன சொன்னாலும், இயேசுவின் நாமமே அன்றி வேறு எதிலும் இரட்சிப்பில்லை (அப். 4:12), அவ்விசுவாசத்தில் விசுவாசிகள் நிலைதிருக்க வேண்டும் (ரோ. 11:17-24; எபி. 3:19; 10:22, 38-39). தனிப்பட்ட பாவவீழ்ச்சிகளுக்கும், இயேசுவை மறுதலிப்பதற்கும் வித்தியாசமுண்டு. தனி மனித ஒழுக்கமல்ல இயேசுவின் கிறிஸ்துவின் மீதுள்ள நேர்மையான விசுவாசமே இரட்சிப்பு.

## இதன் முக்கியத்துவம் என்ன

யாத்திராகமத்தில் இடம் பெற்றுள்ள சீனாய் மலைபர்வத சம்பவம் அநேக ஆவிக்குரிய சித்திரங்களை உள்ளடக்கியது. மோசேயும், அவனுடன் இருந்த மற்ற நபர்களும் தேவனுடன் உணவு அருந்திய நிகழ்வு நம் கவணத்தை ஈர்க்கும் செயல். மோசேயுடன் எழுபது மூப்பர்கள் அங்கு காணப்பட்டனர். ஆதியாகமம் 10'ம் அதிகாரத்தில் பாபேல் கோபுரத்திற்கு பின்னர் தேவனால் துரத்திவிடப்பட்ட தேசங்களை கணக்கிட்டால், அவை எழுபது. அத்தேசங்களை தேவகுமாரர்களான, தாழ்வான தெய்வங்களை பின்பற்றும்படி தேவன் ஒப்புக்கொடுத்தார் (உபாக. 4:19-20; 32:8-9). ஏன் எழுபது மூப்பர்கள், எழுபது தேவகுமாரர்கள், மற்றும் எழுபது தள்ளப்பட்ட தேசங்கள்?

இங்கே காணப்படும் ஒற்றுமைகளுக்குள் தொடர்புண்டு. இயேசு கிறிஸ்து தன் ஊழியத்தை தொடங்கியபோது எழுபது சீஷர்களை அனுப்பினார் (லூக்கா 10:1). அது பிரதான கட்டளையின் முன்னடையாலம். இயேசு கிறிஸ்து எழபது சீஷர்களை அனுப்பியதின் பொருள் அவர் தேவனுடைய இராஜ்ஜியத்திற்கென தன் சீஷர்கள் மூலம் தேசங்களை மீட்டெடுப்பார். அது வெளிப்படுத்தின விசேஷம் 21'ல் காணப்படும் புதிய உலகலாவிய ஏதேன் ஸ்தாபிக்கப்படும் நாளில் நிறைவேறும். மோசேயின் நாட்களில் எழுபது மூப்பர்கள் தெரிந்துக்கொள்ளப்பட்டதின் மூலம் தேவன் தன் புதிய பூமிக்குரிய குடும்பத்தை கொண்டு தாம் இழந்ததை மீட்கப் போகின்றார் என்று வெளிப்படுத்தினார்.

இஸ்ரவேலுடன் தேவனது மீட்பின் பணி நிற்பதில்லை. ஆபிரகாமின் வாக்குதத்தை விசுவாசிகள் அனைவரும் சுதந்தரித்துள்ளனர் என கலாத்தியர் 3'ல் அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகின்றார். இயேசு கிறிஸ்துவை நம்பும் அனைவரும் விசுவாசத்தினால் ஆபிரகாமின் பிள்ளைகளே (கலா. 3:26-29). அதினால் நாம் அனைவரும் பொய் தெய்வங்களின் கையிலிருந்து தேசங்களை விடுவிக்கும் பொறுப்பினை பெற்றவர்கள். பிற தெய்வங்களின் பிடியில் ஆவிக்குரிய அந்தகாரத்திலிருக்கும் நபர்களை இருளிலிருந்து விடுவித்து அவர்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும்படி ஊழியம் செய்ய நாம் அழைக்கப்பட்டவர்கள். நாம் தேவனுடைய பூமிக்குரிய புதிய ஆலோசனை சங்கம். நாம் எதிர்காலத்தில் அவரது பரலோக ஏதேன் குடும்பத்துடன் இணைக்கப்பட்டு மகிமைபடுத்தபடுவோம்.

இதனை பல இடங்களில் நாம் வேதத்தில் வாசிக்கலாம். விசுவாசிகள் இயேசு கிறிஸ்துவுடன் இணைந்து தேசங்களை ஆட்சி செய்வர் என வெளிப்படுத்தின விசேஷம் கூறுகின்றது (வெளி. 3:21). அதின் பொருள் தற்போது தேசங்களை ஆளும் பொய் தெய்வங்களாய் மாறிய தேவகுமாரர்கள், தங்கள் அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்டு, அவர்களது இடம் விசுவாசிகளுக்கு கொடுக்கப்படும். பாபேல் கோபுரத்தின் நாட்களிலிருந்து

பூமியை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் தேவகுமாரர்கள் அகற்றப்படுவர். எனவே தான் யோவான் விசுவாசிகள் தேவனுடைய பிள்ளைகள் என்ற அதிகாரம் பெற்றவர்கள் என்று கூறுகின்றார் (யோவான் *1:12;* அதனை *1* யோவான் *3:1-3'*டன் ஒப்பிடவும்). ஒரு நாளில் தேவகுமாரர்களை-அதாவது தனக்கு விரோதமாக செயல்பட்ட தேவகுமாரர்களை தேவன் நீக்கிவிட்டு, அவர்களுக்கு அருளப்பட்ட அதிகாரத்தை நமக்கு கொடுப்பார்.

அதினால் தான் பவுலும் உலக வழக்குகளை வழக்காடு மன்றங்கள் தீர்த்துக்கொள்ளட்டும், "நாமோ தேவதூதர்களை நியாயத்திர்ப்போம் என்பதினை அறியீர்களா?"*(1* கொரி. *6:3)* என்று கொரிந்தியரை வினாவினார். மறுபூமியில் நாம் மகிமைபடுத்தப்படுகையில், தேவதூதர்களை காட்டிலும் நாம் மேலானவர்களாயிருப்போம். நாம் ஒரு நாள் இயேசு கிறிஸ்துவைப் போல் மாற்றப்படுவோம் *(1* யோவான் *3:1-3; 1* கொரி. *15:35-49)*, தற்போது தேவனுக்கு விரோதமாக செயல்படும் தெய்வங்களின் பிடியிலிருக்கும் தேசங்களை அவருடன் இணைந்து ஆளுவோம் (வெளி. *2:26)*.

இதனை உணர்ந்தவர்களாய் நாம் வாழ வேண்டும். பழைய ஏற்பாட்டின் திட்டங்கள் அனைத்தும் அதற்கு நேராக நடத்தப்பட்டது. ஏதேன் முதல் தேவன் தன் இரண்டு குடும்பங்களும் - பரலோக குடும்பமும், மனித குடும்பமும் இணைந்து வாழ்ந்து, பூமியை சுதந்தரிக்க வேண்டுமென விரும்புகின்றார். அத்திட்டம் பாவத்தினிமித்தம் சீர்குலைக்கப்பட்டாலும், தேவன் இஸ்ரவேலை எகிப்திலிருந்து மீட்டதின் மூலம் மீண்டும் வலுவடைந்தது. ஆபிரகாமின் குடும்பத்தில் உதிக்கும் மேசியா ஏதேனின் வீழ்ச்சியை சரி செய்வார் (ஆதி. *3:15)*. இஸ்ரவேல் இல்லாமல் நமக்கு ஒரு நோக்கம் இருந்திருக்காது.

ஆகவே தான் குறிப்பாக பொய் தெய்வங்களும், அதின் பக்தர்களும் இஸ்ரவேலை அழிக்க முயற்சிப்பர்.

# அதிகாரம் எட்டு

# புண்ணிய ஸ்தலம்

இஸ்ரவேலர் ஒரு வருடத்திற்கு மேல் சீனாய் மலையில் அருகில் செலவழித்தனர். ஏன் அவ்வளவு காலம் அங்கிருக்க வேண்டும்? அவர்கள் முன்னதாகவே பத்து கட்டளைகள் பெற்று, தேவனுடன் ஒப்பந்தம் செய்து கொண்டனர். இருப்பீனும் அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் நிறைய இருந்தது. தங்கள் பிதாக்களான ஆபிரகாம், ஈசாக்கு, மற்றும் யாக்கோபின் தேவனுக்கு உண்மையாய் இருப்போம் என்று உடன்படிக்கை செய்தல் என்பது வேறு. தாங்கள் வாக்களித்த தேவன் தங்களிடம் என்ன எதிர்பார்க்கின்றார் என்பது வேறு.

## பரிசுத்தம் என்ற கோட்பாடு

பழைய ஏற்பாட்டின் கட்டளைகள் மற்றும் வழிபாட்டு முறைமைகளில் பல, தேவன் முற்றிலும் *வேறுபட்டவர்* என்பதினை போதிக்கும் வண்ணம் கொடுக்கப்பட்டது. தனது தன்மை மற்றும் குணத்தில், அவர் தனித்துவம் வாய்ந்தவர்; மனிதர்கள் மற்றும் வேறு எதனைக்காட்டிலும் அவர் வேறுபட்டவர். இஸ்ரவேல் மக்களுக்கு தேவன் பரிசுத்தர் என்பது மீண்டும் மீண்டும் வழியுறுத்தப்பட வேண்டியதாயிருந்தது. இல்லையெனில், தேவனை அவர்களை எளிதாக எடுத்துக்கொள்ளக் கூடும்.

தேவனது வேறுபட்ட தன்மையை விளக்கும் வேதாகம வார்த்தை *பரிசுத்தம்*. அதின் பொருள் “பிரித்தெடுக்கப்பட்ட” அல்லது “துண்டிக்கப்பட்ட” என்பதாகும். பரிசுத்தம் என்பது நல்லொழுகத்தை மட்டுமே தழுவிய குணமல்ல. (லேவி. *19:2*).

பரிசுத்ததை குறித்து ஒரு அறிவிப்பூர்வமான விளக்கத்தை மாத்திரம் இஸ்ரவேலுக்கு கொடுப்பதில் தேவன் ஆர்வம் காட்டவில்லை. மாறாக அவரது பரிசுத்தம் அவர்களது வாழ்வின் மையமாக இருக்க வேண்டுமென விரும்பினார். அதனை அவர்களுக்கு அவர் கொடுத்த கட்டளைகள் மற்றும் நெறிகள் மூலம் ஸ்தாபிக்க முற்பட்டார்.

## தேவன் எவ்வாறு வேறுபட்டவர்

சுருக்கமாக சொன்னால் “எல்லாவிதத்திலும்,” ஆனால் அது ஒரு பொதுவான பதில். வேதாகமம் எளிமையான ஒரு புஸ்தகம், அதில் இஸ்ரவேலருக்கு கொடுக்கப்பட்ட கட்டளைகளும், நியமங்களும் அவர் வேறுபட்டவர் என்பதினை விளக்கும்.

உதாரணமாக, வேதம் தேவன் இஸ்ரவேலின் ஜீவனின் உறைவிடம் என்று கூறுவதோடு நின்றுவிடாமல், அவரே இஸ்ரவேலின் ஜீவன் என்று கூறுகின்றது. மரணம், வியாதி, மற்றும் பெலகீனம் நிறைந்த இவ்வுலகை சேர்ந்தரல்ல தேவன். அவர் தெய்வீக உலகை சேர்ந்தவர். நாம் பூமிக்குரியவர்கள். தேவன் பிரசன்னமாகும் பூமிக்குரிய இடம் பரிசுத்தமாகும், அவரது பிரசன்னத்தினால் அது வேறுபட்டதாக மாறும். நாம் வாழும் ஸ்தலம் சதாரணமானது. ஆனால் தேவன் விஷேசமானவர்.

தேவன் அனுமதித்தால் மாத்திரமே இஸ்ரவேலர் அவரது பரிசுத்த பிரசன்னத்திற்குள் செல்ல முடியும். அவ்வாறு அவர்கள் தேவனுடைய சமுகத்தில் நுழையும் முன் சுத்திகரிக்கப்பட வேண்டும். பழைய ஏற்பாட்டின் பல சடங்குகள் சுத்திகரிப்பை மையமாக கொண்டது.

இஸ்ரவேலர் செய்யக் கூடிய சில காரியங்கள் (அசுத்தமான) அவர்கள் புண்ணிய ஸ்தலத்தினுள் நுழையாதபடி அவர்களை தடை செய்யக்கூடும். பாலியல் உறவு கொண்டப் பின், இரத்த போக்கு நாட்கள், சில உடல் ஊனங்கள், மற்றும் மரித்த சடலத்தை தொடுதல் போன்ற செயல்கள் அவர்களை அசுத்தப்படுத்தும். சடலங்களை உணவாக கொள்ளும் சில பறவைகள் (எ.கா. கழுதுகள், பருந்துகள்; லேவி. *11:13-19*) மற்றும் சடலத்துக்குள் உணவு தேடும் சில விலங்குகளை (எ.கா. பல்லி, எலிகள்; லேவி. *11:24-40*) புசிக்க இஸ்ரவேலருக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

இக்கட்டளைகளில், ஒரு செயலை செய்வதின் மூலம் அவர்கள் அசுத்தமாக்கப்படாமல், சில உயிரற்ற பிரேதங்களுடனான தொடர்பு அவர்களை அசுத்தமாக்கும், நிறைவான தேவனுக்கும் குறைவான மரணத்திற்கும் தொடர்பில்லை. நமது நவீன சிந்தைக்கு இது விநோதமாக தோன்றும். பாலியல் செயல்களில் வீணாக்கப்படும் விந்து மற்றும் இரத்தபோக்கு ஆகியவை ஜீவனின் இழப்பை குறிப்பதாக கருதப்பட்டது. தேவன் ஜீவனளிப்பவர், அவருக்கும் ஜீவனக்கு இழப்புண்டாக்கும் காரியங்களுக்கும் சம்பந்தமில்லை. அத்தகைய இழப்புகளுக்குப் பின் "தூய்மைபடுத்தபடுதல்" அவர்களுக்கு கட்டாயமாக்கப்பட்டது. அதே போல் மரித்த சடலத்தை தொட்ட பின்னர் அவர்கள் "சுத்திகரிக்கப்படுதல்" அவசியம். சில உடல் ஊனங்களும் அவர்களை தேவனது சமூகத்திலிருந்து விலக்கியது.

இவை அனைத்தும் தேவன் தெய்வீக உலகை சேர்ந்தவர் என்பதினை ஞாபகப்படுத்தும் நோக்கத்துடன் அருளப்பட்ட கட்டளைகள்.

## அசுத்தம் என்ற பிரச்சனையை சரி செய்தல்

"அசுத்தமாக" மற்றும் தேவனது புண்ணிய ஸ்தலத்தினுள் நுழைய தகுதியில்லாமல் இருப்பது இஸ்ரவேலருக்கு மிகப்பெரிய பிரச்சனையாக தோன்றியது. அவர்களால் பலிகளையோ அல்லது காணிக்கைகளையோ பரிசுத்த ஸ்தலத்தினுள் எடுத்து செல்ல முடியாமல் போனது. அதற்கான பரிகாரம் சுத்திகரிப்பின் சடங்குகள், சிலவற்றின் சுத்திகரிப்புக்கு பலிகள் தேவைப்பட்டது வேறு சில சுத்திகரிப்புகளுக்கு சில நாட்கள் காத்திருக்க வேண்டியிருந்தது.

இரத்தம் தெளிக்கப்படுவதின் மூலம் ஒரு நபரோ அல்லது பொருளோ தூய்மைபடுத்தப்படுதல் என்பது நமது அறிவுக்கு எட்டாதது. ஆனால் இரத்த பலிகளின் நோக்கம் வேறு, அது ஒரு நபருக்கு பதிலாக ஒரு கிரயம் செலுத்தப்பட வேண்டியதினை குறித்தது. இரத்தம் உயிரை குறிப்பதாக கருதப்பட்டதால் (லேவி. *17:11*), ஒரு விலங்கின் ஜீவனை பலி செலுத்துதல், இரத்தம் சிந்துதல் இல்லாமல் தேவனை நெருங்க முடியாது என்பதினை குறித்தது. அசுத்தமான இஸ்ரவேலரை சுத்திகரிக்கும் இரக்கம் நிறைந்த பரிகாரமாக தகன பலிகள் கருதப்பட்டது.

அவர்களுக்கு கற்றுக்கொடுக்கப்பட்ட பாடம், தேவன் ஒரு பரிகாரத்தின் மூலம் இஸ்ரவேலரின் ஜீவனை பராமரித்தார் என்பதே. மனிதர்கள் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டதால் அவர்கள் விலங்குகளைக் காட்டிலும் சிறப்பானவர்கள் (ஆதி. *1:26; 9:6*). இஸ்ரவேலர் ஆபிரகாமுக்கும், சாராளுக்கு அற்புதமாக அருளிய ஒரு பிள்ளையின் மூலம் தோன்றினர் (ஆதி. *12:1-3*). ஆனால் பரிசுத்த தேவனுக்கு முன் பாவ மனிதர்களின் வாழ்வு கேள்விக் குறியானது. தேவன் இரக்கமுள்ளவர் என்பதினையும் - அவரே மரணம் மற்றும் ஜீவன் மீது வல்லமையுள்ளவர் என்பதினையும் பலிகள் நினைவுபடுத்தியது.

## பூமியில் பரலோகம் (மற்றும் நரகம்)

தேவன் வேறுபட்டவர் என்பது தேவனைக் குறித்து மட்டுமல்லாமல், தெய்வீக உலகினைக் குறித்தும் சில உண்மைகளை வெளிப்படுத்தியது. இஸ்ரவேலரின் உலகப்பார்வை அவர்கள் "தங்கள் பூமியின் வேறுப்பட்ட தன்மையை" உணர்ந்ததின்படி அமைந்தது. தேவனது பிரசன்னம் ஒரு இடத்தில் இருந்தால் அது பரிசுத்தமானது, அதனை தவிர மற்ற இடங்கள் சதாரணமாகவும், சில சமயங்களில் தீமைமையானதாகவும் கருதப்பட்டது.

தேவனது பிரசன்னம் எதேனை நினைவுபடுத்துபவை. ஆசாரிப்பு கூடாரம் மற்றும் தேவாலயத்தின் வடிவமைப்பும் ஏதேனை நினைவுபடுத்தும் விதம் அமைந்தது, அது பரலோகமும் - பூமியும் சந்திக்கும் ஸ்தலம். பொன் குத்துவிளக்கு ஒரு மரத்தை போல் வடிவமைக்கப்பட்டது (யாத். *25:31-40*), அது ஏதேனில் காணப்பட்ட ஜீவவிருட்ச மரத்தின் அடையாளம். அது மகாபரிசுத்த ஸ்தலத்தை பிரித்த திரைசிலைக்கருகே வைக்கப்பட்டிருந்தது, திரைசிலைக்குப் பின் இருந்த மகாபரிசுத்த ஸ்தலத்தில் உடன்படிக்கை பெட்டி இருந்தது, அது தேவனுடைய சிங்காசனத்தை குறித்தது (யாத். *25:10-22*).

மகாபரிசுத்த ஸ்தலத்திலிருந்த சேராபீனும் ஏதேனுடன் தொடர்புடையது. தேவன் வாசம் செய்த ஏதனை பாதுகாக்கும்படி ஏதேனில் சேராபீன்கள் நின்றன (ஆதி. *3:24*). மகாபரிசுத்த ஸ்தலத்திலிருந்த சேராபீன்கள் உடன்படிக்கை பெட்டியை பாதுகாத்தன (யாத். *25:18-20*). பின்னாட்களில் சாலமோன் கட்டிய தேவாலயத்தின் வடிவம் ஆசாரிப்பு கூடாரத்தின் வடிவத்தை மையமாக கொண்டது. அதினுள் மிகப்பெரிய இரண்டு சேராபீன்கள் தேவனது சிங்காசத்தின் மீது வைக்கப்பட்டன (*1* நாளா. *28:2*).

தேவாலயமும் ஏதேனைப்போல் வடிவமைக்கப்பட்டது, விலங்குகள் மற்றும் காய்கனிகள் அதினுள் செதுக்கப்பட்டன (*1* இராஜா. *6-7*). பூக்கள், ஒலிவ மரங்கள், சிங்கங்கள், மற்றும் மாதுளைகள் போன்ற உருவங்கள் அதினுள் செதுக்கப்பட்டது. அது தேவன் பூமியில் முதலில் மனிதர்களுடன் உலாவிய இடத்தினை நினைவுபடுத்தியது.

இஸ்ரவேல் தங்கிய பாளையமும், பின்னர் அவர்கள் சுதந்தரித்த தேசமும், தேவனுடைய வீடாகிய பரிசுத்த ஸ்தலமென்றால், அதற்கு புறம்பே இருக்கும் பகுதிகள் எல்லாம் பரிசுத்தமற்றவை. சீனாய் மலையில் இஸ்ரவேலை சந்தித்த நாட்களுக்கு முன்பே, பாபேலின் நாட்களில் தேவன் தேசங்களை பிற தேவர்களுக்கு பங்காக கொடுத்தார் (உபாக. *4:19-20; 32:8-9*). ஒரு நாள் அவர் தேசங்களை தனக்கென மீட்டுக்கொள்வார், ஆனால் அது வரை அவை இருளின் அதிகாரத்திற்கு உட்பட்ட இராஜ்ஜியம்.

இதனை உணர்த்தும் ஒரு குறிப்பான சடங்கு இஸ்ரவேலருக்கு அருளப்பட்டது. லேவியராகமம *16*'ல் மகா ஒய்வுநாளைக் குறித்த போதனை பரிசுத்தம் மற்றும் பரிசுத்தமற்ற பூமியை குறித்த தெளிவான பாடத்தை உணர்த்தியது.

மகா ஒய்வுநாளன்று இரண்டு ஆட்டுக் கடாக்கள் கொண்டு வரப்பட வேண்டும். ஒரு ஆட்டுக்கடாவின் இரத்தம் ஆசாரிப்பு கூடாரத்தினுள் கொண்டுவரப்பட்டு, அவர்களின் பாவ நிவிர்த்திக்காக தெளிக்கப்பட வேண்டும். அன்று பலியிடப்படும் ஆடு "தேவனுடையது." மற்றொரு ஆடு, போக்கு ஆடு என்றழைக்கப்பட்டது, அதன் மேல் ஆசாரியன் கைகளை வைத்து அதனை வனாந்திரத்தினுள் விட்டுவிடுவான், அது இஸ்ரவேலரின் பாவத்தை வனாந்திரத்திற்குள் எடுத்து செல்லும் அடையாளம். அந்த ஆடு "ஹாசயேலுடையது"

"ஹாசயேல்" என்பது யார்? வனாந்திரத்திற்கு அனுப்பப்படும் ஆடு போக்காடு என்று நமது வேதத்தில் மொழிபெயர்க்கப்பட்டாலும். சவக்கடல் அருகிலிருந்து கண்டெடுக்கப்பட்ட பழைய ஏற்பாட்டின் சுருள்களில் போக்காடு என்று அதனை அழைக்காமல், அது ஹாசயேலுடையது என்று கூறப்பட்டுள்ளது. வனாந்திரத்தில் இஸ்ரவேலர் பயணித்த நாட்களில், அவர்கள் பிசாசுகளுக்கு பயந்தபடியால், அவைகளுக்கு பலி செலுத்தினர் (லேவி. *17:7*). வனாந்திரத்தில் இஸ்ரவேலின் பாளையத்திற்கு புறம்பான பகுதி தீய சக்திகளின் அதிகாரத்தின் கீழிலிருந்தது. அவர்கள் தீய சக்திகளுக்கு பலி செலுத்துவது நிறுத்தப்பட வேண்டும். எனவே ஒரு ஆடு வனாந்திரத்தினுள் அனுப்பப்பட்டது, இஸ்ரவேலின் பாவங்கள் அவர்கள் இருப்பிடத்திலிருந்து தூரமாக நீக்கப்பட்டது என்பதினை அச்செயல் குறித்தது.

## இதின் முக்கியத்துவம் என்ன

புதிய ஏற்பாட்டிலும் தேவன் முற்றிலும் மாறுபட்டவராகவே இருக்கின்றார். அவரது பிரசன்னத்தினுள் நாம் நுழைவதற்கு முன்பு நாம் சுத்தகரிக்கப்பட வேண்டும். இயேசுவின் சிலுவையை விசுவாசிப்பதினால் நாம் சுத்திகரிக்கப்படுகின்றோம்.

நம் சார்பாக இயேசு கிறிஸ்து செய்த செயல்கள் அனைத்திற்கும் ஒரு தெய்வீக அர்த்தமுண்டு. அவரது ஊழியத்தின் தொடக்கத்தில், அவர் பிசாசை மேற்கொண்டு, "மரணத்தின் அதிகாரத்தை" தோற்கடித்தார் (எபி. *2:14*). இயேசு கிறிஸ்து பரிசுத்த நகரத்திற்கு புறம்பே சிலுவையில் அறைப்பட்டார் (எபி. *13:12*). எருசலேம் புண்ணிய ஸ்தலம், ஆனால் இயேசுவோ நம் பாவங்கள் நிமித்தம் அசுத்தமானார்.

இயேசுவின் மரணம் மற்றும் உயிர்தெழுதல் - நம்மை தேவனுடைய சமூகத்தில் நிறுத்தும்படி தகுதிபடுத்தியது. நமது பாவங்கள் "நிக்கப்பட்டன" (ரோமர் *11:27;* மேலும் *1* யோவான் *3:5*). நாம்

அசுத்தமான பாவிகளானாலும், கிறிஸ்துவுக்குள் இருந்தால் பரிசுத்தவான்கள். நாம் குறைவுள்ளவர்களாக இருப்பீனும், கிறிஸ்து அதனை நிறைவாக்குவார். அது எளிமையாக தோன்றினாலும், மிகவும் முக்கியத்துமானது.

இஸ்ரவேலர் நம்மைக் காட்டிலும் பாக்கியசாலிகள் என நாம் சிந்திக்கலாம். அவர்கள் மத்தியில் தேவன் வாசம் செய்தாரல்லவா. அவர்கள் தெய்வீக சக்திகள் மத்தியில் வசித்தவர்கள். இஸ்ரவேலரின் அனுபங்களை பெற்றால் நாமும் இன்னும் அதிகமாக பரிசுத்தமாயிருப்போம் என சிந்திக்கலாம்.

புதிய ஏற்பாடும் அவர்கள் பாக்கியசாலிகள் என்று கூறுகின்றது.

இன்று நமக்கு எது புண்ணிய ஸ்தலம் எனபதினை குறிக்க ஒரு ஆசாரிப்பு கூடாரமோ அல்லது தேவாலயமோ தேவையில்லை. நமது சரீரமே புண்ணிய ஸ்தலம். நமது பூமிக்குரிய சரீரத்தை பவுல் “கூடாரம்” என்றழைக்கின்றார் (2 கொரி. 5:4), எனென்றால் ஆசாரிப்பு கூடாரத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்திலும், தேவாலயத்திலும் பிரசன்னமாகிய பரிசுத்த இறைவன் நமக்குள் வாசம் செய்கின்றார் (ரோமர் 8:9-11). நமது சரீரம் அநித்தியமானது, அது மரித்துவிடும், ஆனால் அது “கைகளினால் கட்டப்படாத” (2 கொரி. 5:1-3), ஒரு பரலோக வீட்டினால் - புதிய ஏதேன் பூமிக்கு வருவதினால் (வெளி. 22:1-3) மாற்றப்படும்.

தேவன் விசுவாசிகளுக்குள் வாசம் செய்வதினால், ஒவ்வொரு திருச்சபையும் - விசுவாசிகளின் கூடுகையும் - ஒரு புண்ணிய ஸ்தலமாகும். ஆதினால் தான் கொரிந்து சபையில் மனதிரும்ப விரும்பாமல் பாவத்தில் நிலைத்திருந்த நபரை சபையை விட்டு நீக்கும்படு, “சாத்தானின் கையில் ஒப்படைக்கப்படும்படி” பவுல் அறிவுறுத்தினார் (1 கொரி. 5:5). சபை தேவன் வசிக்கும் புண்ணிய ஸ்தலம். அதற்கு புறம்பான இடம் சாத்தானின் ஆளுகைக்கு உட்பட்ட இடம். அது பாவம் மற்றும் அழிவுக்குட்பட்ட இடம்.

நாம் யார் என்பதினைக் குறித்த தெய்விக பார்வை நமக்கு அவசியம். நீங்கள் தேவனுடைய பிள்ளை, தேவன் வசிக்கும் பரிசுத்த கூடாரம், அது நம் செய்கைகளினால் நாம் பெற்றுக்கொண்ட ஒன்றல்ல, அது கிறிஸ்துவுக்குள் நாம் இருப்பதினால், தேவனுடைய பிள்ளைகளாய் ஏற்றுக்கொள்ளப்பட்டதினால் (ரோமர் 8:15; கலா. 4:5). நீங்கள் இருளின் இராஜ்ஜியத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, “தேவனது ஒரே பெறான குமாரனுடைய இராஜ்ஜியத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள்” (கொலோ. 1:13).

நாம் ஒரு நாளும், ஒரு இமைப்பொழுதும், கிறிஸ்துவுக்குள் யார் என்பதினை மறந்து விடக்கூடாது.

# அதிகாரம் ஒன்பது

# பரிசுத்த யுத்தம்

பரிசுத்த வேதாகமம் உலக வழிகளிலிருந்து முரண்படுகின்ற புஸ்தகம். மனிதர்கள் அதனை தேவனுடைய வார்த்தையாக ஏற்றுக்கொள்ளாமல் எதிர்க்கின்றனர். அதிலுள்ள சில வேதப்பகுதிகள் கிறிஸ்தவர்களையும் சங்கடப்பட செய்கின்றது. வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பூமியை சுதந்தரிக்க இஸ்ரவேல் செய்த யுத்தம் அதற்கு ஒரு உதாரணம்.

ஏன்? ஏனென்றால் அதில் காணப்படும் கொலைகள். அது மிகவும் கொடூரமானதாக தோன்றுகின்றது. சில பட்டிணங்களை இஸ்ரவேலர் கைபற்றும் போது அதிலுள்ள ஆண்கள், பெண்கள், மற்றும் கால்நடைகளும் கொல்லப்பட வேண்டும்? அதின் மனிதர்கள் சரணடைந்தால் போதாதா? அவர்களை கொல்வதைக் காட்டிலும் அவர்களை நாடு கடத்துதல் மேல் அல்லவா?

இக்கேள்விகளுக்கான ஒரு சில பதில்கள் உண்டு, ஆனால் அதுவும் கிறிஸ்தவர்களுக்கு சங்கடத்தையே உண்டு பண்ணுகின்றது. இஸ்ரவேலன் என்றால் என்ன என்பதினை ஒரு தெய்வீக பார்வையில் பார்த்தால் மாத்திரமே கானான் தேசத்தை அவர்கள் கைபற்றியதற்கான காரணத்தை உணர முடியும்.

## இஸ்ரவேலை குறித்த தெய்வீக தர்க்க சாஸ்திரம்

வாக்குதத்தம் பண்ணப்பட்ட பூமியை சுதந்தரிக்க நடந்த யுத்தத்திற்கு இரண்டு பரிமானங்கள் உண்டு, அவை இரண்டும் இஸ்ரவேலின் உலகப்பார்வையின் பிரதிபலிப்பு. அது அப்பூமியை அவர்கள் மனிதர்கள் வசிக்கும் ஸ்தலமாக மட்டும் பார்க்காமல், தங்கள் ஆவிக்குரிய யுத்தத்தின் ஒரு பகுதியாகவும் உணர்ந்தனர். இதனைக் குறித்து நாம் முன்னமே சிந்திருந்தாலும், அதனை மீண்டும் ஒருமுறை பின் திரும்பி பார்ப்போம்.

பாபேலுக்கு பின் நடைபெற்ற சம்பங்களே அதற்கான முதல் காரணம், தேசங்கள் தனக்கு எதிராக பாபேலில் போராடியபடியால், தேவன் எல்லா தேசங்களுடனும் நேரிடையாக தொடர்புகொள்ள விரும்பவில்லை. எனவே தேசங்களை ஆளும்படியாக அவைகளுக்கான பிரதிநிதிகளாக தன் பரலோக ஆலோசனை சங்கத்தினரை நியமித்தார் (உபாக. *4:19-20; 32: 8-9*). அதற்கு பின் அவர் ஆபிரகாமையும், அவனது மனைவி சாராளையும் அழைத்து அவர்கள் மூலமாக இஸ்ரவேல் என்ற மக்கள் உருவாகும்படி அவர்களுக்கு ஒரு பிள்ளையைக் கொடுத்தார்.

ஆனால் சங்கீதம் *82*'ன்படி தேசங்களை ஆளும்படி தேவன் நியமித்த தன் ஆலோசனை சங்கத்தின் தேவர்கள் தீயவர்களாக மாறினர். அதினால் அவர்கள் தேவனுக்கும், அவரது ஜனங்களான இஸ்ரவேலுக்கு எதிரிகளாகினர். தேவன் இஸ்ரவேலருக்கு கானான் தேசத்தை சுதந்திரமாக கொடுக்க சித்தம் கொண்டபோது, மோசேயும், அவனை சார்ந்த இஸ்ரவேலரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பூமியில் வசிக்கும் நபர்களையும், அவர்கள் தேவர்களையும் தங்களை அழிக்க கூடிய எதிரிகளாக கண்டனர்.

இரண்டாம் காரணம், இஸ்ரவேலரை பொருத்தமட்டில் மிகவும் பயங்காரமானது. இஸ்ரவேல் வாக்குதத்தம் பண்ணப்பட்ட கானானின் எல்லை அருகே நெருக்கியபோது நடந்த சம்பவத்தின் மூல அறியலாம்.

வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பூமியை வேவு பார்க்க பன்னிரண்டு நபர்களை மோசே அனுப்பினான். தேவன் கூறியது போன்றே அது பாலும், தேனும் ஓடுகின்ற பூமி என்ற அவர்கள் சாட்சியளித்தனர் (எண்ணா. *13:27*). மேலும் அவர்கள் கண்ட காட்சி, "நாங்கள் போய்ச் சுற்றிப் பார்த்துவந்த அந்த தேசம் தன் குடிகளை பட்சிக்கிற தேசம்; நாங்கள் அதிலே கண்ட ஜனங்கள் எல்லாரும் மிகவும் பெரிய இராட்சதகர்கள். அங்கே இராட்சதப் பிறவியான ஏனாக்கின் குமாரராகிய

இராட்சதரையும் கண்டோம்; நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிகளைப்போல் இருந்தோம். அவர்கள் பார்வைக்கும் அப்படியே இருந்தோம்" (எண்ணா. *13:32-33*).

இராட்சதர்களைக் குறித்து நாம் முன்னமே சிந்தித்தோம். அவர்கள் ஆதியாகமம் *6:1-4*ன் படி தேவகுமாரர்களுக்கும், மனுஷகுமாரத்திகளுக்கும் பிள்ளைகளாக தோன்றியவர்கள். கானானை வேவு பார்க்க சென்ற இஸ்ரவேலின் வேவுகாரர்கள் கண்ட ஏனாக்கிய இராட்சதர்கள் அவர்களின் வம்சத்தார். அவர்கள் கானான் முழுவதிலும் பரவி காணப்பட்டார்கள், கானானை சுதந்தரிக்க வேண்டுமானால் இஸ்ரவேலர் அவர்களின் தேசங்களையும், பட்டினங்களையும் முறியடிக்க வேண்டும் (எண்ணா. *13:28-29*). கானானை இஸ்ரவேலர் சுதந்தரிக்க அசாதரணமான தோற்றம் கொண்ட இரட்சதர்களை அவர்கள் வீழ்த்த வேண்டும்.

ஏனாக்கியர்களை முறியடிக்க தேவன் இஸ்ரவேலருக்கு துணை புரிவார் என இஸ்ரவேலின் இரண்டு வேவுகாரர்கள் மட்டும் - யோசுவாவும், காலேப்பும் விசுவாசித்தனர். மற்ற பத்து பேரும் அது அசாத்தியமானது என்று மக்களை நம்பிக்கையிழக்க செய்தனர். பார்வோனையும், அவன் சேனைகளையும் முற்றிலும் சங்கரித்த தேவன் தங்களுக்காக யுத்தம் செய்து வெற்றி தருவார் என்பதினை மறந்து, முறுமுறுக்க தொடங்கினர், "நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது; அவர்கள் நம்மைப்பார்க்கிலும் பலவான்கள் என்றார்கள்" (எண்ணா *13:21*).

தேவன் அவர்களுக்கு பதிலளித்தது, "எதுவரைக்கும் இந்த ஜனங்கள் எனக்குக் கோபம் உண்டாக்குவார்கள்? தங்களுக்குள்ளே நான் காட்டின சகல அடையாளங்களையும் அவர்கள் கண்டும், எதுவரைக்கும் என்னை விசுவாசியாதிருப்பார்கள்?" (எண்ணா *14:11*). தேவன் பாபேலின் நாட்களில் மனிதர்களை தள்ளியது போல் இஸ்ரவேலை முற்றிலும் தள்ளி, மோசேயைக் கொண்டு ஒரு புதிய தேசத்தை உருவாக்கும் அளவிற்கு அவரை அது கோபமூட்டியது. அவர் மோசேயிடம் கூறியதாவது: "நான் அவர்களைக் கொள்ளை நோயினால் வாதித்து, சுதந்தரத்துக்குப் புறம்பாக்கிப்போட்டு, அவர்களைப்பார்க்கிலும் உன்னைப் பெரிதும் பலத்ததுமான ஜாதியாக்குவேன் என்றார்" (எண்ணா *14:12*).

தேவன் இஸ்ரவேலர் மீது இரக்கம் பாராட்டும்படி மோசே தேவனிடம் மன்றாடினார் (எண்ணா *14:13-19*). தேவன் அவர்களை மன்னித்தார், இருப்பீனும் அவர்கள் பாவம் தண்டிக்கப்பட்டு, அவர்களுக்கு ஒரு பாடம் கற்பிக்கப்பட வேண்டும். அது மிகவும் கடுமையான பாடம். அது என்னவென்று அவர் மோசேயிடம் கூறியது:

> உன் வார்த்தையின்படியே மன்னித்தேன், பூமியெல்லாம் கர்த்தருடைய மகிமையினால் நிறைந்திருக்கும் என்று என்னுடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன். என் மகிமையும், நான் எகிப்திலும் வனாந்தரத்திலும் செய்த என் அடையாளங்களையும் கண்டிருந்தும், என் சத்தத்துக்குச் செவிகொடாமல், இதனோடே பத்துமுறை என்னைப் பரீட்சை பார்த்த மனிதரில் ஒருவரும், அவர்கள் பிதாக்களுக்கு நான் ஆணையிட்டுக் கொடுத்த தேசத்தைக் காணமாட்டார்கள்.....
>
> இந்த வனாந்திரத்தில் உங்கள் பிரேதங்கள் விழும்; உங்களில் இருபது வயதுமுதல் அதற்கு மேற்பட்டவர்களாக எண்ணப்பட்டு, உங்கள் தொகைக்கு உட்பட்டவர்களும் எனக்கு விரோதமாய் முறுமுறுத்திருக்கிறவர்களுமாகிய அனைவரின் பிரேதங்களும் விழும். எப்புன்னேயின் குமாரன் காலேபும், நூனின் குமாரன் யோசுவாவும் தவிர மற்றவர்களாகிய நீங்கள் நான் உங்களைக் குடியேற்றுவேன் என்று ஆணையிட்டுக்கொடுத்த தேசத்தில் பிரவேசிப்பதில்லை. கொள்ளையாவார்கள் என்று நீங்கள் சொன்ன உங்கள் குழந்தைகளையோ நான் அதில் பிரவேசிக்கச் செய்வேன்; நீங்கள் அசட்டைப்பண்ணின தேசத்தை அவர்கள் கண்டறிவார்கள். (எண்ணா *14:20-31*).

"பத்து முறை" என்று தேவன் உரைத்தது அவர்கள் "மீண்டும் மீண்டும்" தேவனை அசட்டை செய்தனர் என்று பொருள் படும் (ஆதி. *31:7;* யோபு *19:3*). இது மட்டும் தேவன் அவர்கள் முறுமுறுப்புகளை பொருத்துக் கொண்டார். எகிப்திய அடிமைதனத்திலிருந்து மீட்கப்பட்டதை குறித்து மகிழ்வதனைக் காட்டிலும், தங்களுக்கு விருப்பமான உணவு கிடைக்கவில்லை (எண்ணா *11:1-14; 31-35*) மற்றும் சரியான தலைவனை தேவன் கொடுக்கவில்லை (எண்ணா *12:1-16*) என்று குறை கூறினர். ஒவ்வொரு முறையும் பொருமையாயிருந்த தேவன் இம்முறை அவர்களை தண்டித்தார்.

தேவனை விசுவாசியாத சந்ததி மரிக்கும்வரை இஸ்ரவேலர் நாற்பது வருடங்கள் வனாந்திரத்தை சுற்றிதிரிய வேண்டும்.

## இரண்டாம் வாய்ப்பு

வாக்குதத்தம் பண்ணப்பட்ட பூமியை சுதந்தரிக்க இஸ்ரவேலுக்கு இரண்டாம் வாய்ப்பு ஒன்று வழங்கப்படும். இஸ்ரவேல் மக்கள் நாற்பது வருடங்கள் யோர்தானுக்கு கிழக்கு பகுதியை சுற்றிதிரிந்தனர். அப்பகுதி ஆபிரகாமின் சகோதரனின் மகன் லோத்தின் சந்ததி மற்றும், யாக்கோபின் சகோதரனான ஏசாவின் வம்சத்தாரும் வாழ்ந்த நிலப்பகுதி. அங்கு வாழ்ந்தவர்களில் பலர் இஸ்ரவேலுடன் தொடர்புடையவர்கள்.

தேவன் ஒரு நோக்கத்துடன் அவ்வழியாக மோசேயை கொண்டு இஸ்ரவேலரை வழிநடத்தினார். அதின் மூலம் அவர்கள் தங்கள் தூரத்து உறவினர்களை சந்தித்தனர். பாசான் பகுதிகளுக்கு அருகில் அவர்கள் கடந்து வந்தனர். அது மிகவும் பயங்கரமான பூமி. பண்டைய எழுத்துகளில் பாசான் என்ற இடம் “சர்பங்களின் பூமி” என்று வர்ண்ணிக்கப்படுகின்றது. அவர்கள் கடந்து வந்த அப்பகுதியின் இரண்டு பிரதான பட்டிணங்களாகிய அஸ்தரோத் மற்றும் எத்ரே மரணத்தின் இருப்பிடமான பாதாளத்தின் வாசல் என்றழைக்கப்பட்டன (உபாக. *1:4;* யோசு. *13:12).* அவ்வழியின் ஊடாக, நரகத்தின் வாசல் வழியாக தேவன் அவர்களை நடத்தினார்.

அது மட்டுமல்ல.

சீகோன் மற்று ஓக் என்ற இரண்டு இராஜாக்களுக்கு முன்பாக தேவன் அவர்களை கொண்டு வந்தார். அமோரியர்களின் இராஜாக்களான அவர்கள் இரண்டு பேரும் வேதத்தில் காணப்படும் ரெப்பாயிம் என்ற பகுதியை அரசாண்டனர் (உபாக. *3:2-3; 31:4).* உபாகமம் *2:11’*ல் குறிப்பிடப்பட்டுள்ள அனாக்கீம் என்பது ரெப்பாயிமீன் மறுபெயர். இஸ்ரவேல் அச்சம் கொண்ட இராச்சதர்களை போன்ற இராச்சதர்கள் வாழ்ந்த பூமியின் வழியாக தேவன் அவர்களை நாற்பது வருடங்கள் நடத்தி சென்றார் (நாளா. *13:32-33).*

எதற்காக தேவன் அவர்களை அங்கு கொண்டு வந்தார்? அது நாற்பது வருடத்தின் முடிவின் என்ன நடக்க போகிறது என்பதின் முன்னோட்டமே. தங்களுக்கு தேவன் கொடுக்கப்போகும் தேசத்தை சுதந்தரிக்க ஒரு நாள் இஸ்ரவேலர் யோர்தானைக் கடந்துச் செல்ல வேண்டும். அதற்காக தேவன் அவர்களை பரிசோதித்தார். அவர்கள் தேவனை விசுவாசித்து போரிடுவார்களா? அவ்வாறு அவர்கள் விசுவாசத்துடனும், தைரியத்துடனும் போரிட்டு ஜெயித்தால், அது அவர்கள் கானானியருடன் போரிடக்கூடிய தைரியத்தையும், விசுவாசத்தையும் அளிக்கும்.

இதற்கு முன்னர் இஸ்ரவேலர் பயந்து புறமுதுகினை காண்பித்தனர். ஆனால் இச்சமயமோ மோசே கூறியதுப் போல், “ அவனை (சீகோனை) நம்முடைய தேவனாகிய கர்த்தர் நமக்கு ஒப்புக்கொடுத்தார்; நாம் அவனையும் அவன் குமாரரையும் அவனுடைய சகல ஜனங்களையும் முறிய அடித்து……. அப்படியே நம்முடைய தேவனாகிய கர்த்தர் பாசானின் ராஜாவாகிய ஓகையும் அவனுடைய சகல ஜனங்களையும் நமக்கு ஒப்புக்கொடுத்தார்” (உபாக. *2:33; 3:3).* இதனை பல ஆண்டுகளுக்கு பிறகு தீர்க்கதரிசியான ஆமோஸ் பின்வருமாறு நினைவு கூறுகின்றார்: “ நானோ (கர்த்தர்): கேதுருமரங்களைப்போல் உயரமும், கர்வாலி மரங்களைப்போல் வைரமுமாயிருந்த எமோரியனை அவர்களுக்கு முன்பாக அழித்தேன்” (ஆமோஸ் *2:9).*

தேவன் அவர்களுக்கு அளித்த இரண்டாம் வாய்ப்பு கடினமானது. அவர்கள் நாற்பது வருடங்கள் வனாத்திரத்தில் அர்த்தமற்றவாறு சுற்றித்திரிவதற்கான பயத்தை அவர்கள் விட்டுவிடுமாறு தேவன் வற்புறுத்தினார். செங்கடலை இரண்டாக பிளந்த தேவன் அவர்களுடன் இருக்கின்றார் என்பதினை உணர்ந்து அவர்கள் முன் செல்ல வேண்டும்.

## “அழிவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டவர்கள்”

இஸ்ரவேலர் சீகோனையும், ஓகையும் வென்றனர். அது சமயம் தேவன் எதற்காக வாக்குதத்தம் செய்யப்பட்ட பூமியில் வாழ்ந்த அனைவரையும் சங்கரிக்க சொன்னார் என்பதற்கான காராணம் விளங்கியது. வலிமை வாய்ந்த ரொபாதாயீம் பட்டிணங்களில் வசித்த அனைவரும் “அழிவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டவர்கள்” (உபாக. *3:6*). பழிவாங்குதல் அதற்கு காரணமல்ல. மாறாக தேவபுத்திரர்களால் உருவான இராட்சத சந்ததி முழுவதும் அழிக்கப்பட வேண்டும். இஸ்ரவேலரை பொருத்தமட்டில் அச்சந்ததி பிசாசின் பிடியில் உருவானது, அவர்களுடன் இஸ்ரவேலர் இணைந்து வாழ்தல் சாத்தியமற்றது.

நாட்கள் கடந்தன, இஸ்ரவேலர் யோர்தானை கடந்து கானானுக்குள் பிரவேசிக்கும் முன்னமே, மோசே மரித்தான். யோசுவா இஸ்ரவேலருக்கு தலைவனாக நியமிக்கப்பட்டான். யோசுவா வாக்குதத்தம் பண்ணப்பட்ட பூமியை கைப்பற்ற பல படையெடுப்புகளை மேகொண்டான். அது இரண்டு நோக்கங்களை கொண்டது: ஒன்று எதிரிகளைத் துரத்த, இரண்டாவது இராட்சத இனத்தை அழிக்க.

அக்கண்னோட்டதின்படி, வாக்குதத்தம் செய்யப்பட பூமியை கைப்பற்ற நடைபெற்ற யுத்தம், ஒரு பரிசுத்த யுத்தம் - இருளின் அதிகாரத்தின் பிடியில் செயல்பட்ட அந்தகார சக்திகளையும், தேவனை எதிர்த்த தேவர்களுக்கும் எதிராக நடைபெற்ற ஆவிக்குரிய யுத்தம்.

அதற்கான தெளிவான பதில் யோசுவா *11:21-22*’ல் காணப்படுகின்றது.

> அக்காலத்திலே யோசுவா போய், மலைதேசமாகிய எபிரோனிலும் தெபீரிலும் ஆனாபிலும் யூதாவின் சகல மலைகளிலும் இருந்த ஏகோக்கியரை நிக்கிரகம்பண்ணி, அவர்களை அவர்கள் பட்டிணங்களோடும் கூடச் சங்கரித்தான். இஸ்ரவேல் புத்திரரின் தேசத்தில் ஏனாக்கியர் ஒருவரும் மீதியாக வைக்கப்படவில்லை; காசாவிலும் காத்திலும் அஸ்தோத்திலும் மாத்திரம் சிலர் மீதியாயிருந்தார்கள்.

## இதன் முக்கியத்துவம் என்ன

யோசுவாவின் படையெடுப்புகள் பெரும்பாலானவை வெற்றிகரமானது, ஆனால் அவை முழுமையானதல்ல. சில இரச்சதர்கள் தப்பித்தனர், அவர்கள் முக்கியமானவர்களாக கருதப்படாமல் போனாலும், வரப்போகும் சம்பங்களின் நிழலாக அது அமைந்தது. சிலர் காத் என்ற பட்டிணத்தில் தங்கினர். காத் என்பது ஒரு பெலிஸ்திய பட்டிணம் (யோசு. *13:3*) அது தாவீதின் சமயத்தில் காணப்பட்ட கோலியாத் என்ற இராட்சதனின் இருப்பீடம் (*1* சாமு. *17:4*). காத் பட்டிணத்தில் கோலியாத் மாத்திரம் இராட்சதனல்ல (*1* நாளா. *20:5-8*). “அழிவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட” அனைவரும் யோசுவாவின் படையெடுப்பின் நாட்களில் அழிக்கப்படவில்லை, அதின் விளைவுகளை பின்நாட்களில் இஸ்ரவேலர் சந்திக்க நேரிட்டது.

யோசுவாவின் மரணத்தின் சமயம் இஸ்ரவேலர் கானானை முழுவதுமாக கைபற்றவில்லை. இஸ்ரவேலர் புறஜாதியார் அனைவரையும் வாக்குதத்தம் பண்ணப்பட்ட பூமியிலிருந்து விரட்ட வேண்டும் என்ற தேவனது கட்டளைக்கு கீழ்படியவில்லை. அது முழுமையான கீழ்படிதல் அல்ல.

தேவனுடைய வார்த்தையை முழுமையாக நிறைவேற்றாததின் விளைவாக பல நூற்றாண்டுகள் பிரச்சனைகளை சந்தித்தனர். நியாதிபதிகளின் புஸ்தகம் பரிதாபமான ஒரு வரலாற்றுச் சுழற்சியை படம் பிடித்துள்ளது: இஸ்ரவேலர் பகைவர்களால் தொடர்ந்து காயப்படுத்தப்பட்டு, தேவனுக்கு உண்மையாயிருப்பதினை ஏறக்குறைய மறந்தனர். தாவீது மற்றும் சாலாமோனின் நாட்களில் சற்று மாற்றங்கள் தோன்றினாலும், சாலாமோனுக்கு பின்னர் உள் நாட்டு சண்டை மற்றும் விக்கிரக வழிபாட்டின் விளைவாக இஸ்ரவேல் அழிய தொடங்கியது.

படையெடுப்பின் மகிமை பரிதாபமான தோல்வியால் மறைக்கப்பட்டது. வெற்றியின் விளிம்பிலிருந்து தோல்வியை சந்திக்க தொடங்கினர். தனது ஏதேனை மீடக வேண்டுமென்ற தேவனுடைய திட்டம் சீர்குலைந்தது. தீய தேவர்களின் பிடியில் பாபேலின் சமயத்தில் விழ்ந்த

தேசங்கள் மீட்கப்படவில்லை. இஸ்ரவேலர் முறியடிக்கப்பட்டு, சிதறடிக்கப்பட்டனர், வாக்குதத்ததின் பூமி பிற தேவர்கள் மற்றும் மனிதர்களால் கைப்பற்றப்பட்டது. புதிய ஏற்பாட்டின் நாட்களிலும் அந்நிலையே காணப்பட்டது. அதனை சித்தரிக்க பவுல் அதிகாரங்கள், துரைதனங்கள், சிங்காசனங்கள், மற்றும் வல்லமைகள் என்ற பதங்களைப் பயன்படுத்துகின்றார். அப்பதங்கள் பூமியின் இராஜ்ஜியங்கள் மீது இருளின் அதிகாரத்தை பிரதிபலித்தது.

தேவனுடைய பிள்ளைகளின் கீழ்படியாமையும், தேவனுக்கு உண்மையில்லாமையுமே இஸ்ரவேலின் வீழ்ச்சிக்கு காரணம். எதற்காக தேவன் மனிதர்கள் முழமாக தன் திட்டத்தை நிறைவேற்ற முற்படுகின்றார். ஏதேனில் என்ன நடந்தது என நினைவு கூறுவோம். நாம் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்ட அவரது பூலோக குடும்பம். இப்பூமியை அவர் அட்சி செய்யும் திட்டத்தில் மனிதர்களுக்கு பங்கு உண்டு. மனிதர்களை புறம்தள்ளி தேவன் தன் திட்டத்தை நிறைவேற்றினால், அது தேவன் தன் திட்டத்தை செயல்படுத்த வலிமையற்றவர் என்று எண்ணப்படும். தேவன் தன் திட்டங்களை நிறைவேற்ற வல்லமையுள்ளவர். நாம் முன்னமே சிந்தித்ததுப் போல் தேவன் ஒருபோதும் தவறுவதில்லை.

மனிதகுலம் தேவனது ஏதேனிய இராஜ்ஜியத்தை புதுபிக்க நம்படத்தக்கதல்ல. தேவன் மாத்திரமே தன் உடன்படிக்கையின் நியமத்தை காத்துக்கொள்ளக் கூடும். இருப்பினும் மனிதர்களை தன் திட்டத்திலிருந்து தேவன் நீக்க முடியாது. எனவே தேவன் மனிதனாக வர வேண்டும். தனது கட்டளைகள் மற்றும் உடன்படிக்கையை அவர் மனிதனாக நிறைவேற்றி மனிதகுலத்தின் பாவத்தின் தண்டனையை சுமந்துதீர்க்க வேண்டும். அத்திட்டம் அவர் மனிதனாக தோன்றும் வரை இரகசியமாக காக்கப்பட வேண்டும், புத்திசாலிதனம் வாய்ந்த தீய சக்திகள் அதனை அறிந்து எதிர்காதவாறு அது அவர்கள் அறிவுக்கு மறைக்கப்பட வேண்டும். அது சுலபமான காரியமல்ல.

## அதிகாரம் பத்து

# சாதாரண பார்வைக்கு மறைக்கப்பட்டவை

மனித வீழ்ச்சிக்கு பின், தேவன் தான் முதலில் படைத்த ஏதேனை புதுபிக்க முயற்சி செய்து வருகின்றார்: அதின் மூலம் தேவனும், மனித குடும்பமும் பூமியில் ஒன்றாய் வசிக்கக் கூடும். தேவன் தன் ஆளுகையை பூமி முழுவதும் பரப்புவதற்காக ஆதாமையும், ஏவாளையும் பலுகி பெருக கட்டளையிட்டார். தேவன் பூமி முழுவதும் பரலோகம் போல் இருக்க வேண்டுமென விரும்பினார், மனிதகள் தேவனில் மகிழவும், மற்றும் தேவன் மனிதர்களில் மகிழவும் விரும்பினார். மனித விழ்ச்சிக்குபின் என்ன நடந்தது என்பது நமக்கு தெரியும்.

## விழ்ச்சியின் வரலாறு

மனிதகுலம் பாவம் செய்தப்டியால் தேவனது சமுகத்திலிருந்து அவர்கள் துரத்தப்பட்டனர். ஏதேன் மூடப்பட்டது. தெய்வீக எதிரியான, சர்ப்பம், விரட்டப்பட்டு - அதாவது தேவ சமூகத்திலிருந்தது பூமிக்கு துரத்தப்பட்டது, பூமியில் மரணம் ஆட்சி செய்தது, அதில் நித்திய வாழ்வு இல்லை. சாத்தான் மரணத்தின் தேவனாக மாறினான், அவன் பூமியில் பிறக்கும் அனைத்து மனிதர்களும் பாவம் செய்தபடியால், பாவத்தின் சம்பளமாகிய மரணம் அவர்களை பற்றிக்கொண்டபடியால், அவர்களை தன் சொந்தமாக உரிமை கொண்டான். (ரோமர் *6:23*).

பெருவெள்ளத்திற்கு பின், தேவன் நோவாவின் குடும்பத்தின் மூலம் தான் விரும்பிய ஏதேனை ஸ்தாபிக்க விரும்பினார்: அவர்களை பலுகி, பெருக சொன்னார். தேவன் விரும்பிய ஏதேனை உருவாக்க மனிதர்களுக்கு அளிக்கப்பட்ட சந்தர்ப்பத்தை அவர்கள் பயன்படுத்தாமல் மீண்டும் தேவனுக்கு எதிராக முரட்டாட்டம் செய்தனர். தேவனுக்கு கீழ்படிந்து அவரது இராஜ்ஜியத்தை பூமி முமுவதும் ஸ்தாபிக்காமல், தங்களுக்கென்று ஒரு கோபுரம் கட்ட முற்பட்டனர்.

தேவன் அதனை அங்கரீயாததினால், அவர்கள் மீண்டும் தோல்வியை சந்தித்தனர். அவர் மனிதர்களின் பாஷையை ஒருவருக்கொருவர் புரியாதபடி செய்து, அவர்களை தனது தெய்வீக ஆலோசனை சங்கத்தை சேர்ந்த தூதர்களுக்கு பங்காக கொடுத்தார். அதின் பின்னர், தனக்கென்று ஒரு புதிய மனித குடும்பத்தை தெரிந்துகொண்டார், அவர்களே ஆபிரகாம் மற்றும் சாராள். ஆபிரகாமின் சந்ததியின் வழியாக தன் இராஜ்ஜியத்தை புதுபித்த பின்னர், அவர் மீண்டும் பூமியின் இராஜ்ஜியங்களை தன் பங்காக கொள்வார் (ஆதி. *12:3*).

எனவே இஸ்ரவேலை எகிப்திலிருந்து விடுவித்து, சீனாய்க்கு வழிநடத்தி, இறுதியாக வாக்குதத்தம் செய்யப்பட்ட பூமிக்கு அழைத்து வந்தார். இஸ்ரவேல் மீண்டும் தோல்வியுற்றனர். எனவே தேவன் தாவீதை எழுப்பினார், அவன் பின் சாலமோன் தோன்றினான். ஆனால் சாலமோனுக்கு பின்னர், இஸ்ரவேலர் அந்நிய தேவர்களை பின்பற்றி, ஒருவருக்கொருவர் எதிராக மாறினர். அதின் விளைவாக தேவன் அவர்களை வாக்குதத்தம் செய்யப்பட்ட பூமியிலிருந்து சிறையிருப்புக்கு அனுப்பினார்.

தேவனை பின்பற்றாத மனிதகுலத்தின் வரலாறு ஒரு தோல்வியின் வரலாறு. அதின் காரணம் மனித வீழ்ச்சிக்கு பின் அவர்கள் தொலைந்து போனார்கள். மனிதனாக பிறந்த அனைவரும் குறைவுள்ளவர்களாய், தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டர்களாய் மண்ணில் உதித்தனர். தேவனது இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கும்படி எந்தவொரு மனித தலைவனையும் நம்ப முடியாது. அவர்கள் தேவனுக்கு மட்டுமே உண்மையுள்ளவர்களாய் வாழாமல், தங்கள் வழியில் செல்லவே விரும்புவர். அவர்கள் பாவம் செய்து, தேவனது சத்துருவான மரணத்தின் தேவனை சேர்ந்துக்கொள்வர். ஆனால் தேவனது திட்டம் மனிதர்கள் மூலமாகவே நிறைவேற்றப்பட வேண்டும், மனிதர்கள் புதியவர்களாக மாற்றப்பட்டு, அவர்கள் மேல் விழுந்த சாபம் விலக்கப்பட்டால் மாத்திரமே அது சாத்தியமாகும்.

அவர்களை புதியவர்களாய் மாற்ற தேவன் ஒரு திட்டம் வைத்திருந்தார்.

## விடையும் - அதிலிருந்த பிரச்சனையும்

தேவ திட்டம் நிறைவேற ஒரு மனிதன் அவசியம் - அவர் பாவத்தின் சோதனையை வென்று, தேவனுக்கு எப்பொழுதும் கீழ்படிந்து, அவரது இராஜ்ஜியத்திற்கு தகுதியாக, மரணத்தின் சாபத்தை தன் மரணம் மற்றும் உயிர்தெழுதலின் மூலம் நீக்க வேண்டும். அது தேவன் மனிதனாக அவதரித்தால் மாத்திரமே சாத்தியம். தேவன் மனிதர்களுக்கான தன் திட்டத்தை, ஏதேனை மீட்கும் செயலை இயேசு கிறிஸ்துவின் மூலம் நிறைவேற்றுவார். மனிதர்களின் பாவம் மன்னிக்கப்பட்டு, தேவர்களைப் போல் அவர்கள் இயேசு கிறிஸ்துவின் உயிர்பிக்கும் வல்லமையைக் கொண்டு மாற்றப்பட்டால் மாத்திரமே தேவனது திட்டம் நிறைவேற்றப்படும் (1 யோவான் 3:1-3).

அதில் ஒரு சிக்கல் இருந்தது. தேவன் மனிதனாகி, தனது மரணம் மற்றும் உயிர்தெழுதலின் மூலம் தேவன் ஆதியில் உருவாக்கிய ஏதேனை மீண்டும் உயிர்ப்பிப்பார் என்பதினை இருளின் வல்லமைகள் அறிந்தால் அதனை அவர்கள் எதிர்க்காமல் இருப்பதில்லை.

இதனை கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்தில் பவுல் பின்வருமாறு விளக்கியுள்ளார்:

*உலகத்தோற்றத்திற்கு முன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவஞானத்தையே பேசுகிறோம். இதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை; அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே. (1 கொரி. 2:7-8)*

யாரை குறித்து பவுல் பேசுகின்றார்? பிரபுக்கள் என்ற பதம் பொந்தியு பிலாத்து மற்றும் யூத தலைவர்களை குறிக்கலாம் - பிரபுக்கள் என்ற பதம் தெய்விக, தீய சக்திகளை குறிப்பதற்கும் பவுல் இந்நிருபத்தில் பயன்படுத்தியுள்ளார் (எபே. 2:2). இயேசுகிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்தெழுதலே தேவனது திட்டத்தை நிறைவேற்றும் ஆற்றலுடையது, எனவே அதனை குறித்த செய்தி தீய சக்திகளுக்கு அறிவிக்கப்படாமல் காக்கப்பட வேண்டும்.

ஆனால் அதின் இரகசியத்தை எவ்வாறு காக்க முடியும்?

## மறைபொருளாக காக்கப்பட்ட மேசியா

நசரேனாகிய இயேசுவே அந்த மேசியா, அவரது மீட்பின் செயலே ஏதேனை மீண்டும் உயிப்பிக்கும். ஆனால் மேசியாவை குறித்த திட்டம் இரகசியமாக காக்கப்பட்டது என்று நான் சொன்னது உங்களுக்கு ஆச்சரியமாக தோன்றியதா? பழைய ஏற்பாட்டினை படித்து அதனை நாம் அறிந்துக்கொள்ள முடியாதா? இல்லை, நம்மால் கூடாது.

நீங்கள் நம்பினாலும் நம்பாமல் போனாலும், பழைய ஏற்பாட்டில் ஒரு வசனம் கூட மேசியாகிய தேவன் மனிதனாக அவதரித்து மனிதகுலத்தின் பாவத்திற்காக மரிப்பார் என்று கூறவில்லை. “பாடுபடும் ஊழியனை” குறிக்கும் ஏசாயா 53:11’ல் கூட அவ்வாறு குறிப்பில்லை. மேசியா என்ற பதம் அவ்வதிகாரத்திலோ அல்லது ஏசாயாவின் பிற அதிகாரங்களிலோ தோன்றவில்லை, “தாசன்/ஊழியன்” என்ற ஏசாயா 53’ம் அதிகாரம் குறீப்பிடுவது இரட்சகரை அல்ல, மாறாக இஸ்ரவேல் தேசத்தினையே (எசா. 41:8; 44:1-2, 21; 45:4; 48:20; 49:3). மேசியா என்ற பதம் “பிரித்தெடுக்கப்பட்ட” என்ற பொருள் கொள்ளும், அது தாவீதை குறிக்கவோ அல்லது அவனது வம்சத்தில் அவனுக்கு பின் தோன்றிய பிற இராக்களைகளை குறிக்கவே ஏசாயாவில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

பழைய ஏற்பாட்டில் மேசியாவை குறித்த வெளிபாடு மறைபொருளாக இருந்தது என்று நான் கூறியதற்கு சான்று புதிய ஏற்பாட்டில் தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளது.

தான் எருசலேமில் மரிக்க போவதை குறித்து இயேசு அறிவித்த போது சீஷர்கள் என்ன பதிலளித்தனர் என்பதை சிந்தித்து பாருங்கள். அவ்வறிப்பு அவர்களை உலுக்கி, கவலைக்குள்ளாக்கியது (மத். 17:22-23; மாற்கு 9:30-32). அவர்கள் “நாங்கள் இதனை குறித்து பழைய

ஏற்பாட்டில் படித்துள்ளோம்," என பதிலளிக்கவில்லை. தன் மரணத்தை குறுத்து பேசிய இயேசுவை பேதுரு கடிந்து கொண்டார் (மத். *16:21-23*).

தேவனது புதிய திட்டத்தை குறித்த தெளிவோ, சிந்தனையோ சீஷர்களிடம் இல்லாதிருந்தது. அவர்கள் இயேசு கிறிஸ்து பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகளைப் போல் அற்புதங்கள் செய்து தாவீதின் சிங்கசனத்தில் அமரப் போகும் அவனது குமாரனாக கண்டனர்.

இயேசு கிறிஸ்து உயிர்தெழுந்த பிறகும் கூட, அவரை பாடுபடும் மேசியாவாக அவர்கள் அறிந்துக்கொள்ளும்படி அவர் அவர்கள் கண்களை திறப்பது அவசியமாக இருந்தது, உயிர்த்தெழுந்தப் பின் அவர்களுக்கு தோற்றமளித்த அவர், கூறியது:

> "அவர்களை நோக்கி: மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக்குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேறவேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக்கொண்டுவந்த விசேஷங்கள் இவைகளே என்றார்." அப்பொழுது வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்தார். (லூக்கா *24:44-45*)

தேவனது "புதிய திட்டமான" - அவர் மரித்து, உயிர்தெழுவதின் மூலம் மனித வீழ்ச்சியின் சாபத்தை நீக்குவது பழைய ஏற்பாட்டில் தெளிவாக புரிந்துக் கொள்ளக்கூடாமல் போனது. இருப்பீனும் அதனை குறித்த வெளிப்பாடு பழைய ஏற்பாடு முழுவதும் பரவலாக காணப்பட்டது. ஆனால் ஒருப்போதும் அது ஒரு இடத்தில் முழுமையாக கூறப்படவில்லை. மேசியாவைக் குறித்த செய்தி மறைபொருளாக காக்கப்பட்டது, அதனை ஒரு சிலர் மாத்திரமே அறிந்திருந்தனர்.

புத்திசாலிகளான தீய சக்திகள், வாக்குத்தத்தம் செய்யப்பட்டது போல் தாவீதின் குமாரன் பிறந்தார் என்பதினை தெளிவாக அறிந்திருந்தனர் (மத். *8:28-29*; லூக்கா *4:31-35*). அது மட்டுமே அவர்களால் பழைய ஏற்பாட்டிலிருந்து அறிய முடிந்தது. ஆனால் இயேசு கிறிஸ்து தனது மரணம் மற்றும் உயிர்தெழுதலின் மூலம் பாவத்தின் சாபத்தை நீக்க வந்தார் என்பதினை அவர்கள் அறியவில்லை.

பவுல் கூறியது போல், அதனை அவர்களோ அல்லது சாத்தானோ அறிந்திருந்தால் யூதாசை போன்றவர்களை தூண்டி அவரை கொலை செய்திருக்கமாட்டார்கள். பிசாசும், அவனை சார்ந்தவர்களும் முட்டாள்களல்ல, அவர்களுக்கென்று ஒரு திட்டமுண்டு. ஆனால் இயேசுவை கொலை செய்யும்படி அவர்கள் வஞ்சிக்கப்பட்டனர். அவரை கொலை செய்ததின் மூலம் தங்கள் அழிவை அவர்களே தேடிக் கொண்டனர். அது ஒரு தெய்வீக செயல்.

## மேசியாவை குறித்த சான்றுகள்

பழைய ஏற்பாட்டில் மேசியாவை குறித்து கொடுக்கப்பட்ட மறைமுகமான சான்றுகள் சிலவற்றை சீஷர்களை விட நம்மால் தெளிவாக புரிந்துக்கொள்ள முடியும். தாவீதின் குமாரனாக தோன்றப் போகும் தெய்வீக மேசியா பாடுபட்டு மரித்து, பின்னர் உயிர்தெழுந்து பாவத்தின் சாபத்தை நீக்குவார் என்ற நேர்முகமாக ஒரே வசனத்தில் காணக்கூடாமல் போனாலும், அதனைக் குறித்த செய்தி பழைய ஏற்பாடு முழுவதும் ஒரு தொடராக கொடுக்கப்பட்டது. புதிய ஏற்பாட்டின் வெளிச்சத்தில் பழைய ஏற்பாடு எவ்வாறு அதனை வெளிப்படுத்தியது என நம்மால் அறிய முடியும்.

உதாரணமாக, "யார் தேவனுடைய குமாரன்?" என்று கேள்வி எழுப்பினால். பழைய ஏற்பாட்டில் அதற்கு பதி "இயேசு" அல்ல. ஆதாம் தேவனுடைய குமாரன் - அவனே முதல் தோன்றிய மனிதன். இஸ்ரவேல் தேவனுடைய புத்திரன் (யாத். *4:23*); ஓசியா *11:1*). இஸ்ரவேலின் இராஜா தேவ குமாரன் என அழைக்கப்பட்டார் (சங். *2:7*). புதிய ஏற்பாட்டில், இயேசு "இரண்டாம் ஆதாம்" மற்றும் "தேவகுமாரன்" என அழைக்கப்பட்டுள்ளார் (ரோம். *1:4*; *1* கொரி. *15:45*; *2* கொரி. *1:19*; எபி. *4:4*).

"யார் தேவனுடைய தாசன்?" என நாம் கேட்க கூடும். ஆதாம் தேவனுக்கு ஊழியம் செய்தான் (ஆதி. *2:15*). இஸ்ரவேல் தேவனுடைய தாசன் என்றழைக்கப்பட்டுள்ளது (ஏசா. *41:8*; *44:1-2,21*; *45:4*; *48:20*; *49:3*). தாவிதும் அவனது வழியில் தோன்றிய பிற இஸ்ரவேல் இராஜாக்களும்

தேவனுடைய தாசன் என்றழைக்கப்பட்டனர் (2 சாமு. 3:18; சங். 89:3; 1 இராஜாக்கள் 3:7; 2 நாளாகமம் 32:16). இயேசுவும் தேவனுடைய தாசன் என்றழைக்கப்பட்டுள்ளார் (அப்போஸ்தலர் 3:13; 4:30; பிலிப். 2:1-8).

தேவகுமாரர்கள் மற்றும் தேவ தாசர்கள் பாடுபட்டனரா? அவர்களது பூலோக வாழ்க்கை ஒரு கட்டத்தில் நிறைவு பெற்றதா? அவர்களுக்கு புதிய ஏதேனில் ஒரு எதிர்காலம் உள்ளதா? இக்கேள்விகளுக்கெல்லாம் பதில் ஆம் என்பதே. ஆதாம், இஸ்ரவேல், மற்றும் தாவீதின் வம்சத்தில் தோன்றிய இராஜாக்கள் அனைவரும் அவர்கள் வசித்த தேவ சமூகத்திலிருந்து விரட்டப்பட்டனர் (ஏதேன் அல்லது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பூமி). இருப்பீனும் அவர்கள் தேவனோடுக் கூட புதிய ஏதேனில் உயிர்தெழுந்த இயேசுவுடன் வாழும்படி மீட்கப்படுவார்கள்.

நான் கூற விரும்புவது என்னவென்றால், இவையனைத்தும் இயேசு கிறிஸ்துவை முன்குறிக்கும் அடையாளங்கள், இயேசு அவ்வடையாளங்களின் நிறைவு. இவ்வாடையாளங்கள் அனைத்தும் ஒன்று திரட்டப்பட்டு ஒன்றிணைக்கப்பட்டால் அதின் நிறைவான இயேசு கிறிஸ்துவை நம்மால் காண முடியும். இவை தெளிவாக வெளிப்பட்டாலும், பழைய ஏற்பாட்டின் நாட்களில் காணக்கூடாத மறைபொருளாக இருந்தது.

## இதன் முக்கியத்துவம் என்ன

அறிவுகூர்மை நிறைந்த தீய சக்திகளான - லோகத்தை ஆளும் சாத்தான், பிசாசுகள், மற்றும் தேவர்களுக்கு, எல்லாம் தெரியாது. தேவனது மனதில் அவர் என்ன திட்டம் வைத்திருக்கின்றார் என்பதினை அவர்கள் முழுமையாக அறிவதில்லை, அறிந்துகொள்ளவும் முடியாது. அவர்களுக்கு எல்லாம் தெரிந்திருக்கக் கூடும் என நாம் நினைக்கலாம், ஆனால் அது உண்மையல்ல. தேவன் ஒருவர் மாத்திரமே சகலத்தையும் அறிந்தவர். அவர் நம் பக்கம் இருக்கின்றார்.

மனிதன் சாத்தானுக்கு கீழ்படிந்து பாவம் செய்தபடியால், நாம் அனைவரும் அவனது ஆளுகைக்கு உட்பட்டிருக்கின்றோம் (ரோமர் 5:12). சபிக்கப்பட்ட சர்ப்பம், தள்ளப்பட்டு, நரகத்தில் இருப்பவர்கள் அனைவரையும் ஆளும் அதிகாரம் பெற்றது. மனிதகுலம் அனைத்தும் பாவத்தில் வீழ்ந்தபடியால், அனைவரும் மரித்து, பிசாசு ஆளுகை செய்யும் மரித்தோரின் இராஜ்ஜியத்தில் தள்ளப்பட் வேண்டும்.

ஆனால் இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்து, மரணத்திலிருந்து உயிர்தெழுந்ததின் மூலம் தேவனது இரட்சிப்பின் திட்டத்தை நிறைவேற்றியபோது அந்நிலை மாற்றப்பட்டது. தேவனது ஏதேனை மீண்டும் உதிக்க செய்ய வேண்டுமென்றால் மனிதகுலம் மரணத்தின் சாபத்திலிருந்து மீட்கப்பட வேண்டும். இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் அனைவரும், தேவனது குடும்பத்தில் அவரது இராஜ்ஜியத்தில் சேர்க்கப்பட்டு, மரணத்தின் சாபத்திலிருந்தும், மரணத்தின் அதிபதியின் கையிலிருந்தும் மீட்கப்பட்டுள்ளனர். எனவே தான் இயேசு கிறிஸ்து தன் இராஜ்ஜியத்தை கட்டும் ஊழியத்தினை தொடங்கியபோது (லூக்கா 10:1-9), “சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன்,” எனக் கூறினார் (லூக்கா 10:18). இயேசு கிறிஸ்து, தனது மரணமும், உயிர்தெழுதலும் பாவத்தின் கடனை முற்றிலும் அடைத்து, அவர்கள் மீது சாத்தானுக்கு இருக்கும் உரிமையை நீக்கம் என்று அறிதிருந்தார். இயேசுவின் இராஜ்ஜித்தின் தொடக்கம்தனது, மரணத்தின் ஆண்டவனுடைய முடிவின் தொடக்கம்.

நமது அடையாளம் என்ன எனபதினை நாம் நினைவில் கொள்ள வேண்டும். விசுவாசிகள் ஒன்றிணைக்கப்பட்ட தேவனுடைய ஆலயம், அவர்கள் கிறிஸ்துவின் சரீரம் என்றழைக்கப்படுகின்றார். இயேசுவின் சரீரம் உயிர்தெழுப்பட்ட சரீரம். அவர் உயிர்தெழுந்ததுப் போல் நாமும் உயிர்தெழுவோம் (1 கொரி. 15:20-23). அவர் மரித்தோரிலிருந்து உயிர்தெழுந்த முதற்பலன். நாம் “பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சபை” (எபி. 12:22-24). யோவான் சொன்னதுபோல், “அவரது நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்” (யோவான் 1:12). தேவனது பிள்ளைகள் மரணத்திலிருந்து உயிர்பிக்கப்பட போவதால் அவர்கள் மீது *சாத்தானுக்கு அதிகாரமில்லை*. ஜீவனுள்ளோரை மரித்தோர் மத்தியில் தேட வேண்டிய அவசியமில்லை.

தேவன் தனது திட்டத்தை முழுமையாக மனிதர்களுக்கோ அல்லது தேவர்களுக்கோ, உண்மையுள்ளவர்களுக்கோ அல்லது எதிராளிகளுக்கோ வெளிப்படுத்த முடியாது. ஆனால் தேவன் மேசியா மாம்சத்தில் தோன்றுவார், ஏதேனின் இராஜ்ஜியத்தை உயிர்ப்பிப்பார் என்று தெளிவாக அறிவித்தார். அவ்வறிவே மனிதர்கள் தேவனை விசுவாசிக்கவும், இருளின் அதிகாரத்தை அவர்களது செயலினால் நியாயம்தீர்ப்பதற்கும் போதுமானது என அடுத்த இரண்டு அதிகாரங்களில் நாம் சிந்திப்போம்.

# அதிகாரம் பதினொன்று

# தெய்வீக நோக்கம்

சதாரண பார்வைக்கு பழைய ஏற்பாடு எவ்வாறு மேசியாவின் வருகையை மறைத்தது என கடந்த அத்தியாயாத்தில் சிந்தித்தோம். இயேசு கிறிஸ்து மனிதனாக உதித்து மனுகுலத்தின் பாவத்தை மீட்பதற்காக அவர்களுக்காக சிலுவையில் மரித்து, மரணத்திலிருந்து எழுவதேது, ஏதேனை தேவன் மீட்கும் திட்டத்தின் திறவுகோல்.

தேவன் மனிதனாக வருவதின் மூலம் மாத்திரமே தாவீதின் வம்சத்தில் பாவத்தில் விழாமல், ஆவிக்குரிய வாழ்வில் தடுமாறாமல் தேவனுடைய பிள்ளைகளை வழிநடத்தும் ஒரு இராஜா உதிக்கக் கூடும். அந்த இராஜா தன் மக்களுக்காக பரிகாரமாக மரித்து, உயிர்தெழுவதின் மூலமாக மாத்திரமே பாவத்திற்கு எதிரான தேவனுடைய நீதி நிறைவேற்றப்பட்டு, மனிதர்கள் மீட்கப்பட கூடும். மேசியாவின் செயலினால் மாத்திரமே தேவனது குடும்பத்தில் மனிதர்கள் மீண்டும் இணைக்கப்பட்டு, தேவனது திட்டத்தின்படி அவர்களால் ஏதேனை ஆள முடியும்.

அதற்காக என்ன செய்யப்பட வேண்டும் என சிந்திக்கவும்: இருளின் அதிகாரத்திலிருக்கும் தெய்வீக சக்திகளை இயேசு கிறிஸ்து வஞ்சித்து, தாங்கள் என்ன செய்கின்றோம் என்பதினை அறியாதவர்களாய் தன்னை அவைகள் கொலை செய்யும்படி தூண்ட வேண்டும் (*1* கொரி. *2:6-8*), அவர்கள் செய்வது என்னவென்று அவர்கள் அறிந்தால் தேவனை சிலுவையில் அறைப்பட விடமாட்டார்கள்.

இதின் பின்னயில் இயேசுவின் வாழ்வையும், ஊழியத்தினையும் காண்பது அதிக அர்த்தம் கொள்ளும். இயேசு கிறிஸ்து ஊழியம், சிலுவைக்கு நேராக அவரை நடத்தியது ஒரு தற்செயலான சம்பவமாக புதிய ஏற்பாட்டின் வாசகர்கள் கருதலாம். சுவிசேஷ நூல்கள் அனைத்தும் ஒரே சம்பங்களை நமக்கு பதிவு செய்யவில்லை - உதாரணமாக, இயேசு கிறிஸ்துவின் பிறப்பு இரண்டு சுவிஷேச நூல்களில் மாத்திரமே காணப்படுகின்றது (மத்தேயு மற்றும் மாற்கு), மற்றும் ஒரு நூல் மாத்திரமே ஞானியரைக் குறித்து பேசுகின்றது (மத். *2*). சில சம்பங்கள் சற்று வித்தியசமானவைகளாக சுவிசேஷங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ள சம்பங்களான - இயேசு நோயாளிகளை குணமாக்குதல், தேவனுடைய இராஜ்ஜியத்தை குறித்து பிரசங்கித்தல், பாவிகளை மன்னித்தல், மாய்மாலக்காரர்களை கண்டித்தல் - போன்றவை ஒரு ஞானமுள்ள போதகன் செய்த தற்செயலான செயல்கள் மாத்திரமல்ல. நம் கண்களுக்கு மறைவான சில கருத்துக்களை சுவிசேஷ நூல்கள் உள்ளடக்கியது. இயேசு அவ்வாறு செய்வதற்கு ஒரு முக்கியமான காரணமுண்டு.

## சாதுரியமாய் தீமையை முறியடித்தல்

இயேசு கிறிஸ்துவின் பொது ஊழியம் அவரது ஞானஸ்நானத்துடன் தொடங்கியது. அப்பொழுது தான் தேவன் வெளிப்படையாக இயேசுவை தனது குமாரனென்று அறிவித்தார் (மாற்கு *1:11*), அது சமயம் அவரை "உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கின்றவர்" என யோவான் ஸ்நானகன் அறிமுகப்படுத்தினார் (யோவான் *1:29*). இவ்வசனங்களை நாம் படிக்கும் வேளையில் உடனடியாக நாம் சிலுவையைக் குறித்து சிந்திப்போம். ஆனால் யோவானின் சீஷர்கள் அவ்வாறு சிந்திக்கவில்லை. அதனைக் கேட்ட ஒருவரும் அப்படி கருதவில்லை. மூன்று வருடங்களுக்கு பிறகு தனது ஊழியம் நிறைவடையும் தருணத்தில் இயேசு தனது மரணத்தைக் குறித்து பேசிய பொழுது அவரது சீஷர்கள் அதனை நிராகரித்தனர் (மதி. *17:22-23;* மாற்கு *9:30-32*). தங்கள் தேவன் சீக்கிரம் மரிப்பார் என்பதினை அவர்கள் விரும்பவில்லை, அது பைத்தியகாரதனமாக அவர்களுக்கு தோன்றியது. இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் ஆதியில் தீர்மானிக்கப்பட்டது என்பதினை அவர்கள் புரிந்துக்கொள்ளவில்லை. ஏன் அவர்களால் புரிந்துக்கொள்ள முடியவில்லை? அதின் காரணம் நாம் கடந்த அத்தியாயத்தில் படித்ததுப் போல், அது பழைய ஏற்பாட்டில் வெளிப்படையாக அறிவிக்கப்படவில்லை.

தனது ஞானஸ்நானத்திற்கு பின் இயேசுவானவர் சாத்தானை கண்டிக்கும்படி ஆவியானவரால் வனாந்திரத்திற்கு நடத்தப்பட்டார் (மத். *4:1;* மாற்கு *1:12;* லூக்கா *4:1-13*). இயேசு யார் என்பதினை

சாத்தான் அறிந்திருந்தான் என இயேசு கூறியுள்ளார். மேசியா என்பவர் தேவனது "குடும்ப ஆளுகையை" பூமியில் மீண்டும் உதிக்க செய்பவர் என்பதினை அவன் அறிவான். "இவ்வுலகத்தின் தேவனான" சாத்தான் இஸ்ரவேல் உருவாவதற்கு முன்பு தன் வசம் கிடைத்த பாபேலின் இராஜ்ஜியங்களை இயேசு மீட்பார் என எதிர்பார்த்தான் (உபாக. *4:19-20; 32:8-9*).

இயேசுவை பிசானானவன் சோதித்த சம்பவத்தை நினைத்துப் பார்க்கலாம். சாத்தான் மூன்று முறை அவரை சோதித்தான் (மத். *4:3-11*). சாத்தானின் மூன்றாவது சூழ்ச்சி பூமியின் இராஜ்ஜியங்கள் அனைத்தினையும் தேவகுமாரனுக்கு பரிசளிப்பதே (மத். *4:8-9*), இயேசு அதனை மீட்க வந்ததாகவே அவன் நினைத்தான்:

> மறுபடியும், பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல இராஜ்ஜியங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குச் காண்பித்து:நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான்." (மத். *4:8-9*)

தேவனுடைய திட்டத்தை மாற்ற சாத்தானின் தந்திரமான சூழ்ச்சி அது. அது தேவன் விரும்பினது போல் எல்லா தேசங்களையும் மீண்டும் அவருக்கு சொந்தமாக்கும். அதற்கு இயேசு பிதாவுக்கு பதிலாக சாத்தானை தொழுதுகொண்டால் மாத்திரம் போதும், அவரது வாஞ்சை நிறைவேறும்.

தேவ திட்டம் நிறைவேற இயேசு மரிக்க வேண்டும் என்பதினை அறியாமல் சாத்தான் இயேசுவிடம் அவ்வாறு வியாபாரம் பேசினான். இயேசு அவனிடன் தன் மரணத்தை குறித்தோ அல்லது தேவ திட்டத்தை குறித்தோ பேசாமல் அவனை துரத்தி விடுகின்றார். தேவன் தன்னுடையதை தான் விரும்பிய நேரத்தில், விரும்பிய வழியில் மீட்டுக்கொள்வார். இயேசுவின் திட்டம் தேசங்களை ஆழ்வது மட்டுமல்ல. ஒரு குடும்பத்தை மீண்டும் கட்டுவதே. அக்குடும்பத்தில் இஸ்ரவேல் மட்டுமல்ல எல்லா தேசத்தாரும் இடம் பெறுவர், அதற்கு பாவம் முதலாவது பரிகரிக்கப்பட வேண்டும். தேவன் முதலில் திட்டமிட்டதுப் போல், அவரது ஆளுகை அவரது பிள்ளைகளை உள்ளடக்கும். தேவனது திட்டம் நடைமுறைபடுத்தப்பட்ட சிலுவை இன்றியமையாதது. இயேசு கிறிஸ்து வஞ்சிக்கப்பட போவதில்லை - மாறாக பிசாசானவன் ஏற்ற நேரத்தில் சதுரியமாக வீழ்த்தப்படுவான்.

## எதேனின் சுவை

வனாத்திரத்தில் சோதிக்கப்பட்டப் பின், இயேசு இரண்டு காரியங்கள் செய்தார்: அவரது முதல் சீஷர்களை அழைத்தார் (பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, மற்றும் யோவான்) மற்றும் பிசாசு பிடித்திருந்த ஒருவனை குணமாக்கினார் (மாற்கு *1:16-28;* லூக்கா *4:31-5:11*). அவர் சீஷர்களை அழைத்து மற்றும் வியாதியை குணப்படுத்தியது, ஒரு புதிய நியமத்தை உருவாக்கியது. பின்னர் அதிக சீஷர்களை அவர் அழைத்தபோது, பிசாசுகளை துரத்தவும் மற்றும் சகலவித வியாதி, திமிர்வாதம், மற்றும் ஊனம் என எல்லாவற்றை குணமக்கும் அதிகாரத்தை அவர்களுக்கு அருளினார் (லூக்கா *9:1-5*).

முதலில் இயேசு பன்னிரெண்டு சீஷர்களை அழைத்தார். பன்னிரெண்டு என்பது தற்செயலான எண் அல்ல. அது இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரங்களைக் குறிக்கும். இயேசு இஸ்ரவேலின் இராஜ்ஜியத்தை குறித்த திட்டத்தை எண்ணத்தில் கொண்டு அவ்வாறு செய்தார். இஸ்ரவேலர் தேவனுடைய பங்கு, எல்லா தேசங்களிலும் விசேஷித்தவர்கள் (உபாக. *32:8-9*). பின் நாட்களில் பவுலும் முதலில் யூதர்களுக்கு சுவிஷேசத்தை அறிவித்த பின்னரே, புறஜாதியாரிடம் சென்றார் (ரோமர் *1:16-17*).

இயேசு பன்னிரெண்டு சீஷர்களை அழைத்ததுடன் நின்றுவிடவில்லை. லூக்கா *10*ல் வியாதிகளை குணமாக்கவும், பிசாசுகளை துரத்தவும் எழுபது நபர்களுக்கு அதிகாரம் கொடுத்து அனுப்பினார் (லூக்கா *10:1,9,17*). அதுவும் தற்செயலாக தெரிந்துக்கொள்ளப்பட்ட எண்ணிக்கை அல்ல. அது ஆதியாகமம் *10*ல் தேவன் பாபேல் கோபுரத்தின் காலத்தில் தேவர்களிடம் ஒப்படைத்த தேசங்களின் எண்ணிக்கை (உபாக. *4:19-20; 32:8-9*). சில மொழிபெயர்ப்புகள் எழுபத்தி இரண்டு எனக் குறிப்பிடுகின்றது, அதற்கு காரணம் சில பண்டைய பழைய ஏற்பாட்டி நகல்களில் தேசங்களின் எண்ணிக்கை எழுபத்தி இரண்டாக காணப்படுகின்றது. பண்ணிரெண்டு சீஷர்களை இயேசு அழைத்தது

இஸ்ரவேலின் இராஜ்ஜியத்தை மீட்பதை குறித்தது போல், எழுபது நபர்களை அனுப்பியது அவர்கள் தேசங்களை தனக்கு சொந்தமாக மீண்டும் மிட்டுக்கொள்வார் என்பதனை குறித்தது.

எழுபது சீஷர்களும் தங்கள் பிரயாணத்தை முடித்து இயேசுவிடம் திரும்பியபோது (லூக்கா *10:17*), இயேசு சொன்னதை கவணிக்கவும்: "சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன்" (லூக்கா *10:18*). இயேசு கிறிஸ்து மனிதர்களை தனக்கு சொந்தமாக்கி கொண்டபின் சாத்தானால் மனிதகுலத்தின் மீது அதிகாரம் செலுத்த முடியாது. "விசுவாசிகளை குற்றப்படுத்த" சாத்தான் தேவனிடம் நெருங்க முடியாது (வெளி. *12:10*). அவன் தேவனிடம் முறையிட தகுதியற்ற வழக்குரைஞனாவான்.

## என்னை வந்து பிடித்துக்கொள்

தேவனுடைய இராஜ்ஜியத்தை குறித்து மூண்று வருடங்கள் பிரசங்கித்து, மனிதர்களுக்கு தேவனுடைய அன்பை காண்பித்து, மற்றும் ஏதேனின் வாழ்வு எத்தகையது என வெளிபடுத்திய பின்னர், இயேசு தான் பூமிக்கு வந்த மெய்யான நோக்கத்தை நிறைவேற்ற ஆயத்தமானார்.

எருசலேமை நோக்கி தன் இறுதி பயணத்தை மேற்கொள்ளும் முன், இயேசு தன் சீஷர்களை இஸ்ரவேலின் வடக்கு பகுதி எல்லைகளுக்கு அழைத்து சென்றார். அவர் தான் சிலுவையில் அறையும்படி அந்தகார சக்திகளை தூண்ட வேண்டும், அதற்கு உகந்த இடத்திற்கு சீஷர்களுடன் சென்றார்.

தனது சீஷர்களை செசரியாவிலுள்ள பிலிப்பு என்ற பட்டிணத்திற்கு கொண்டு சென்றார். பிலிப்பு என்பது அப்பட்டிணதிற்கு ரோமர்கள் வைத்த பெயர். பழைய ஏற்பாட்டில் அப்பகுதி பாசான் என்றழைக்கப்பட்டது. அதனைக் குறித்து ஒன்பதாவது அத்தியாயத்தில் நாம் வாசித்தோம். நரகத்தின் வாசலான, மரணத்தின் இராஜ்ஜியம் தான் பாசான் எனப்பட்ட இடம். செசரியாவின் பிலிப்பு பட்டிணம் எர்மோன் மலையின் அடிவாரத்தில் அமைந்திருந்தது. அங்கு தான் தேவனுக்கு விரோதமாக ஆதியாகமம் *6:1-4*ல் முரட்டாட்டம் செய்த தேவபுத்திரர்கள் பூமிக்கு இறங்கி வந்ததாக யூதர்கள் நம்பினர். சுருக்கமாக சொன்னால் பழைய ஏற்பாட்டின் நாட்களில் பாசான் மற்றும் எர்மோன் ஆகிய இரண்டு இடங்களும் அந்தகார சக்திகளின் உறைவிடம்.

அவ்விடத்தில் தான் இயேசு தன் சீஷர்களை நோக்கி, "நீங்கள் என்னை யார் என்று நினைக்கீறீர்கள்" என்று கேட்டார் (மத். *16:15*). பேதுரு அவரை நோக்கி, "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனான கிறிஸ்து" (வச. *16*) என்று பதிலளித்தான். இயேசு அவனை பாராட்டி உரைத்தது:

> யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளுவதில்லை. (மத். *16:17,18*)

இயேசு "பாறை" என்று எதனை அல்லது எவரை குறிப்பிட்டார் என்ற விவாதம் பல நூறு ஆண்டுகளாக நிகழ்கின்றது. அப்பகுதியின் பூகோளத்தை அறிதல் அதின் பொருளை புரிந்துக்கொள்ள உதவும். பாசானின் வடக்கு பகுதியின் எல்லையில் செசரியாவின் பிலிப்பு பட்டிணம் அமைந்திருந்தது. பழைய ஏற்பாட்டின் நாட்களில், அப்பகுதி மரணத்தின் வாசளாக கருதப்பட்டது. பிலிப்பு பட்டிணம் மலை அடிவாரத்தில் காணப்பட்டது. "பாறை" என்ற பதம் அம்மலையைக் குறித்தது. இயேசுவும் அவரது சீஷர்களும் நின்ற இடம் "மரணத்தின் வாசல்" என்பதாகும்.

இயேசு இருளின் வல்லமைக்கு சவால் விட்டார். பாவ வீழ்ச்சியினால், மனிதகுலம் தேவனுடனான நித்திய வாழ்வை இழந்து, மரணத்தை தழுவி, தேவனிடமிருந்து நித்தியமாக பிரிக்கப்பட்டது. மரணத்தின் ஆண்டவனான - சர்ப்பம், பிசாசு மற்றும் சாத்தான் எனப்படுபவன் மனிதகுலமனைத்தையும் தனக்கு சொந்தமாக கொண்டான். ஆனால் தேவன் அதனை மாற்ற நினைத்தார். இயேசுவை மனிதகுலத்தின் பாவத்திற்கு பரிகாரம் செய்யும்படி இரகசியமாக அனுப்பியதின் மூலம் நரகத்தின் வாசல்கள் முறியடிக்கப்படும். தேவனுடைய இராஜ்ஜியத்தை

மரணத்தின் ஆண்டவனோ அல்லது அவனது சக்திகளோ எதிர்த்து நிற்க முடியாது. மத்தேயு *16'ல்*, இயேசு பிசாசின் இடத்தின் முன் கதவுகளுக்கு முன் நின்று, அவனுக்கு எதிராக சவால் விடுகின்றார். இயேசு கிறிஸ்து சாத்தானை தூண்டுகின்றார், எதற்காக? ஏனென்றால் தேவனுடைய இரகசிய திட்டத்தை இயேசு நிறைவேற்ற வேண்டிய வேளை வந்தது.

அவ்வாறு சவால் விட்டதுடன் நின்று விடாமல், மேலும் ஒரு காரியத்தை செய்தார். மத்தேயு, மாற்கு, மற்றும் லூக்கா என்ற மூன்று சுவிஷேசகர்கள் அதனை பதிவு செய்தனர், அதுவே இயேசுவின் மறுரூபமாகுதல். மாற்கு *9:2-8* கூறுவது:

> ஆறுநாளைக்குப்பின்பு, இயேசு பேதுருவையும், யாக்கோபையும், யோவானையும் அழைத்து, உயர்ந்த மலையின்மேல், அவர்களைத் தனியே கூட்டிக்கொண்டுபோய், அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார். அவருடைய வஸ்திரம் உறைந்தமழையைப்போல் பூமியிலே எந்த வண்ணானும் வெளுக்கக்கூடாத வெண்மையாய்ப் பிரகாசித்தது. அப்பொழுது மோசேயும் எலியாவும் இயேசுவுடனே பேசுகிறவர்களாக அவர்களுக்குக் காணப்பட்டார்கள். அப்பொழுது பேதுரு இயேசுவை நோக்கி: "ரபீ, நாம் இங்கே இருக்கிறது நல்லது; உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக, மூன்று கூடாரங்களைப் போடுவோம்." அவர்கள் மிகவும் பயந்திருந்தபடியால், தான் பேசுகிறது இன்னதென்று அறியாமல் இப்படிச் சொன்னான். அப்பொழுது ஒரு மேகம் அவர்கள்மேல் நிழலிட்டது: "இவர் என்னுடைய நேசகுமாரன், இவருக்குச் செவிகொடுங்கள்" என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று. உடனே அவர்கள் சுற்றிலும் பார்த்தபோது, இயேசு ஒருவரைத்தவிர வேறொருவரையும் காணவில்லை.

எர்மோன் மலையில் இயேசுவின் மறுரூபமாகுதல் நடைபெற்றது. தன்னை முழுமையான தேவனாக தன் சீஷர்களான பேதுரு, யாக்கோபு, மற்றும் யோவானுக்கு காண்பிக்க இயேசு கிறிஸ்து அவ்விடத்தை தெரிந்துகொண்டார். அதின் மூலம் சாத்தானுடனும், அவனை சார்ந்த இருளின் சக்திகளுடனும் இயேசு உரைத்தது: *நான் என்னுடையதை திரும்பி எடுத்துக்கொள்ளும்படி பூமிக்கு வந்துள்ளேன். தேவனுடைய இராஜ்ஜியம் சமீபமாயிருக்கின்றது.* "அதனை நிலை நாட்டவே நான் இங்கே வந்துள்ளேன்."

மறுரூபமானப் பின் இயேசு எருசலேமை எதிர்நோக்கி பயணித்ததும், தான் மரிக்கும் செய்தியை சீஷர்களுக்கு அறிவித்ததும் தற்செயலான சம்பவங்கள் அல்ல. அவர்கள் அதனை கேட்க விரும்பவில்லை. இதின் மூலம் இயேசு சாத்தானையும், அவனை சார்ந்த தீய சக்திகளையும் தன் திட்டத்திற்கு நேராக விழ செய்தார். இதனை கேட்ட சாத்தானும், தீய சக்திகளும் அவரை உடனடியாக கொலை செய்ய முற்படுவர். அதுவே இயேசு அவர்களிடமிருந்து எதிர்பார்த்தது. அவரது மரணமே எல்லாவற்றிக்கும் திறவுகோல்.

## இதன் முக்கியத்துவம் என்ன

இயேசுவின் ஊழியம் தெளிவான நோக்கம் கொண்டது. தேவனது இராஜ்ஜியத்தை பூமியில் புதுபித்து விட விரும்பினார், அது அவர் மீண்டும் பூமிக்கு திரும்ப வரும் வரை தொடர்ந்து, அவர் வரும் நாளில் பூமியை ஏதேனைப் போல் மாற்றும்.

இயேசுவின் வாழ்வை போல் நம் வாழ்வு முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல, ஆனால் சீஷர்களைப் போல், நமக்கு ஒரு நோக்கம் வைக்கப்பட்டுள்ளது. அதனை விசுவாசித்து நாம் வாழ வேண்டும். தேவனின் குடும்பத்தில் நாம் வேடிக்கை பார்ப்பதற்காக அழைக்கப்படாமல் செயல்படுவதற்காக இணைக்கப்பட்டுள்ளோம் (கொலேசெயர் *1:13*).

இயேசுவின் நோக்களில் ஒன்று மனிதர்களுக்கு ஏதேன் எவ்வாறு இருக்கும், மற்றும் தேவனுடனான வாழ்வு எவ்வாறு இருக்கும் என்று காண்பிப்பதே. தேவனுடைய குடும்பத்தில் மற்றும் இராஜ்ஜியத்தில், வியாதியோ, உடல் ஊனமோ இருக்காது. அவரை எதிர்க்கும் சக்திகள் காணப்படாது. தேவனது இராஜ்ஜியம் ஒரு தோட்டத்தைக் காட்டிலும், இஸ்ரவேலைக் காட்டிலும் பெரியது. அது

உலகம் முழுமையும் உள்ளடக்கியது. அது அனைத்து தேசங்களையும் கொண்டது. அது முழுவதும் ஏதேனாக - பூமியில் ஒரு பரலோகம் போல் இருக்கும்.

இயேசுவை பின்பற்றுவதே நம் கடமை. அவரைப் போல் தேவனது சாயலை தரித்த நம் சக மனிதர்களை, விசுவாசத்திற்கு நேராக நடத்தி, இராஜாவாகிய தேவனுக்கு அவர்கள் உத்தமமாய் வாழ உதவுதல். அதற்கென விஷேச வல்லமைகள் நமக்கு தேவை என்று அவசியமல்ல, "உடைந்த உள்ளங்களை கட்டுவதும்" மற்றும் "சிறையாக்கப்பட்டவர்களுக்கு விடுதலையின் செய்தியை அறிவிப்பதும்" மேசியாவின் வழியில் செய்யப்படும் அசாதரணமான செயல்களே (ஏசா. *61:1*). அது இருளை எதிர்க்கும் துணிவும், நேர்த்தியான திட்டமிடுதலும் நிறைந்தது. ஒருவரது இருதயத்தை ஆவியானவர் நம் கணிவான செயல்கள் மூலம் தேவனிடம் நடத்துவார். சுவிசேஷத்தை அறிவிப்பது ஒருபோதும் வீணாகாது. இயேசுவின் செய்தியில் அவரது கணிவு காணப்பட்டது. அவரது சுவிசேஷத்தை கணிவுடம் ஒரு விசுவாசி அனுதினமும் அறிவிக்கலாம்.

புத்திசாலிகளான தீய சக்திகளுக்கு ஒரு எல்லை உண்டு, அவைகள் தேவ இராஜ்ஜியத்தின் தரிசனம் மற்றும் நிறைவேறுதலைக் கண்டு நடுங்குகின்றன. இயேசு கிறிஸ்து ஏற்கனவே "பிதாவின் வலது பரிசத்தில் அமர்த்தப்பட்டுள்ளார், தூதர்களும், அதிகாரங்களும் மற்றும் துரைத்தனங்களும் அவருக்கு கீழ்பட்டுள்ளன" (*1*பேதுரு *3:22*). நாம் "ஏற்கனவே ஆனால் முழுமையாக அல்ல" அவருடன் இணைந்து ஆரசாட்சி செய்பவர்களே (கொலே. *3:1; 2* தீமோத். *2:12;* வெளி. *2:26; 3:21*). தேவனுடைய இராஜ்ஜியமாக திருச்சபை பூமியில் நிலைபெற்று, வளர்வதனை பாதாளத்தின் வாசல்கள் மேற்கொள்வதில்லை. இப்பணியில் இணைந்து செயல்படும் தீர்மானம் நம்முடையது.

## அதிகாரம் பன்னிரெண்டு

# மேகத்தின் மீது பவணி வருபவர்

கடந்த அத்தியாயத்தின் முடிவில் இயேசு பாதாளத்தின் வாசல்களில் நின்று, எர்மோன் மலை அடிவாரத்தில் எவ்வாறு இருளின் அதிகாரங்களுக்கு சாவல் விட்டார் என சிந்தித்தோம். அது தேவனை வழக்காடு மன்றத்தின் முன் நிறுத்தி சிலுவையில் அறையும் வரை பல செயல்களை தொடங்கிவிட்டது. கிறிஸ்தவர்கள் இயேசுவின் பாடு மரணத்தைக் குறித்து படித்திருந்தாலும், அதற்கு பின் அமைந்துள்ள அசாதரணமான பிண்ணனியை கண்டுகொள்ளாமல் விடக் கூடும்.

இயேசு கிறிஸ்துவை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படும்படி யூத அதிகாரிகள் பிலாத்துவிடம் அழைத்து சென்றதற்கான காரணம் அறிய நாம் பழைய ஏற்பாட்டில் தானியேல் புஸ்தகத்தில் தேவன் நடத்திய ஒரு தேவர்களின் ஆலோசனை சங்கத்தை குறித்து அறிதல் அவசியம்.

## நீண்ட ஆயுசுள்ளவரும், அவரது ஆலோசனையும்

தானியேல் 7 ஒரு பழைய தரிசனத்துடன் தொடங்குகின்றது. நான்கு மிருகங்கள் கடலில் இருந்து வருவது போல் தானியேல் கண்டார் (தானி. *7:1-8*). அவை பார்ப்பதற்கு அகோரமாக தோன்றியது, அதில் நான்காவதாக வெளிப்பட்ட மிருகம் மிகவும் கொடுரமானது. பழைய ஏற்பாட்டின் தரிசனங்களில் தோன்றும் உயிரினங்களும் மற்றும் பொருட்களும் எதையாவது குறிக்கும் அடையாளங்கள், தானியேலின் தரிசனத்தில் தோன்றிய நான்கு விலங்குகளும், நான்கு இராஜ்ஜியங்களின் அடையாளம். இத்தரிசனம் 2ம் அதிகாரத்துடன் தொடர்புடையாக இருப்பதினால், அது பாபிலோன் மற்றும் அதனை தொடர்ந்து எழுப்பிய மூன்று இராஜ்ஜியங்களை குறிக்கின்றது என்று அறியலாம். அதனை தானியேல் எவ்வாறு விளக்குகின்றார் என கவனிக்கவும்:

> நான் பார்த்துக்கொண்டிருக்கையில், சிங்காசனங்கள் வைக்கப்பட்டது; நீண்ட ஆயுசுள்ளவர் வீற்றிருந்தார்; அவருடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போலவும், அவருடைய சிரசின் மயிர் வெண்மையாகவும் பஞ்சைப்போல துப்புரவாகவும் இருந்தது; அவருடைய சிங்காசனம் அக்கினிஜூவாலையும், அதின் சக்கரங்கள் எரிகிற நெருப்புமாயிருந்தது. அக்கினி நதி அவர் சந்நிதியிலிருந்து புறப்பட்டு ஓடினது; ஆயிரமாயிரம்பேர் அவரைச் சேவித்தார்கள்; கோடாகோடிபேர் அவருக்கு முன்பாக நின்றார்கள்; நியாயசங்கம் உட்கார்ந்தது; புஸ்தகங்கள் திறக்கப்பட்டது. (தானி. *7:9-10*)

நீண்ட ஆயுசுள்ளவர் என்பவர் இஸ்ரவேலின் தேவன் என்று நமக்கு தெரியும். அது சுலபமாக அறியக்கூடியதே, எசேக்கியலில் காணப்படும் அவரது சிங்காசனத்தை இதனுடன் ஒப்பிடுவதின் மூலம் அதனை அறியலாம் (எசேக். *1*). அக்கினி, சக்கரங்கள், மற்றும் மனித உருவம் சிங்காசனத்தில் அமர்ந்திருத்தல் என தானியேல் கண்ட அனைத்தும் எசேக்கியேலின் தரிசனத்தை போன்று உள்ளது.

இங்கே ஒரு சிங்காசனம் மட்டும் தனியாக இல்லை என்பதனை கவனித்தீர்களா? தானியேலின் தரிசனத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட சிங்காசனங்கள் இருப்பதை நீங்கள் கவணியாமல் இருக்கலாம் (தானி. *7:9*) - அங்கே தேவனது ஆலோசனை சங்கத்திற்கு தேவையான சிங்காசனங்கள் அனைத்தும் வைக்கப்பட்டுள்ளது (தானி. *7:10*).

பரலோக அலோசனை சங்கம் ஒன்றாக கூடி, மிருகங்களின் - அதாவது இராஜ்ஜியங்களின் முடிவை தீர்மானிப்பதனை - தரிசனமாக தானியேல் காண்கின்றார். நான்காவது இராஜ்ஜியம் அழிக்கப்படும், மற்ற மூன்று இராஜ்ஜியங்களின் அதிகாரம் பரிக்கப்படும் என அத்தரிசனம் குறிக்கின்றது (தானி. *7:11,12*). அதற்கு பதிலாக வேறொரு இராஜா அமர்த்தப்பட்டு, ஒரு இராஜ்ஜியம் உருவாக்கப்படும். அது சமயம் எல்லாம் சுவாரசியாக மாறுகின்றது.

## மேகங்களில் பவனி வரும் மனுஷக்குமாரன்

*தானியேல் தன் தரிசனத்தை தொடர்ந்தி விளக்குகின்றார்:*

> இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார். சகல ஜனங்களும் ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரிகமும் கொடுக்கப்பட்டது; அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும், அவருடைஅய் ராஜ்யம் அழியாததுமாயிருக்கும். (தானி. *7:13-14)*

“மனுஷ குமாரன்” என்ற பதம் பலமுறை பழைய எற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அது மனிதர்களைக் குறிக்கும் பதம் என்பதில் ஆச்சரியமில்லை. ஆனால் இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ள மனிதன் எவ்வாறு வர்ணிக்கப்பட்டுள்ளார் என்பதே ஆச்சரியம். தானியேல் *7:13*’ல் கூறப்பட்டுள்ள அம்மனிதன் *மேகங்கள் மீது பவணியாக* நீண்ட ஆயுசுள்ளவரிடம் வருகின்றார்.

அது ஏன் குறிப்பிடதக்கது? ஏனென்றால் பழைய ஏற்பாட்டின் பிற பகுதிகளில் இது தேவனைக் குறிப்பதற்காக மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது (ஏசா. *19:1;* உபாக. *33:26;* சங். *68:32-33;* சங். *104:1-4*). ஆனால் தானியேல் *7*’ல், தேவன் நீண்ட ஆயுசுள்ளவர் என்று அழைக்கப்பட்டு அங்கு ஆலோசனை சங்கத்தில் அமர்ந்துள்ளார். இத்தரிசனத்தில், தானியேல் மனிதனைப் போல் தோற்றமுடைய ஒரு இரண்டாவது தேவனைக் காண்பதுபோல் உள்ளது, இன்று கிறிஸ்தவர்கள் கர்த்தத்துவத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்கள் உள்ளதாக கருதுவதுப் போல்.

அது விலையேறப்பெற்ற உண்மை.

மத்தேயு *26*ல் இயேசு குற்றம் சுமத்தப்பட்டு காய்பாவின் முன் நின்ற போது, அவரது வாழ்வு கேள்விக்குறியாக காட்சியளித்தது, அவர் இப்பகுதியை குறிப்பிட்டதின் நிமித்தம் அவர்களின் கோபத்தை தூண்டினார்.

> பிரதான ஆசாரியரும் மூப்பரும் சங்கத்தார் யாவரும் இயேசுவைக் கொலைசெய்யும்படி அவருக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி தேடினார்கள். ஒருவரும் அகப்படவில்லை; அநேகர் வந்து பொய்ச்சாட்சி சொல்லியும் அவர்கள் சாட்சி ஒவ்வவில்லை; கடைசியிலே இரண்டு பொய்ச்சாட்சிகள் வந்து: தேவனுடைய ஆலயத்தை இடித்துப்போடவும், மூன்று நாளைக்குள்ளே அதைக் கட்டவும் என்னாலே ஆகும் என்று இவன் சொன்னான் என்றார்கள்.அப்பொழுது, பிரதான ஆசாரியன் எழுந்திருந்து, அவரை நோக்கி: இவர்கள் உனக்கு விரோதமாய்ச் சாட்சிசொல்லுகிறதைக்குறித்து நீ ஒன்றும் சொல்லுகிறதில்லையா என்றான். இயேசுவோ பேசாமலிருந்தார், அப்பொழுது, பிரதான ஆசாரியன் அவரை நோக்கி: நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன் பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன் என்றான். அதற்கு இயேசு: நீர் சொன்னபடிதான்; அன்றியும் மனுஷகுமாரன் சர்வவல்லருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்களென்று, உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார். அப்பொழுது பிரதான ஆசாரியன் தன் வஸ்திரங்கலைக் கிழித்துக்கொண்டு: இவன் தேவதூஷணம் சொன்னான்; இனிச் சாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன? இதோ, இவன் தூஷணத்தை இப்பொழுது கேட்டீர்களே. உங்களுக்கு என்னமாய்த் தோன்றுகிறது என்று கேட்டான். அதற்கு அவர்கள்: மரணத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்றார்கள்.” (மத். *26:59-66)*

ஒரு தெளிவான கேள்விக்கு இயேசு தெளிவற்ற பதிலுரைத்ததுப் போல் தோன்றலாம். இயேசு காய்பாவின் கேள்விக்கு பதிலாக தானியேல் *7:13* வசனத்தை கூறினார். நான் யாரென்று உண்மையாக அறிந்துக் கொள்ள விரும்புகின்றாயா காய்பா? நான் சொல்வதை கூர்ந்து கவனி. தானியேல் *7:13*’ல் குறிப்பிடப்பட்டுள்ள மனிதனை போல தோற்றமளிக்கு இரண்டாம் தேவனாக தன்னை அழைக்கின்றார் என்பதினை காய்பா உடனடியாக புரிந்துக்கொண்டான். மனிதனாக தோன்றிய

தேவன் என்று தன்னை அழைத்தார். அதுவே தேவதூஷணம் என்று காய்பா கூறினான் - அது மரண தண்டனைக்குரிய குற்றம்.

இயேசுக்கு அது நன்றாக தெரியும். அவர் தான் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட போவதைக் குறித்து கவலைபடவில்லை. தேவனுடைய ராஜ்யத்தை மீட்க, விசுவாசிகளை தேவ குடும்பத்தில் சேர்க்க, மற்றும் பாபேலின் நாட்களில் தேவன் நிராகரித்த தேசங்களை தீய சக்திகளின் அதிகாரத்திலிருந்தும், வல்லைமையிலிருந்தும் விடுவிக்க தான் மரிக்க வேண்டுமென்பதனை இயேசு அறிந்திருந்தார்.

அவர் மரித்தார். சிலுவை மரணத்தின் பாடுகள் எப்படிபட்டது என்று தாவீது சங்கீதம் 22'ல் சித்தரித்துள்ளார், பாடுபடும் சங்கீதக்காரனின் தூக்கம்:

"என்னைப் பார்கிறவர்களெல்லாரும் என்னைப் பரியாசம்பண்ணி,

உதட்டைப் பிதுக்கி, தலையைத் துலுக்கி:

கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருந்தானே,

அவர் இவனை விடுவிக்கட்டும்

இவன்மேல் பிரியமாயிருக்கிறாரே,

இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்கிறார்கள்.

அநேகம் காளைகள் என்னைச் சூழ்ந்திருக்கின்றன;

பாசான் தேசத்து பலத்த எருதுகள்,

என்னை வளைந்து கொண்டன்

பீறி கெர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல்,

என்மேல் தங்கள் வாயைத் திறக்கிறார்கள்.

தண்ணீரைப்போல ஊற்றுண்டேன்;

என் எலும்புகளெல்லாம் கட்டுவிட்டன, என் இருதய மெழுகுபோலாகி,

என் குடல்கள் நடுவே உருகிற்று." (சங். 22:7-14)

இதில் பாசான் தேசத்துப் பலத்த எருதுகள் என்ற பதம் கவணிக்கப்பட வேண்டியது. பழைய ஏற்பாட்டின் நாட்களில், பாசான் என்ற இடம் தீய சக்திகள் குடியிருக்கும் மரணத்தின் வாசல். அங்கு பாகாலின் முக்கிய வழிபாட்டுதலமிருந்தது, அதின் முக்கிய அடையலாம் காளைகளும், மாடுகளும். "பாசான் தேசத்து எருதுகள்" என்பது தீய சக்திகளையும், இருளின் வல்லமையையும் குறிக்கும் பதம்.

இயேசு சாதிரியமாக சிலுவையில் சாத்தனை வஞ்சித்தார். சாத்தானின் வல்லமையினால் தான் அழிக்கப்படுவதுபோல் அவனையும், அவனை சார்ந்த சக்திகளையும் நம்ப வைத்தார். இயேசுவை சிலுவையில் அறைவது தன் வெற்றி என்று அவன் நினைத்தான், ஆனால் அதுவே அவன் தோல்விக்கு வித்திட்டது. இதனை C.S. லூயிஸ் தி லாயன், விட்ச், அன் தி வார்ட்ரோப் என்ற கதையில் அருமையாக சித்தரித்துள்ளார். அதில் அஸ்லாம் என்ற சிங்கம் தன்னை சூனியகாரியின் சூழ்ச்சிக்கு விட்டுக் கொடுப்பதுப்போல் விட்டுக்கொடுத்து மீண்டும் உயிர்பெற்று வரும். அதனை போன்றே இயேசுவும் தீய சக்திகளுக்கு தன்னை விட்டுகொடுப்பதுப் போல் விட்டுகொடுத்தார். ஆனால் அச்சக்திகள் அவர் மீண்டும் உயிருடன் எழும்புவார் என்பதனை அறியாமல் இருந்தனர்.

## நீங்கள் தேவர்கள், ஆனால் மனிதர்கள் போல் மரீப்பீர்கள்

சிலுவையின் நிமித்தம் சாத்தான் ஆதாமின் பிள்ளைகள்மீது தனக்கிருந்த அதிகாரத்தை மாத்திரம் இழக்காமல். அவனது பங்காளிகளான, தேவர்கள் தேசங்கள் மீது தங்களுக்கிருந்த ஆளுமையையும் இழக்க தொடங்கினர்.

மிகவும் உன்னதமான இஸ்ரவேலின் தேவன் அசாத்தியமான தேவர்களை தேசங்களின் அதிகாரிகளாக நியமித்தார் (உபாக. *4:19-20; 32:8-9*). அவர்கள் எப்பொழுது தேவனுக்கு எதிராளிகளாகினர் என கூறப்படவில்லை, ஆனால் அவர்கள் தேவனுக்கு எதிராக மாறினர். அவர்கள் இஸ்ரவேலர் தேவனுக்கு பலிகள் செலுத்துவதை கெடுத்து, தங்களுக்கு பலி செலுத்த வைத்தனர் (உபாக. *17:1-3; 29:26-27; 32:17*). அத்தியாயம் 2'ல் தெய்வீக ஆலோசனை சங்கத்தைக் குறித்து சங்கீதம் 8'ல் நாம் படித்தோம். அங்கே குறிப்பிடப்பட்டுள்ள ஏலோகீம்கள் தங்கள் சக்தியை தவறாக பயன்படுத்தி, தீமையை ஊக்குவித்தனர். தேவனது நீதி மற்றும் சட்டத்தை குறித்து அவர்கள் கவலைபடவில்லை:

"தேவசபையிலே தேவன் எழுந்தருளியிருக்கிறார்;

தேவர்களின் நடுவிலே அவர் நியாயம் விசாரிக்கிறார்.

எதுவரைக்கும் நீங்கள் அநியாயத்தீர்ப்புச்செய்து,

துன்மார்கருக்கு முகதாட்சிணியம்பண்ணுவீர்கள்!

ஏழைக்கும் திக்கற்றபிள்ளைக்கும் நியாயஞ்செய்து;

சிறுமைபட்டவனுக்கும் திக்கற்றவனுக்கும் நீதி செய்யுங்கள்.

பலவீனனையும் எளியவனையும் விடுவித்து, துன்மார்க்கரின் கைக்கு அவர்களைத் தப்புவியுங்கள்

அறியாமலும் உணராமலும் இருக்கிறார்கள்!

அத்தகாரத்திலே நடக்கிறார்கள்;

தேசத்தின் அஸ்திபாரங்களெல்லாம் அசைகிறது."

(சங். *82:1-5*)

சங்கீதத்தின் மற்ற வசனங்கள் அத்தேவர்களின் எதிர்காலம் கேள்விகுறியாக மாறிவிட்டதாக தேவன் அறிவிப்பதை குறிக்கின்றது. அத்தேசங்களை தேவன் மீண்டும் எடுத்துக்கொள்ளும் நாளில் அவர்களின் கொடூரமான இராஜ்ஜியம் முடிவுக்கு வரும்:

" நீங்கள் தேவர்கள் என்றும்,

நீங்களெல்லாரும் உன்னதமானவரின் மக்கள் என்றும் நான் சொல்லிருந்தேன்.

ஆனாலும் நீங்கள் மனுஷரைப்போலச் செத்து,

லோகப்பிரபுக்களில் ஒருவனைப்போல விழுந்துபோவீர்கள்.

தேவனே, எழுந்தருளும், பூமிக்கு நியாயதீர்ப்புச் செய்யும்;

நீரே சகல ஜாதிகளையும் சுதந்தரமாகக் கொண்டிருப்பவர்." (சங். *82:6-8*)

எப்பொழுது தேவன் தேசங்களை மீண்டும் எடுத்துக் கொள்வார்? அதற்கான பதிலை நாம் முன்னே தானியேல் *7:14*'ல் வாசித்தோம்:

அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரிகமும் கொடுக்கப்பட்டது; அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும், அவருடைஅய் ராஜ்யம் அழியாததுமாயிருக்கும்.

தானியேல் *7:13-14*'ல் மனுஷகுமாரன் இராஜ்ஜியங்களை பெற்றுகொள்ளும் நாளில், இருளின் அதிகாரங்களின் ஆளுகை முடிவு பெறும் என தெளிவாக அறிவிக்கப்பட்டுள்ளது. இயேசு தனது உயிர்தெழுதலின் சமயத்தில் இராஜ்ஜியங்களை தன் சுதந்திரமாக பெற்றுக்கொண்டார். தேவன் "கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி,……. எல்லா துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக, அவரை உன்னதங்களில் தம்முடைய வலதுபாரிசத்தில் உட்காரும்படி செய்தார்." (எபே. *1:19-21*)

## இதன் முக்கியத்துவம் என்ன

சிலுவைக்கு முன்பு வரை, நமது ஆத்துமாக்களின் நித்திய உரிமை சாத்தானிடமிருந்தது. எல்லா மனிதரும் மரித்து, மரணத்தின் வாசஸ்தலத்திற்கு செல்ல வேண்டும், அது சாத்தானின் கோட்டை. இயேசு கிறிஸ்துவின் பலியும், உயிர்தெழுதலும் நடைபெறாமல் இருந்திருந்தால் நாமும் அங்கே இருந்திருப்போம். இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தை விசுவாசிப்பதினால், நாமும் அவருடன் உயிர்பிக்கப்பட்டுள்ளோம். தேவனுடைய இராஜ்ஜியம் பூமியில் தொடங்கியபோது, சாத்தான் தேவ சமூகத்திலிருந்து விரட்டப்பட்டான் என முந்தைய அதிகாரத்தில் வாசித்தோம் (லூக்கா *10:18*). விசுவாசிகளுக்கு எதிராக அவன் சுமத்தும் குற்றங்களை தேவன் இனி ஏற்றுக்கொள்ள போவதில்லை. அவர்கள் ஆத்துமாவின் மீது அவனுக்கு அதிகாரமில்லை.

பின்னர், ஏன், நாம் சாத்தானுக்கு சொந்தமானவர்கள் போல் வாழ்கிறோம்?

இரட்சிப்பு நம் நன்னடத்தையினால் சம்பாதிக்கப்படுவதில்லை. அது விசுவாசத்தினால் தேவனுடைய கிருபையினால் நமக்கு அருளப்படுகின்றது (எபே. *2:8-9*). நமது செயல்களினால் நமது இரட்சிப்பினை நாம் இழப்பதுமில்லை. நமது முயற்சியினால் பெறாத ஒன்றை நமது முயற்சியினால் நாம் இழப்பதுமில்லை. இரட்சிப்பு என்பது தேவனது உத்தமத்தை விசுவாசிப்பது - இயேசு நம்மீது சாத்தானுக்கு இருந்த உரிமையை முறியடித்தார் என்று நம்பி, பிற தேவர்களையும் மற்றும் அவர்களை சார்ந்த காரியங்களிலிருந்தும் மனம்திரும்புவதே.

தேவனுடைய இராஜ்ஜியத்தை குறித்த அச்செய்தியை நாம் தேசங்களுக்கு அறிவிக்கும்படி கட்டளை பெற்றுள்ளோம் (மத். *28:19-20*). ஒவ்வொரு ஆத்துமாவும், ஒவ்வொரு நிமிடமும், தேவனுக்கு கிழ்படியும்போது, எதிரி தேவர்கள், துரைத்தனங்கள் மற்றும் வல்லமைகளின் ஆளுகை சிறுது சிறிதாக வலுவிலக்கும்.

இயேசு சிலுவையில் அறையப்பட்டப் போது, இது சீஷர்களுக்கு உண்னையாக தோன்றவில்லை. ஆனால் சீக்கிரத்தில் இதனை அவர்கள் மறக்க முடியாதவாறு உணர்வார்கள்.

# அதிகாரம் பதின்மூன்று

# மிகப்பெரிய தலைகீழ் மாற்றம்

இயேசுவின் பிறப்பு, மரணம், மற்றும் மலை பிரசங்கம் என சுவிசேஷ நூல்களில் காணப்படும் சம்பங்களை போன்று மிகவும் பிரபலமான புதிய ஏற்பாடு வேதப்பகுதி அப்போஸ்தலர் 2'ம் அதிகாரம், அதில் பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியானவர் சடிதியாக இயேசுவை பின்பற்றியவர்கள் மீது இறங்கினார். அது புதிதாக சிறகு முளைத்த திருச்சபையின் தொடக்கமும் மற்றும் இயேசுவின் நாமத்தில் உலக முழுவதும் சுவிசேஷம் அறிவிக்கப்படுவதின் தொடக்கமாயிற்று.

பிரபலமான இவ்வேதப்பகுதியில், நாம் நினைப்பதை காட்டுலும் அதிகமான சில முக்கிய நிகழ்வுகள் நடைபெறுகின்றன. பழைய ஏற்பாட்டில் பாபேலுக்கு பின் தேவர்களின் ஆளுகையின் கீழ் அருளப்பட்ட இராஜ்ஜியங்களின் அதிகாத்தை தலைகீழாக மாற்றப்போகும் நிகழ்வுகளின் தொடக்கம் அப்போஸ்தலர் 2'ம் அதிகாரம். பெந்தெகொஸ்தே நாளில் நடைபெற்ற சம்பவம் பாபேலின் நாட்களில் தேவனால் பிற தேவர்களுக்கு அருளப்பட்ட தேசங்களை மீண்டும் மீட்பதற்கான ஒரு ஆவிக்குரிய யுத்த தந்திரம்.

## பெந்தெகொஸ்தே

*அப்போஸ்தலர் 2'ம் அதிகாரத்தின் சித்தரிக்கப்பட்ட சம்பங்கள் சதாரண சம்பங்கள் அல்ல:*

> பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்தில் வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போல்ப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள். வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்து வந்த தேவபக்தியுள்ள யூதர்கள் அப்பொழுது எருசலேமிலே வாசம்பண்ணினார்கள். அந்த சத்தம் உண்டானபோது, திரளான ஜனங்கள் கூடிவந்து, தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே கலக்கமடைந்தார்கள். எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, ஒருவரையொருவர் பார்த்து: இதோ, பேசிகிற இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா? அப்படியிருக்க, நம்மில் அவரவர்களுடைய ஜென்மபாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே, இதப்படி? (அப். *2:1-8)*

பழைய ஏற்பாட்டின் தெய்வீக உலகப்பார்வையை தெளிவுபடுத்தக் கூடிய சில வார்த்தைகள் இப்பகுதியில் நம் மொழியில் தெளிவாக மொழிபெயர்க்கப்படவில்லை. “பலத்த காற்று” என்று ஆவியானவரின் வருகையைக் குறிக்கும் சொல் பழைய ஏற்பாட்டில் தேவனுடைய சமூகத்தை குறிப்பதாகும் *(2 இராஜா. 2:1,11; யோபு 38:1; 40:6)*. அக்கினியும் தேவனது பிரசன்னத்தை குறிக்கும் சொல் *(எசே. 1:4; ஏசா 6:4; தானி. 7:9; யாத். 3:2; 19:18; 20:18)*.

இதிலிருந்து அங்கு நடைபெற்ற சம்பத்தில் தேவன் பிரசன்னமாகினார் என்பது தெளிவாகின்றது. தன் எதிரிகளாக மாறிய *(சங். 82)* தேவர்களிடமிருந்து தேவன் அவர்களுக்கு பங்காக கொடுத்த தேசங்களை *(உபாக. 4:19-20; 32: 8-9)* மீட்கபதற்காக இறங்கி வருவதினை இச்சம்பவம் குறிக்கின்றது.

நாவுகள் அடையாளமாக இறங்கி வந்தது - தேவன் சீஷர்களின் வார்த்தையைக் கொண்டு தன் திட்டத்தை நிறைவேற்றுவார் என்பதனை காண்பிக்கின்றது. எதிர்களான தேவர்களின் இராஜ்ஜியங்களில் வாழ்ந்த யூதர்களிடம் பேசுவதற்காக தேவன் இயேசுவை பின்பற்றினவர்களை

பெலப்படுத்தினார். அவர்கள் சுவிஷேசத்தை கேட்டு, விசுவாசித்தப் பின்னர் தங்கள் தேசங்களுக்கு சென்று இயேசுவை குறித்து அறிவிப்பார்கள்.

## பெந்தெகொஸ்தே மற்றும் பாபேல்

பாபேலின் நாட்களில் நடைபெற்ற சம்பவமே தேவன் தேசங்களை சிதறடித்து அந்நிய தேவர்களின் ஆளுகைக்கு அவர்களை ஒப்படைத்தற்கு காரணம் (உபாக. *4:19-20; 32: 8-9*). முதல் பார்வையில் அதற்கும் அப்போஸ்தலர் *2'*ம் அதிகாரத்திற்கும் சம்பந்தமுள்ளதாக உணர முடியாது. ஆனால் வேதம் எழுதப்பட்ட முழ பாஷைகளில் இத்தொடர்பு தெளிவாக காணப்படுகின்றது.

அப்போஸ்தலர் *2'*ம் அதிகாரத்தில் காணப்படும் இரண்டு குறிப்பிடதக்க காரியங்கள் அதனை பாபேலுடன் இணைக்கின்றன. முதலாவது, அக்கினிமயமான நாவுகள், அவை "பிரிந்திருந்த" என்று வர்ணிக்கப்பட்டுள்ளது, மற்றும் இரண்டாவது, உலகமுழுவதிலிருந்தும் அங்கே கூடிவந்திருந்த யூதர்கள், "கலக்கமடைந்தார்கள் (குழப்பமடைந்தார்கள்)" என்று கூறப்பட்டுள்ளது. தமிழில் அதனை படிக்கும்போது அது சிறப்பாக தோன்றாது. ஆனால் லூக்கா அதனை கிரேக்க மொழியில் எழுதும்போது "பிரிந்திருந்த" மற்றும் "கலக்கமடைந்தார்கள் (குழப்பமடைந்தார்கள்)" என்ற வார்த்தைகள் ஆதியாகமம் *11:7* மற்றும் உபாக. *32:8'*ல் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகளை குறிக்கும் விதத்தில் எழுதியுள்ளார்.

அப்போஸ்தலர் நடபடிகளை எழுதிய லூக்கா, ஒரு புறஜாதியான். அவரால் கிரேக்க மொழியில் மட்டுமே படிக்க முடியும். அதினால் கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட பழைய ஏற்பாட்டினை அவர் பயன்படுத்தியிருப்பார். செப்டுவாஜிண்ட் என்ற அம்மொழிபெயர்ப்பு இந்நாள் வரை மிகவும் பிரபலமானது. சிலர் மட்டுமே எபிரெய மொழியை அறிந்திருந்ததினால் ஆதி திருச்சபையில் அது அதிகமாக பயன்படுத்தப்பட்டது. அப்போஸ்தலர் *2'*ம் அதிகாரத்தை எழுதும்போது லூக்கா பாபேலை மனதில் கொண்டு எழுதினார்.

ஆனால் இவ்விரண்டுற்குமிடையே என்ன தொடர்பு? பெந்தெகொஸ்தே நாளில் நடந்ததை சிந்திக்கவும். பழைய ஏற்பாட்டில் சடிதியான காற்று மற்றும் அக்கினியில், தேவன் வருவதுப்போல் ஆவியானவர் வந்தார். (பாபேலினால் உண்டான) பல பாஷைகளில் பேசுவதால் ஏற்படக்கூடிய குழப்பம் சீஷர்கள் மீது இறங்கிய அக்கினிமயமான நாவுகள் மூலம் அவர்கள் உலகம் முழுவதிலுமிருந்து வந்த யூதர்களின் பாஷைகளில் பேசியதால் நீக்கப்பட்டது. மூவாயிரம் நபர்கள் இயேசுவின் செய்தியை விசுவாசித்தனர் (அப். *2:41*).

பாபேலினால் சிதறடிக்கப்பட்ட தேசங்கள் அனைத்திற்க்கும் இப்புதிய விசுவாசிகள் இயேசுவே மேசியா என்ற செய்தியை எடுத்துச் செல்வர். ஆதியாகமம் *11'*ல் தேவன் மனிதர்களின் தேசங்களை கைவிட்டார், ஆனால் அது நடந்தவுடன், அதியாகமம் *12'*ம் அதிகாரத்தில் ஆபிரகாமை அழைத்து ஒரு புதிய மக்களை மற்றும் தேசத்தை நிறுவினார். அவர் கைவிட்ட அனைத்து தேசங்களின் மக்களிலிருந்து நபர்களை மீட்டு தன்னை விசுவாசிக்கும் ஆபிரகாமின் குடும்பத்தினருடன் இணைக்கப் போகின்றார். தனது இராஜ்ஜியத்தை தன் எதிரிகளான தேவர்களின் எல்லைகளுக்கும் எடுத்து செல்லப்போகின்றார்.

அப்போஸ்தலர் *2'*ம் அதிகாரத்தில் காணப்படும் தேசங்களில் அட்டவணை அதனை தெளிவுபடுத்தும் கருவி. அதனை ஒரு உலக வரைபடத்தில் குறித்து பார்த்தால், யூதர்கள் சிறைபிடிக்கப்பட்டு கொண்டு போகப்பட்ட கிழக்கத்திய நாடுகள் முதல் அந்நாளில் அறியப்பட்ட வடக்கு தேசங்கள் வரை அது உள்ளடக்கும். அதியாகமம் *10'*ல் தேவர்கள் கையில் ஒப்படைக்கப்பட்ட தேசங்கள் அனைத்தும் அதில் அடங்கும்.

## நம் போராட்டம் மாம்சத்தோடும், இரத்ததோடுமல்ல

அப்போஸ்தல நடபடிகளின் பெரும்பகுதி பவுலின் சுவிஷேச பிரயாணங்களை உள்ளடக்கியது. பவுல் புறஜாதிகளின் அப்போஸ்தலன் - இஸ்ரவேலுக்கு அப்பாற்பட்டிருந்த தேசங்களில் திருச்சபைகளை நாட்டும்படி தேவன் அவரை சிறப்பாக தெரிந்துகொண்டார். பவுலின் பிரயாணங்கள் மற்றும்

ரோமபுரியின் சிறையிருப்பு போன்ற அவரது வாழ்வின் சூழல்கள், அவரை உலகின் மேற்கு பகுதி நோக்கி நகர செய்தது.

புதிய ஏற்பாட்டு நிருபங்களில், பவுல் தனது ஊழியம் மற்றும் சுவிஷேசப் பணி ஆவிக்குரிய சக்திகளால் எதிர்க்கப்படுவதாக எழுதியுள்ளார். தீய சக்திகளை குறிக்க அவர் பயன்படுத்தும் வார்த்தைகள் அவர் பழைய ஏற்பாட்டு பூகோளத்தை அறிந்திருந்தார் என விளக்குகின்றது. காணப்படாத இருளின் அதிகாரங்கள் என்ற பதம் பலமுறை அவரால் பயன்படுத்தப்பட்டதை நீங்கள் கவணித்ததுண்டா?

- துரைத்தனங்கள்/வல்லமைகள் (எபே. 1:20-21; 6:12; கொ. 2:15)
- அதிகாரங்கள் (எபே. 1:20-21; 3:10; 6:12; கொ 2:15; 1 கொரி. 2:6)
- கர்த்தத்துவங்கள் (எபே. 1:20-21; 3:10)
- வஸ்துக்கள் (கொ. 1:16)
- தேவர்கள் (எபே. 1:20-21; 1 கொரி. 8:5)
- சிங்காசனங்கள் (கொ. 1:16)

இவ்வார்த்தைகள் அனைத்தும் பூகோளத்தை ஆளும் சக்திகளை குறிப்பவை. இப்பதங்கள் புதிய ஏற்பாட்டிலும் மற்றும் கிரேக்க எழுத்துக்களிலும் மனித அரசாங்க அதிகாரிகளை குறிக்க பயன்படுத்தப்பட்டுள்ளன. பவுல் ஒரு பகுதியை ஆளும் அதிகாரத்தை குறிக்கும் சொற்களை உபயோகப்படுத்தியுள்ளார். அது பழைய ஏற்பாடு மனித உலகின் அதிகார உறவுகளை எவ்வாறு பார்கிறது என்பதின் அடிப்படையில் அமைந்துள்ளது: தேவனால் தள்ளப்பட்ட தேசங்களை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் சக்திகள் தேவனுடைய பிள்ளைகளுக்கு எதிராக செயலாற்றுவதை விளக்குகின்றது.

## "நான் ஸ்பானியாவிற்கு போகிறேன்"

பவுல் ரோமபுரிக்கு பயணிப்பதுடன் அப்போஸ்தலர் நடபடிகள் நிறைவுபெறுகின்றது. சிறைக்காவலில் வைக்கப்பட்ட பவுல் இரண்டு காரணங்களுக்காக ரோமபுரிக்கு சென்றார்: இராயனிடம் முறையிட மற்றும் சுவிஷேசத்தை அறிவிக்க. எதிரிகளான தேவர்கள் கையிலிருக்கும் தேசங்களை மீட்க, அவர் தான் அறிந்திருந்த உலகின் எல்லை மட்டும் போகவேண்டுமென அவர் அறிந்திருந்தார். பழைய ஏற்பாட்டில் அது தர்ஷீஸ் என்றழைக்கப்பட்டது, பவுலின் நாட்களில் அதனை ஸ்பானியா என்றழைத்தனர். தனது ஊழியத்தை நிறைவேற்ற பவுல் ஸ்பானியா வரை செல்ல வேண்டும். இயேசுவுக்காக தேசங்களை மீட்க - தன்னாட்களில் உலகத்தின் முடிவு பரியந்தம் என்று எண்ணப்பட்ட மேற்கு எல்லையான ஸ்பானியாவுக்கு அவர் செல்ல விரும்பியது ரோமருக்கு அவர் எழுதிய நிருபத்தில் தெளிவாக கூறப்பட்டுள்ளது:

> நான் ஸ்பானிய தேசத்திற்குப் பிரயாணம்பண்ணுகையில் உங்களிடத்தில் வந்து, உங்களைக் கண்டுகொள்ளவும், உங்களிடத்தில் சற்று திருப்தியடைந்த பின்பு..... இந்த காரியத்தை நான் நிறைவேற்றி, இந்த பலனை அவர்கள் கையிலே பத்திரமாய் ஒப்புவித்தபின்பு, உங்கள் ஊர் வழியாய் ஸ்பானியாவுக்குப் போவேன். (ரோமர். 15:24,28)

தன் வாழ்நாளிலே தேவன் இராஜ்ஜியங்களை மீட்கும் பணியை தொடங்கினார் என பவுல் அறிந்து அதினால் உற்சாக முன்சென்றார். அவர் "புறஜாதியாருடைய இரட்சிப்பு நிறைவுபெறும் போது" பின்னர் "இஸ்ரவேல் அனைத்தும் மீட்கப்படும்" என்று விசுவாசித்தார் (ரோமர் 11:25-26). பெந்தெகொஸ்தே நாளில் தொடங்கியதை தான் முடித்து வைக்க வேண்டுமென நினைத்தார்.

## இதன் முக்கியத்துவம் என்ன

தனது வாழ்வை குறித்த ஒரு தெய்விகப் பார்வையுடன் பவுல் வாழ்ந்தார். அவர் தன்னை தேவனின் கருவியாக எண்ணினார். அவர் தேவனுடைய கருவியே. அவர் மட்டுமல்ல, பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு, பெயர் அறியப்படாத புதிய விசுவாசிகள் பலரும் பிசாசின் கோட்டைகளை ஊடுருவும்படி அனுப்பட்டவர்கள்.

நாமும் கூட.

பவுலை போல நாமும் தேவனுடைய கையில் கருவிகள் என்றால், அவரைப் போல் நம்மால் ஏன் பாதிப்புகளை உருவாக்கி விளைவுகள் காண முடியவில்லை? அதற்கான ஒரு காரணம் அவர் தன் வாழ்வின் நோக்கத்தை அறிந்திருந்தார். அவர் இவ்வுலகை தன் அளுகையில் வைத்திருக்கும் சக்திகளின் வல்லமை உண்மை என்று அறிந்திருந்தார் - இருப்பினும் தன்னை இயக்கும் வல்லமை அதனைக் காட்டிலும் மேலானது என்பதினையும் உணர்ந்திருந்தார்.

அதனை நீங்களும் விசுவாசிக்கிறீர்களா? வேதம் அவ்வல்லமை நமக்கு அருளப்பட்டுள்ளது என கூறுகின்றது. பவுல் தான் தேவனால் பெலப்படுத்தப்பட்டவராகவே அறிந்திருந்தார்.

பவுலுக்கு உலகம் எவ்வளவு பெரியது என்று முழுமையாக தெரியாது. வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, சீனா, இந்தியா, நார்வே, ஆஸ்திரேலியா, ஐஸ்லாந்து, மற்றும் பல இடங்கள் இருப்பதே தெரியாமல் இருந்திருக்கலாம். ஆனால் தேவனுக்கு தெரியும். பவுல் புரிந்துக்கொண்டதைக் காட்டிலும் சுவிஷேசம் அறிவிக்கபட வேண்டிய இடங்கள் அதிகம் என்று தேவன் அறிவார். பூமி முழுவதும் சுவிஷேசம் அறிவிக்கப்பட வேண்டுமானால் பவுலை போல நோக்கமுடைய பலர் அவர் வழியில் ஊழிய பணியில் ஈடுபட வேண்டுமென்பது தேவனுக்கு தெரியும். நாம் சுவிஷேசத்தை தீவிரமாக எடுத்துச் செல்லும் பணியை செய்யாவிடில், பூமியில் நாம் படைக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதில்லை. தேவன் எப்பொழுதும் என் தேவைகளை மட்டும் சந்திக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நாம் வாழ்ந்தால் நாம் பாபேலின் மக்களை போன்றவர்கள். இயேசுவை, அல்லது அவரது பன்னிரெண்டு சீஷர்கள், மற்றும் பவுலைப் போன்றவர்கள் அல்ல.

பூமியின் இராஜ்ஜியங்கள் மீது பிசாசின் வல்லமை உண்மை என்ற மற்றொரு உண்மையை இப்பகுதி உணர்த்துகின்றது. இருளின் இராஜ்ஜியத்தின் எல்லைகள் அல்லது பகுதிகள் குறித்து முழுமையான விளக்கம் நமக்கு கொடுக்கப்படவில்லை. ஆனால் காணப்படாத சக்திகள் பூமியை தன் கோட்டையாக கருதுகின்றன. இச்சக்திகள் தேவனுடைய இராஜ்ஜியத்தை எதிர்க்கின்றன மற்றும் மனிதர்கள் தேவனுடைய திட்டத்தின்படி அவரது நற்செய்தியை அறிவிக்கும் திட்டத்தில் இணைவதை அவைகள் விரும்புவதில்லை. நமது அறிவின்படியும், அனுபவத்தின்படியும் நிருபீக்க முடியாவிட்டாலும், இத்தகைய சக்திகளை நம் பெலத்தால் மேற்கொள்ள முடியாது என்பதினை நாம் அறிய வேண்டும். நமது ஊழியத்தில் நமக்கு ஒத்தாசையாக தேவன் தனது ஆவியையும் மற்றும் நாம் காணக்கூடாத பல நபர்களையும் நமக்கு உதவ அருளியுள்ளார் (*1* கொரி. *3:16; 6:19;* எபி. *1:13; 1* யோவான் *4:4*).

நமக்கு முன்னிருக்கும் கேள்வி இதுவே: நாம் பவுலைப் போல தினமும் ஒரு தெய்வீக உலகப்பார்வையுடன் மற்றும் அதினால் உருவாகும் அசாதரணமான தாக்கங்களை உணர்ந்தவர்களாக செயல்பட்டால் எப்படி இருக்கும்? ஒவ்வொரு நாளும் நமது சகோதர, சகோதரிகளை இருளிலிருந்து மீட்க செயல்பட வேண்டிய தேவனுடைய பிள்ளைகள் நாம் என்ற அறிவோடு செயல்பட்டால் எப்படி இருக்கும்? நாம் அறிந்தாலும், அறியாவிட்டாலும், நாம் காணக்கூடாத சக்திகள் - நம் தீர்மானங்கள், செயல்கள், வார்த்தைகளை - மனிதர்களை நன்மைக்கு அல்லது தீமைக்கு நேராக நடத்த பயன்படுத்துகின்றன என்பதினை அறிந்திருந்தால் எப்படி இருக்கும்? நாம் யார் என்று நாம் உணர்ந்திருந்தால் - நம் வேலை, நமது வருமானம், நமது திறன்கள், ஏன் நம் பிரச்சனைகளும் கூட ஒரு பொருட்டாக நமக்கு தெரியாது. நாம் நம் கண்களால் காணக்கூடாத மற்றும் காணக்ககூடிய இரு உலகங்களுடனும் இணைக்கப்பட்டுள்ளோம்.

ஆதி சபையின் விசுவாசிகள் தங்களை இவ்வாறாகவே கண்டனர். தங்களை சுற்றி உள்ள உலகம் முழுவதும் இருளுக்கு அடிமைகளாக இருப்பதாக விசுவாசித்தனர், அதனை நாம் அடுத்த அதிகாரத்தில்

படிக்கலாம். தங்களுக்கு எதிராக அந்தகார உலகமும், அதின் சக்திகளும் செயல்பட்ட போதும், தேவனுடைய மற்றும் அவரை சார்ந்த காணக்கூடாத நபர்களின் ஒத்தாசையுடன் கிறிஸ்தவத்தை உலகமயமாக்கினர். தாங்கள் இழக்க கூடாத ஒரு ஆவிக்குரிய போரட்டத்தின் நிஜத்தை அவர்கள் விசுவாசித்தனர். அவர்கள் அப்போராட்டத்தை இழக்கவில்லை என்பதற்கு நாமே சாட்சிகள்.

# அதிகாரம் பதினான்கு

# இவ்வுலகத்தை சேர்ந்தவர்களல்ல

நாம் நன்கு அறிந்த இயேசுவின் கெத்சேமனே தோட்ட ஜெபத்தில், தன்னை பின்பற்றியவர்களை பார்த்து அவர் கூறியது, "நான் உலகத்தானல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல" (யோவான் 17:16). விசுவாசிகள் நிச்சயமாக இவ்வுலகத்தில் வாழ்பவர்கள், இவ்வுலகின் எல்லா தேசங்களுக்கும் சுவிஷேசத்தை எடுத்துச் செல்லும்படி கட்டளை பெற்றவர்கள் (மத். 28:19-20), ஆனால் அவர்கள் உலகத்தை சேர்ந்தவர்களல்ல. அவர்கள் உலகத்தில் வாழ்பவர்கள், ஆனால் உலகத்தை சேர்ந்தவர்களல்ல - என்ற முரண்பாடு - ஆதி கிறிஸ்தவர்களுக்கு பலவழிகளில் அறிவுறுத்தப்பட்டது.

## புண்ணிய ஸ்தலம், பரிசுத்த பூமி, மற்றும் தேவப்பிரசன்னம்

புண்ணிய ஸ்தலம் என்ற கண்ணோட்டத்தை குறித்து நாம் 8'ம் அதிகாரத்தில் சிந்தித்தோம். பழைய ஏற்பாட்டின் இஸ்ரவேலரை பொருத்தமட்டில், தேவன் முற்றிலும் *வேறுபட்டவர்*. அவர் பிரசன்னமாகும் இடம், மற்ற இடங்களிலிருந்து வேறுபட்டது. அதின் பொருள் தேவன் சர்வவியாபி அல்ல என்பதாகாது. மாறாக, தேவன் தன் மக்களை சந்திக்க தெரிந்தெடுக்கும் இடம் பரிசுத்தமுள்ளது என்பதே. அதினால் தான் ஆசாரிப்பு கூடாரம் மற்றும் தேவாலயம் கட்டப்பட்டது. புண்ணிய ஸ்தலம் என்ற கண்ணோட்டத்தின் அடிப்படையில் இஸ்ரவேலுக்கு பல கட்டளைகள் மற்றும் வழிபாட்டு முறைகள் அருளப்பட்டன - அது உலகம் உன்னதமான தேவனாலும், பிற தேவர்களாலும் ஆளப்படுகின்றது என்பதனை விளக்குகின்றது.

புண்ணிய ஸ்தலம் என்ற கண்ணோட்டம் புதிய ஏற்பாட்டில் ஒரு மாற்றத்தை கண்டது. நாம் அறிய வேண்டியது, "தேவனுடைய பிரசன்னம் இப்பொழுது எங்கே?" தேவன் எல்லா இடத்திலும் நிறைந்திருந்தாலும், அவர் சிறப்பாக *எல்லா விசுவாசிகளுக்குள்ளும்* வாசம் செய்கின்றார். நீங்கள் நம்பினாலும், நம்பாவிட்டாலும், நீங்களே தேவன் வசிக்கும் புண்ணிய ஸ்தலம். பவுல் அதனை தெளிவாக "நீங்களே பரிசுத்த ஆவியானவரின் ஆலயம்" என்று எழுதியுள்ளார் (1 கொரி. 6:19).

விசுவாசிகள் ஒன்றாக கூடிவரும் இடமும் விஷேசமானது. கொரிந்து பட்டிணத்தில் ஒன்றாக கூடி வந்த சபையை பவுல், "நீங்கள் தேவனுடைய ஆலயம்" என்றழைக்கின்றார் (1 கொரி. 3:16). எபேசு விசுவாசிகளை பார்த்து அவர் கூறியது "(நீங்கள்) தேவனுடைய வீட்டார்...... கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டுக் கட்டப்பட்டுவருகிறீர்கள்" (எபே. 2:19,21-22).

இதின் பொருள் பெரிது. "என் நாமத்தினாலே எங்கே இரண்டு அல்லது மூன்று பேர் கூடி வருகிறீர்களோ, அங்கே உங்கள் மத்தியிலே நான் இருக்கிறேன்" என்று இயேசு கூறியது பிரபலமானதே (மத். 18:20). பழைய ஏற்பாட்டின் போதனையின்படி, அதின் பொருள், விசுவாசிகள் ஒன்றாக கூடிவரும் வேளையில், அவர்கள் கூடிவரும் இடம் இருளின் வல்லமைகள் மத்தியில் பரிசுத்தமாக்கப்பட்ட புண்ணிய ஸ்தலம்.

பழைய ஏற்பாட்டில் கடைசியாக யேகோவா தான் தங்க தெரிந்துகொண்டது எருசலேமிலிருந்த தேவாலயம். தேவனுடைய பிரசன்னம் அங்கிருந்ததால் இஸ்ரவேல் புண்ணிய பூமியாக மாறியது. ஆனால் அந்த புண்ணிய ஸ்தலம் அதனை சுற்றிருந்த தேசங்களால் மற்றும் எதிரி தெய்வங்களால் அச்சுறுத்தப்பட்டது. அதே போல், இன்றும் விசுவாசிகள் ஒரு ஆவிக்குரிய யுத்தத்தில் உள்ளனர். இருளின் வல்லமையினால் கட்டப்பட்டிருக்கும் உலகில் தேவனது சுடர்களாக, அவர் வாசம் செய்யும் தேவாலயங்களாக வைக்கப்பட்டுள்ளனர்.

## சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது

ஸ்தல திருச்சபையின் தூய்மையை குறித்து பவுல் கூறியதில் இக்கருத்து தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. விசுவாசிகள் ஒன்றாக கூடிவரும் கூடுகைகள் அனைத்தும் பரிசுத்த பூமியே, அது மனம் திரும்பாத பாவிக்கான இடமல்ல.

புண்ணிய ஸ்தலமான - இஸ்ரவேலின் பாலயத்தின் தூய்மையை பராமரிக்கும்படி அவர்கள் பாவத்தை எவ்வாறு தண்டித்தனர் என அதிகாரம் 8'ல் ஆராய்ந்தோம். மகா ஒய்வுநாளன்று (லேவி. 16), இஸ்ரவேலின் பாவம் அனைத்தும் ஒரு ஆட்டுக்கடாவின் மீது சுமத்தப்பட்டு - அது "அஷாயெலுக்கு (வனாந்திரத்திற்கு)" விடப்பட வேண்டும். அஷாயெல் என்பது வனாந்திரத்தை ஆட்கொண்ட தீய சக்தியை குறிக்கும் பதம். தங்கள் பாவங்கள் சுமத்தப்பட்ட போக்காட்டை, வனாந்திரத்தில் விட்டனர். அது இஸ்ரவேல் பாவத்தை அதின் இடமாகிய ஆவிக்குரிய இருட்டிற்குள் அனுப்புவதை சித்தரிக்கின்றது.

பவுலும் கொரிந்து சபையில் காணப்பட்ட பாவத்தை அவ்வாறாகவே நடத்துபடி ஆலோசனை கூறினார் - பாவத்தை அதின் இடத்திற்கு அனுப்புதல். 1 கொரிந்தியர் 5'ம் அதிகாரத்தில், பாலியல் பாவத்தில் அகப்பட்டு மனம்திரும்ப வேண்டிய ஒரு மனிதனைக் குறித்து பவுல் எழுதுகின்றார். அவர் கொரிந்தியரிடம், "அவனை சாத்தானுக்கு ஒப்புகொடுங்கள்" என்று கட்டளையிட்டார் (1 கொரி. 5:5). அதின் பொருள் எளிது - பாவத்திற்கு பரிசுத்த பூமியில் இடமில்லை. விசுவாசிகள் பாவத்திலிருந்து மனம்திரும்பாமல் வாழும் வழி தவறிய விசுவாசிகளை சபையிலிருந்து நீக்க வேண்டும் (1 கொரி. 5:9-13). சபையிலிருந்து வெளியேற்றப்படுதல் என்பது சாத்தானின் கைகளில் ஒப்புக்கொடுத்தலுக்கு சமம்.

சபையிலிருந்து நீக்கப்பட்ட மனிதனின் "சரீரம் அழிக்கப்பட்டு, தேவனுடைய நாளில் அவன் ஆத்துமா மீட்கப்படும்" என பவுல் நம்பினார் (1 கொரி. 5:5). (இங்கே மரணம் என்பது அவனது சரீரபிரகாரமான மரணமல்ல, மாறாக சரீர இச்சைகளுக்கு ஒரு மனிதனை கவர்ந்து இழுக்கும் இச்சைகளின் மரணம் -கலா. 5:24; 1 கொரி. 11:32-33).

## ஆவிக்குரிய யுத்தமான ஞானஸ்நானம்

பேதுருவும் பவுலைப் போன்றே சிந்தித்தார் - விசுவாசிகள் இருளின் அதிகாரங்களுக்கு எதிராக போராடுபவர்கள் என கருதினார். ஆவிக்குரிய யுத்தத்தை குறித்த அவரது சிந்தனை புதிய ஏற்பாட்டின் விநோதமான பகுதிகளில் ஒன்றில் காணப்படுகின்றது (1 பேதுரு 3:14-22):

> *நீதியினிமித்தமாக நீங்கள் பாடுபட்டால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; அவர்களுடைய பயமுறுத்தலுக்கு நீங்கள் பயப்படாமலும் கலங்காமலும் இருந்து, கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள். கிறிஸ்துவுக்கேற்ற உங்கள் நல்ல நடக்கையைத் தூஷிக்கிறவர்கள் உங்களை அக்கிரமக்காரரென்று உங்களுக்கு விரோதமாய்ச் சொல்லுகிற விஷயத்தில் வெட்கப்படும்படிக்கு நல்மனச்சாட்சியுடையவர்களாயிருங்கள். தீமைசெய்து பாடநுபவிப்பதிலும், தேவனுக்குச் சித்தமானால், நன்மைசெய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும். ஏனெனில், கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார். அந்த ஆவியிலே அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார். அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற் போனவைகள்; அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர்மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள். அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது; அவர் பரலோகத்திற்குப்*

போய், தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார்; தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது.

இப்பகுதியின் சில விநோத கருத்துக்களை நீங்கள் கவனித்திருக்கலாம். நோவாவுக்கும், அவனது பேழைக்கும், மற்றும் கட்டப்பட்ட ஆவிகளுக்கும், ஞானஸ்நானத்திற்கும் சம்பந்தம் என்ன? இப்பகுதி ஞானஸ்நானம் நம்மை இரட்சிக்கும் என்று போதிக்கின்றதா?

ரோமர் 5'ல் பவுல் என்ன முறையை கையாள்கின்றாரோ, அதே முறையை பேதுரு இங்கு செயல்படுத்துகின்றார். பவுல் அங்கு இயேசுவை குறித்து பேசுகின்றார், ஆனால் அதே சமயம் ஆதாமை மனதில் கொண்டு பேசினார். இயேசுவை அதாமுக்கு எதிர்மாறாக பார்க்கின்றார். அதினால் தான் பவுல் "ஒரு மனிதனுடைய (ஆதாமின்) கீழ்படியாமையினால் அநேகர் பாவிகளானோம், அதே போல் ஒரு மனிதனுடைய (இயேசுவின்) கிழ்படிதலினால் அநேகர் நீதிமான்களாக்கப்பட்டோம்" (ரோமர் *5:19*). பேதுரு இயேசுவை குறித்து *1* பேதுரு *3'*ல் எழுதும்போது ஆதாமை மனதில் கொள்ளாமல் ஏனோக்கை மனதில் வைத்து எழுதுகின்றார். ஆனால் பேதுருவை பொருத்தமட்டில் இயேசுவும், ஏனோக்கும் எதிர்மாறானவர்களல்ல. இயேசுவைக் குறித்து போதிக்க ஏனோக்கை ஒரு உவமையாக பேதுரு பயன்படுத்தினார்.

"இதின் பொருள் என்ன?" என நீங்கள் வியக்கலாம். ஏனோக்கை குறித்து பழைய ஏற்பாட்டில் ஒரு சில வசனங்கள் மட்டுமே உள்ளது (ஆதி. *5:18-24*). அதில் நாம் அவரைப் பற்றி அறிவதெல்லாம் அவர் பெருவெள்ளத்திற்கு முன் வாழ்ந்தவர் என்பதே, "ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருக்கையில், காணப்படாமற்போனான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டார்" (ஆதி. *5:24*). அவ்வசனங்களுக்கும் பேதுருவின் கருத்துக்களுக்கும் தொடர்பில்லை.

ஏனோக்கின் வாழ்க்கையை இயேசுவோடு தொடர்புடையதாக பேதுருவை சிந்திக்க வைத்தது, யூதர்கள் மத்தியிலே பயன்படுத்தபட்ட ஏனோக்கை குறிக்கும் புஸ்தகங்கள். குறிப்பாக முதலாம் ஏனோக்கு என்ற புஸ்தகம், அது யூதர்கள் மத்தியில் பிரபலமானது. ஆதியாகமம் *6:1-4'*ல் குறிப்பிடப்பட்டுள்ள தேவ குமாரர்கள், மனுஷகுமாரத்திகள் மற்றும் அவர்களுக்கு பிறந்த இராட்சதர்களை (நெபிலீம், வீழ்ந்துபோன இராட்சதர்கள்) குறித்து நிறைய போதனைகள் முதலாம் ஏனோக்கு என்ற புஸ்தகத்தில் இடம் பெற்றுள்ளது. பேதுரு மற்றும் யூதா, இருவரும் பெருவெள்ளத்தைக் குறித்து எழுதியபோது முதலாம் ஏனோக்கின் புஸ்தகத்தை அடிப்படையாக கொண்டே அதனை விளக்கினர் (*2* பேதுரு *2:4-5*; யூதா *6*). உதாரணமாக ஆதியாகமத்தில், நோவா காலத்தில் பாவம் செய்த தேவகுமாரர்கள் பாதாளத்தில் அடைக்கப்பட்டனர் எனக் கூறப்படவில்லை, ஆனால் அது முதலாம் ஏனோக்கில் எழுதப்பட்டுள்ளது (*1* ஏனோக்கு *6:1-4; 7:1-6; 10:4,11-13*).

முதலாம் ஏனோக்கில் "பாதாளத்தில் அடைப்பட்ட ஆவிகளைக்" குறித்து எழுதப்பட்ட ஏதோ ஒரு செய்தி பேதுருக்கு இயேசுவை நினைவுபடுத்தியது. முதலாம் ஏனோக்கில், ஏனோக்கு ஒரு கனவு காண்பதை போன்று ஒரு சம்பவமுள்ளது, அதில் பாதாளத்தின் ஆவிகள் தங்களுக்காக தேவனிடம் மன்றாடும்படு ஏனோக்கை வேண்டிக்கொண்டனர். ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்தபடியால், அவனைக் காட்டிலும் அவர்களுக்காக தேவனிடம் மன்றாட யார் தகுதியானவர்? ஏனோக்கு அவர்களுக்காக மன்றாடினான், ஆனால் அவனுக்கு நல்ல உத்திரம் கிடைக்கவில்லை. தேவன் அவர்களை மன்னிக்க முடியாது என உறுதியாக கூறினார். இதனை கட்டப்பட்ட ஆவிகளிடம் கூற ஏனோக்கு பாதாளத்தில் இறங்கி, அவர்கள் தேவனுடைய நியாயதீர்ப்புக்குள்ளானவர்கள் என்று உரைத்தான்.

பேதுரு அதனை இயேசுவுடன் இணைத்தார். இயேசு பாதாளத்தில், மரணத்தின் ராஜ்ஜியத்தில் அடைப்பட்ட ஆவிகளுக்கு ஒரு செய்தி கொண்டு சென்றார். இயேசு பாதாளத்திற்கு சென்ற போது தங்களது கூட்டாளிகள் அவரை வென்று தேவதிட்டத்தை சீர்குலைத்தாக அவர்கள் எண்ணினர், அதின் விளைவாக அவர்கள் விடுவிக்கபடுவர் எனவும் கருதினர். ஆனால் இயேசு, தான் பாதாளத்தில் நீண்ட நேரம் தங்குவதில்லை, தான் சீக்கிரம் உயிர்தெழுவார் என்று அறிவித்தார். அது தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதி. பாதாளம் தேவனுடைய திட்டத்தை வெல்லவில்லை, *அதில் கட்டப்பட்டுள்ள அனைவரும் தேவனால் நியாயதீர்க்கப்பட்டு, நித்தியமாக தண்டிக்கப்பட்டுள்ளனர்*. ஆகவே தான்து, பேதுரு இயேசுக் குறித்து பின்வருமாறு கூறினார்,"அவர் பரலோகத்திற்குப் போய், தேவனுடைய

வலதுபாரிசத்தில் இருக்கிறார்; தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது" *(1 பேதுரு 3:22).*

இக்கருத்துக்களை எதற்காக பேதுரு ஞானஸ்நானத்துடன் ஒப்பிடுகிறார்? பேதுருவை பொருத்தமட்டில் இயேசுவின் மரணம் மற்றும் உயிர்தெழுதல் - பிசாசின் வல்லமை முற்றிலுமாக முறியடிக்கப்பட்டதை அறிவிக்கின்றது. ஞானஸ்நானம் இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்தெழுதலை குறிப்பதினால், அது பிசாசனின் மீது வெற்றியை மீண்டும் நினைபடுத்துவது (ரோமர் *6:1-11).*

பேதுருவை பொருத்தமட்டில், ஞானஸ்நானம் எனபது "தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது" *(1 பேதுரு 3:21).* உடன்படிக்கை என்பதின் கிரேக்க பதம் ஒரு அர்பணிப்பை குறிக்கின்றது. அது ஞானஸ்நானம் எடுக்கும் நபர் *தான் தேவனுக்கு உத்தமமாய் வாழ்வேன்* என்று உறுதியளித்து, மேலும் தான் இவ்வுலகில் நடைபெறும் ஆவிக்குரிய யூத்தத்தில் தேவனுடைய பக்கம் நிற்பவர் என்ற செய்தியை *பிசாசின் சக்திகளுக்கு அறிவிக்கின்றது* (1 பேதுரு 3). பேதுரு வழியுறுத்தும் இக்கருத்தினை ஆதி கிறிஸ்தவர்கள் நன்றாக அறிந்திருந்தார்கள். அவர்கள் ஞானஸ்நானம் பெறும் வேளையில் சாத்தானையும், அவனது சக்திகளையும் மறுதலிப்பதும் ஒரு பகுதியாக இருந்தது.

## இதின் முக்கிக்கியத்துவம் என்ன

முதலில் விசுவாசிகள், தாங்கள் பழைய ஏற்பாட்டில் காணப்படும் மகிமையுடன் தேவன் வாசம் செய்யும் புண்ணிய ஸ்தலம் என்பதினை புரிந்துக் கொள்ளவேண்டும். அதனை உணர்ந்தவர்களாக நாம் வாழ்கிறோமா? இஸ்ரவேலரும், இயேசுவை பின்பற்றிய ஆதி விசுவாசிகளும், தாங்கள் அவிசுவாசிகளிலிருந்து வேறுபட்டு வாழ வேண்டுமென விரும்பினர். அதின் அர்த்தம் அவிசுவாசிகள் நம்மை தவிர்க்கும் அளவிற்கு நாம் விநோதமாக நடந்துக்கொள்ள வேண்டும் என்பதல்ல. இஸ்ரவேல் ஒரு "ஆசாரிய ராஜ்யம்" மற்றும் "பரிசுத்த ஜனம்" என்றழைக்கப்பட்டுள்ளது (யாத். *19:6).* எதிரிகளான தேவர்களின் பிடியில் வாழும் மனிதர்களை மெய்யான தேவனை பின்பற்ற கவரும் விதத்தில் இஸ்ரவேலின் வாழ்க்கை அமைய வேண்டும். தேவன் விரும்புவது போல் அவரது பிள்ளைகள் வாழ்தல் கனி நிறைந்த, பிரோஜனமான, மகிழ்ச்சியான வாழ்விற்கு நேராக நடத்தும்.

உலகிலுள்ள அனைத்து தேசங்களிலும் தேவனை அறியாத நபர்களை மீட்டு அவர்களை தேவனுடைய குடும்பத்தின் அங்கத்தினர்களாக மாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் நாம் வாழ்ந்தால் அவசியம். நாம் இவ்வுலகை சேர்ந்தவர்கள் அல்ல, உலகிற்குரியவர்கள் உலக கவலைகள் நிறைந்தவர்களாய், உலகத்தினரைப் போல் வாழ்வர். நம்மை காணும் அவிசுவாசிகள் நாம் இழிவான எண்ணத்துடன், சுயநலமாய் அல்லது பிறரிடம் கடிணமாய் நடந்து கொள்பவர்கள் அல்ல என்று கூற வேண்டும். நாம் நம்மை திருப்திபடுத்த வாழக்கூடாது. இவைகளுக்கு எதிரானவர்களாக வாழ வேண்டும். இயேசுவைப் போல் வாழ வேண்டும். அவர் பிற மனிதர்களைப் போல் தனக்காக வாழாமல் பிறருக்காக வாழ்ந்தபடியினால் அவரது வாழ்வு அநேகரை அவர் பக்கம் ஈர்த்தது.

இரண்டாவது, நமது திருச்சபைகளில் தேவனை, இயேசுவை நாம் உயர்த்த வேண்டும். வேதாகமத்தின் நாட்களில், ஆசாரிப்பு கூடாரத்திற்கு அல்லது தேவாலயத்திற்கு செல்தல் தேவனது மகத்துவத்தையும், தன் பிள்ளைகள் மீது அவரது அன்பையும் மக்களுக்கு அறிவுறுத்தும். தேவன் வேறுபட்டவர், அதே சமயம் அவர் நமக்கு நெருக்கமானவர் என்ற இரண்டு சிந்தனைகளும் ஒன்றிணைத்து பயணிக்க கூடியது. தன்னிறைவுள்ள மற்றும் எல்லாவற்றிக்கும் மேலான தேவனுக்கு எதற்காக ஒரு மனித குடும்பம் அவசியம்? பாபேலின் நாட்களில் தேசங்களை பிற தேவர்களுக்கு பங்காக கொடுத்த அவர், எதற்காக தனக்கென்று ஒரு குடும்பத்தை உருவாக்குகின்றார்? எனென்றால் அவர் நம்மை நேசிக்கின்றவர்.

தேவனது குணாதிசயங்கள் முழுமையாக போதிக்கப்பட்டு, அதின் அடிப்படையில் தேவன் நம்மீது வைத்த அன்பின் மகத்துவத்தை திருச்சபைகளில் பேசுவது அவசியம். அப்பொழுது தான் நாம் அவரது அன்பின் ஆழத்தை உணர முடியம், தேவனது பரிசுத்தத்தை உணராதவர்களுக்கு அவரது அன்பு மிகவும் அற்பமானதாக தோன்றும்.

மூன்றாவதாக, இருளின் வல்லைமைக்கு நாம் யார் பக்கம் என்று தெரியும். அவைகள் புத்தியற்றவை அல்ல. நாம் இயேசுவை உத்தமமாய் பின்பற்றுவோம் என்று வாக்களித்து ஞானஸ்நானம் பெற்று, பாவத்திற்கு எதிர் நிற்பதை அவைகள் காண்கின்றன. அது போன்றே நாம் தேவனுக்கு எவ்விடங்களில் உண்மையற்றவர்களாய் இருக்கின்றோம் என்பதனையும் அறிவார்கள், எனவே நம் பெலவினங்கள் என்னவென்று அவற்றிக்கு நன்றாக தெரியும். நாம் நம்பினாலும், நம்பாவிட்டாலும், ஆவிக்குரிய யுத்தத்தில் இரண்டு பக்கத்தினை சேர்ந்தவர்களாலும் நம் வாழ்க்கை கூர்ந்து கவணிக்கப்படுகின்றோம்.

இவ்வுண்மைகள் புரிந்துகொள்வதற்கு எளிதானது, ஆனால் அவைகளின்படி வாழ்தல் கடினம். நாம் மீட்கப்பட்டவர்கள், இருப்பீனும் வீழ்ந்துபோனவர்கள். இவ்வுண்மைகளின்படி இவ்வுலகில் அஞ்ஞானிகளைப் போல் வாழ்வதற்கு, நாம் எதற்காக இவ்வுலகில் வைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதினை அனுதினமும் நம் சிந்தையிலும் மற்றும் இருதயத்திலும் உணர்ந்தவர்களாய் இருத்தல் அவசியம். இயேசுவை போல் நாமும் இவ்வுலகிற்குரியர்வர்கள் அல்ல - ஆனால் அதில் வாழ்பவர்கள் (யோவான் *8:23; 1* யோவான் *4:4*). தேவனுடைய பிள்ளைகள் என்பதின் பொருளை நாம் உணரும் பட்சத்தில், நம் வாழ்வின் நோக்கம் தெளிவடையும்.

# அதிகாரம் பதினைந்து

# திவ்விய சுவாபத்தின் பங்காளிகள்

*நாம் யார் என்று நமக்கு தெரியுமா?*

இக்கேள்வியை நாம் முன்னதாகவே கேட்டேன், இருப்பீனும் அதனை இவ்விடத்தில் மீண்டும் கேட்க விரும்புகிறேன். ஆம், நாம் இவ்வுலகில் வாழ்பவர்கள், ஆனால் உலகத்திற்குரியவர்கள் அல்ல. இயேசு கிறிஸ்து நமக்காக சிலுவையில் செய்து முடித்த செயலினால் நாம் விசுவாசத்தைக் கொண்டு கிருபையினால் இரட்சிக்கப்பட்டுள்ளோம் (எபே. *2:8-9*). ஆனால் அது நம்மில் தேவன் என்ன செய்யப் போகின்றார் என்பதின் தொடக்கம் மாத்திரமே.

தான் உலகை படைக்கும் முன் சிருஷ்டித்த பரலோக தேவகுமாரர்களும் (யோபு *38:7-8*), தன் மனித குடும்பமும் தெய்வீக குடும்பத்துடன் இணைந்து ஏதேனில் வாழ வேண்டுமென தேவன் விரும்பினார். மனித வீழ்ச்சிக்குப் பின் அவர் அத்திட்டத்தை கைவிடவில்லை. கிறிஸ்தவனே, நீ தேவபுத்திரர்களில் ஒருவரைப்போல், இயேசுவைப் போல் மறுரூபமாக்கப்படுவாய் (*1* யோவான் *3:1-3*).

இக்கருத்தை இறையியலாளர்கள் பல பெயர்களைக் கொண்டு அழைக்கின்றனர். இது பிரபலமாக மகிமைப்படுத்தப்படுதல் என்றழைக்கப்படும். பேதுரு இதனை "திவ்விய சுவாபத்தின் பங்காளிகள்" என்று குறிப்பிட்டுள்ளார் (*2* பேதுரு *1:4*). யோவான் இக்கருத்தை பின்வருமாறு விளக்குகிறார்: நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்" (*1* யோவான் *3:1*). இதனை குறித்து வேதம் என்ன கூறுகின்றது என்று இவ்வதிகாரத்தில் சிந்திகலாம்.

## தேவகுமாரர்கள், அபிராகமின் வித்து

பாபேலின் நாட்களில் தேசங்களை பிற தேவர்களுக்கு தேவன் பங்காக கொடுத்தபோது, தனக்கென்று ஒரு புதிய மனித குடும்பத்தை உருவாக்கும் நோக்கத்துடன் செயல்பட்டார். பாபேலுக்கு பின் (ஆதி. *11:1-9*) தேவன் ஆபிரகாமை அழைத்தார் (ஆதி. *12:1-8*). ஆபிரகாம் மற்றும் சாராளின் மூலம் தனது ஏதேனை மீண்டும் நிலைபடுத்துவார்.

தேவனுடைய குடும்பமான ஆபிரகாமின் பிள்ளைகளாகிய இஸ்ரவேலர், தேவனுடைய இராஜ்ஜியத்தை பூமியில் ஸ்தாபிப்பதில் தோற்றனர். ஆனால் அதில் தோன்றும் ஒருவர் ஜெயம் பெறுவார். ஆதாமின் மகனாக, தாவீதின் வம்சத்தில், தேவன் மனிதனாக இயேசுவின் வடிவில் தோன்றுவார். தான் பாபேலில் தண்டித்த தேசங்களை மீண்டும் ஆசீர்வதிக்கும் அவரது திட்டம் இயேசுவின் மூலம் நிறைவேறும். பவுலும் அதனைக் குறித்து பல நிருபங்களில் எழுதியுள்ளார். அதில் இரண்டு:

> அதென்னவெனில் புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய், ஒரே சரீரத்திற்குள்ளானவர்களுமாய், கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன்பங்காளிகளுமாயிருக்கிறார்களென்கிற இந்த இரகசியத்தை அவர் எனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார். இதைக்குறித்து நான் முன்னமே சுருக்கமாய் எழுதியிருக்கிறேன். அதை நீங்கள் வாசிக்கையில் கிறிஸ்துவின் இரகசியத்தைக்குறித்து எனக்கு உண்டாயிருக்கிற அறிவை அறிந்துகொள்ளலாம்; இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதுபோல, முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை. (எபே. *3:3-6*)

> நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக, ஞானஸ்நானம்

பெற்றவர்கள் எத்தனைபேரோ அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள். நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயுமிருக்கிறீர்கள். (கலா. *3: 26-29*)

நான் முந்தைய அதிகாரங்களில் கூறியது போல்: பழைய ஏற்பாட்டில், இஸ்ரவேலுக்கு புறம்பே வாழ்ந்த மக்கள் அனைவரும் தேவன் பாபேலுக்கு பின் தேவர்களுக்கு பங்காக கொடுத்த தேசங்களில் குடியிருந்தனர். பாபேலுக்கு பின், இஸ்ரவேல் தவிர பிற தேசங்கள் மெய்யான தேவனுடன் தங்கள் உறவை அறுத்துக் கொண்டன. அத்தேசங்கள் மத்தியில் இஸ்ரவேல் மட்டுமே தேவனுடைய "பங்கு" (உபாக. *32:9*). இஸ்ரவேலுக்கு புறம்பே வாழ்ந்த பிற மனிதர்களை இஸ்ரவேலர் பல பெயர்களில் அழைத்தனர். அது அவர்கள் வாழும் இடத்தையோ அல்லது இனத்தையோ பொருத்தது (உதாரணமாக., எகிப்தியர், மோவாபியர், அமெலேக்கியர்), ஆனால் அவர்கள் அனைவரையும் குறிக்கும் ஒரே புதிய ஏற்பாட்டு சொல் புறஜாதியார் என்பதாகும், அவ்வார்த்தை "தேசங்கள்" எனபதினை குறிக்கும் (ஜென்ஸ்) லத்தீன் வார்த்தையிலிருந்து உருவானது. நீங்கள் யூதரல்லவென்றால், புறஜாதியை சேர்ந்தவர்.

அபிரகாமின் வம்சத்தை சேர்ந்த - இயேசு - அபிரகாமின் வம்சத்தார் மட்டுமின்றி தேவனை விட்டு விலக்கப்பட்டிருந்த மனிதகுலத்தை சேர்ந்த அனைவரையும் மீட்கும்படி மரித்து, உயிர்தெழுந்தார் என்பதே புதிய ஏற்பாட்டின் செய்தி. மேலே கொடுக்கப்பட்டுள்ள வசனங்களில், புறஜாதியார் தேவனுடைய குடும்பத்தில் இணைக்கப்பட்டதை இரகசியம் என்று பவுல் அழைக்கின்றார். தேவனால் தள்ளப்பட்டு, பிற தேவர்களின் ஆளுகையின் கீழ் வாழ்ந்த தேசங்கள் ஆபிரகாமுக்கு தேவன் அளித்த வாக்குதத்தங்களுக்கு பங்காளிகளாக மாறுவது அவருக்கு ஆச்சரியமூட்டியது.

கிறிஸ்துவுக்குள், சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளும் *அனைவரும்* யேகோவாவின் பிள்ளைகளே, அவரே மெய்யான தேவன், ஆபிரகாம், ஈசாக்கு, மற்றும் யாக்கோபின் தேவன் (யோவான் *1:12;* கலா. *3:26;* ரோமர் *8:14*). அதினால் புதிய ஏற்பாட்டில் விசுவாசிகள் குடும்ப உறவுமுறைமையின்படி அழைக்கப்படுகின்றனர் (குமாரர்கள், பிள்ளைகள், சுதந்திரவாளிகள்), எனென்றால் அவர்கள் தேவனால் "தத்தெடுக்கப்பட்டவர்கள்" (ரோமர் *8:15,23;* எபே. *1:5;* கலா. *4:4*). சுதந்திரவாளிகள் என்ற பதம் ஒரு தெளிவான நோக்கத்துடன் எழுதப்பட்டுள்ளது. அது நாம் யார் என்று கூறுகின்றது: நாம் புதீதாக உருவாக்கப்படும் தெய்வீக-மனித குடும்பத்தின் அங்கத்தினர். மரணமில்லாத, தேவசாயலின் மகிமையை தரித்து, கர்த்தருடைய சமூகத்தில் வாழ: ஆதாமும், ஏவாளும் முதலில் சிருஷ்டிக்கப்பட்ட நிலைக்கு மீட்கப்படுதே வசுவாசிகளின் இரட்சிப்பின் நோக்கம்.

அதனைக்காட்டுலும் ஆச்சரியமூட்டுவது இயேசு நம்மை எவ்வாறு பார்கிறார் என்பதே.

## ஒரு குடும்பம் மீண்டும் ஒன்றிணைக்கப்படுதல்

எபிரேயருக்கு எழுதப்பட்ட நிருபத்தின் முதல் இரண்டு அதிகாரங்கள் தேவனது ஒன்றிணைந்த குடுமபத்தை குறித்து ஒரு அழகிய சித்தரத்தை நமக்கு காண்பிக்கின்றது - அது தெய்வீகராசீகளையும், மனிதர்களையும் உள்ளடக்கியது. என்னை பொருத்தமட்டில், அது மிகவும் முக்கியமான ஒரு வேதப்பகுதி.

எபிரேயர் முதல் அதிகாரம் இயேசு கிறிஸ்து "தேவதூதர்களிலும் பெரியவர்" என்று கூறுகின்றது (எபி. *1:4*). தேவனது பரலோக கூடாரத்தில் இயேசுவை விட மேலானவர் ஒருவருமில்லை. அவர் தேவன். தேவதூதர்களில் ஒருவரும் மனிதனாக தோன்றி, அவர்களை மீட்டு, இராஜ்ஜியத்தை சுதந்தரிக்க தகுதியற்றவர்களானபடியால், அவர்கள் இயேசுவை தொழுதுக் கொள்ள வேண்டும் (எபி. *1:5-6*). இயேசுவே இராஜா.

ஆனால் இயேசு மனிதாக தோன்றியபோதோ, ஒரு சிறு காலகட்டத்திற்கு அவர் தேவதூதர்களிலும் சற்று சிறியவரானார். அவர் நம்மைப்போல் மாறினார். மனிதர்கள் தேவதூதர்களைக் காட்டிலும் சிறியவர்கள். எபிரேய நிருபத்தின் ஆக்கியோன் கூறுவது:

ஒரு இடத்திலே ஒருவன் சாட்சியாக: மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷனுடைய குமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்? அவனை தேவதூதரிலும் சற்றுச் சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனுக்கு முடிசூட்டி, உம்முடைய கரத்தின் கிரியைகளின் மேல் அவனை அதிகாரியாக வைத்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர் என்று சொன்னான். சகலத்தையும் அவனுக்குக் கீழ்ப்படுத்தினார் என்கிற விஷயத்தில், அவர் அவனுக்குக் கீழ்ப்படுத்தாத பொருளொன்றுமில்லை; அப்படியிருந்தும், இன்னும் அவனுக்குச் சகலமும் கீழ்ப்பட்டிருக்கக் காணோம். என்றாலும், தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம்.

இயேசு இவ்வாறு செய்ததின் விளைவு என்ன? அதனை இரட்சிப்பு என்று அழைக்கலாம். ஆனால் எபிரேயருக்கு எழுதிய ஆக்கியோன் அதனைவிட மேலான ஒன்றை இங்கு குறிப்பிடுகின்றார். தேவன் இயேசுவில் மனிதனாக தோன்றியதினால், அவரை பின்பற்றும் மனிதர்கள் ஒரு அவரைப் போல் தெய்வீகமானவர்களாக மாற்றப்பட்டு - அவரது குடும்பத்தில் அங்கத்தினர்களாக மாறுவார்கள்.

ஒரு நாள், நாம் மரித்த பின்போ அல்லது இயேசு மீண்டும் வந்து தனது இராஜ்ஜியத்தை, புதிய ஏதேனை உருவாக்கும் நாளிலோ, அவர் நம்மை தனது பரலோக வீட்டாருக்கு அறிமுகப்படுத்துவார். அவர் நம்மைப் போல் மனுவுருவேற்றது, நம்மை அவரைப் போல் மாற்றவே:

ஏனென்றால் தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர், அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது. எப்படியெனில், பரிசுத்தஞ்செய்கிறவரும் பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவரால் உண்டாயிருக்கிறார்கள்; இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல்:

"உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து,

சபை நடுவில் உம்மைத் துதித்துப் பாடுவேன் என்றும்.........

இதோ, நானும், தேவன் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் என்றும் சொல்லியிருக்கிறார்."

*(எபி. 2:10-13)*

*ஏலோகிம்கள்* மத்தியில், தான் அவர்களை விட சிறியவராய், மனிதனாய் மாறியதை மறைக்காமல், இயேசு வெளிப்படையாக அறிவிக்கின்றார். அது தேவனுடைய ஐசுவரியமான திட்டத்தின் ஒரு பகுதி. தேவனது ஆலோசனை சங்கத்தின் மத்தியில் நின்று ("சபை நடுவே") அவர் நம்மை அறிமுகப்படுத்துவார்: *இதோ, நானும், தேவன் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும். நாங்கள் இன்றும்-என்றென்றும் ஒன்றாயிருப்போம்* என்று கூறுவார்.

தேவனுடைய மகிமையான தெய்வீக குடும்பத்தில் நாம் ஒன்றாய் இணைக்கப்படுவதே நம் நித்திய நிலை. இதனை பவுல் நேர்த்தியாக விளக்கியுள்ளார், ரோமர் *8:18-23:*

ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன். மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது. அதேனென்றால் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே, அந்தச் சிருஷ்டியானது சுய இஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது. ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது. அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற

நாமுங்கூட நம்முடைய சரீரமீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்.

பவுல் விசுவாசிகளை, "தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்" (ரோமர் *8:29*) என்ற வார்த்தைகளினால் தேற்றினார். கொரிந்து சபையாரிடம் அவர் கூறியது, "நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்" (2 கொரி. *3:18*), நமது மனித சரீரம் மறுரூபமாக்கப்படும், "அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும்" (2 கொரி. *15:53*). பேதுரு, மனிதர்கள் தேவனுடைய பரலோக குடும்பத்துடன் இணைக்கப்படுதலை "திவ்விய சுவாபத்தின் பங்காளிகளாகுதல்" என்றழைக்கின்றார் (2 பேதுரு *1:4*). அதனை மிகவும் எளிமையாக யோவான் சித்தரித்தது: "நாமும் அவரைப் போலாக மாறுவோம்" (1 யோவான் *3:2*).

## இதன் முக்கியத்துவம் என்ன

கிறிஸ்தவர்களாகிய நாம், பலமுறை இயேசுவைப் போல் மாற வேண்டுமென்று கேட்டிருப்போம். நாம் நிச்சயமாக அவரைப் போலாக வேண்டும். அதனை நாம் கேட்கும் போது, நாம் நல்லவர்களாக அல்லது "தீமை செய்யாது" வாழ வேண்டுமென்றே அதனை புரிந்துகொள்கின்றோம். ஆனால் ஒரு நாள் இயேசுவைப் போலவே மாற்றப்படுவோம் என்று சிந்திப்பதில்லை.

நான் இயேசுவைப் போல் இல்லையே என்ற குற்ற உணர்வோடு நாட்களை கடத்துவதை விட்டுவிட்டு, இயேசு நமக்காக என்ன செய்தார், அதின் ஆசீர்வாதங்கள் என்ன, அவர் நமக்குள் செய்யவிருக்கும் காரியங்கள், ஆகியவற்றை தியானித்து அதின் அடிப்படையில் வாழ கற்றுக்கொள்ள வேண்டும். நான் கிறிஸ்துவைப் போல் என் முயற்சிகளால் மாற வேண்டும், இல்லையென்றால் தேவன் என் மீது கோபம் கொள்வார் என்பது தவறான போதனை. அது கிருபையை மட்டுபடுத்தி, கிறிஸ்தவ வாழ்வை ஒரு பாரமாக மாற்றும். மாறாக தேவன் நமக்காக என்ன செய்துள்ளார் - அவர் என்ன செய்யப்போகின்றார் என்ற உண்மை நம்மை பரவசப்படுத்துமானால், அது ஒரு மகிழ்ச்சி நிறைந்த மாற்றத்தை நமக்குள் உண்டுபண்ணும், அது இருளின் அதிகாரத்தில் இருப்பவர்களை தேவனுடைய குடும்பத்தின் பக்கம் கவர்ந்து இழுக்கும். சில கிறிஸ்தவர்களின் கண்ணோட்டம் மனித முயற்சிகளை மையமாக கொண்டது, ஆனால் வேதாகம கண்ணோட்டமோ பரலோக பார்வையை மையமாக கொண்டது.

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது என்னை நேசிக்கும் ஒருவரை என்னால் பிரியபடுத்த முடியவில்லையே என்ற பயத்தினால் நடத்தப்படுவதில்லை. அது இரண்டு முக்கிய அம்சங்களை புரிந்துகொள்வதினால் நடத்தபடுவது: நாம் தேவனுடைய குடும்பத்திற்குள் தத்து எடுக்கப்பட்டுள்ளோம் - அதின் பொருள் இயேசு நம் சகோதரர், தேவன் இயேசுவை நேசிப்பது போல் நம்மையும் நேசிக்கின்றார் - தேவனது திட்டத்தில் நம் நோக்கம் அவரது இராஜ்ஜியத்தை மண்ணில் உதிக்க செய்வதே. நாம் தற்போதே, ஒரு நாளில் முழுமையாக, ***தேவனது புதிய தெய்வீக அலோசனை சங்கத்தின் உறுப்பினர்கள்***. அவர் நம் பிதா. நாம் அவரது பிள்ளைகள், அவருடன் நித்திய நித்தியமாக ஒன்றாக வாழவிருக்கின்றோம். நாம் அவரது உடன் வேலையாட்கள், மரணத்தின் ஆண்டவனால் காணப்படாத இருளின் அதிகாரத்தின் கீழ்லிருக்கும் நபர்களை விடுவித்து தேவ குடும்பத்திற்குள் அவர்களை அழைத்து வரும் பணி நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

அதுவே வேதம் போதிக்கும் உண்மை, ஏதேனிலிருந்து ஏதேன் வரை. அதுவே நம் முடிவு. நாம் தேவனுடைய குடுமபத்தில் ஒரு இடத்தை பெற போராடுவது நம் வாழ்வின் நோக்கமல்ல. ஒருவரும் தன் முயற்சியினால் அக்குடும்பத்தில் நுழைய முடியாது. அது தேவன் நமக்கு ஈவாக கொடுக்கும் பாக்கியம். நம் தற்போதைய வாழ்வு தேவன் நம்மை ஏற்றுகொண்டதற்கு நன்றி செலுத்தி, அதில் மகிழ்ந்து, மற்றும் அதனை பிறருக்கு அறிவிப்பதே.

# அதிகாரம் பதினாறு

# தேவதூதர்களை அளுபவர்கள்

கிறிஸ்தவர்களாகிய நாம், நாம் யார் என்று அறிந்திருத்தல் நம் விசுவாசத்திற்கு அவசியமானது. நாம் தேவனுடைய குமாரர் மற்றும் குமாரத்திகள், பிதாவினுடைய இராஜ்ஜியத்தில் அவரது தெய்வீக ஆலோசகர்களாக இப்பொழுதே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளோம்.

நாம் இப்பொழுதே ராஜ்ஜியத்தினுள் பிரவேசித்தாலும் (கொலோ. *1:13*), அதின் முழுமையை, பூமி ஏதேனைப்போல் மாறுவதனை நாம் இன்னும் காணவில்லை. "இப்பொழுதே, ஆனால் முழுமையாக இல்லை" என்ற தேவனுடைய இராஜ்ஜியத்தை குறித்த முரண்பாடினை வேதம் முழுமையும் நம்மால் காண முடியும். "இன்னும் முழுமை பெறாத" ராஜ்ஜியத்தின் சில அம்சங்கள் குறித்து நாம் இவ்வதிகாரத்தில் சிந்திக்கலாம்.

## இராஜ்ஜியத்தில் நமது தற்போதைய பங்களிப்பு

தேவனுடைய இராஜ்ஜியத்தில் நமது பங்களிப்பு முன்குறிக்கப்பட்டதல்ல: நாம் இயந்திர மனிதர்கள் செயலாற்றும்படி வடிவமைக்கப்படவில்லை. அவ்வாறு நாம் படைக்கப்பட்டிருந்தால், அது நாம் தேவனுடைய சாயலாய் அவரது பிர நிதிகளாய் படைக்கப்பட்டதற்கு எதிரானது. நாம் தேவனை போல் சுதந்திரமானவர்களாய் சிருஷ்டிக்கப்பட்டுள்ளோம். நமக்கு முழு சுதந்திரம் இல்லையென்றால் நாம் அவரைப் போல் இருப்பதில்லை, மாறப்போவதுமில்லை. நாம் தேவனுக்கு கீழ்படிந்து அவரை தொழுது கொள்வதற்கோ, அல்லது அவரை எதிர்த்து போராடுவதற்கோ நமக்கு சுதந்திரமளிக்கப்பட்டுள்ளது. நாம் எதை விதைகிறோமே, அதனை அறுப்போம். நாம் எதை விதைகின்றோம் என்பது முன்னதாகவே தீர்மானிக்கப்படவில்லை.

ஆனால் தேவன் நமக்கு மேலானவர். அவர் ஒரு திட்டம் வைத்திருக்கின்றார், அது நிச்சயமாகவே நிறைவேறும். அது மனித சுதந்திரத்தினால் பாதிக்கப்பட போவதில்லை. நாமோ அல்லது தெய்வீக சக்திகளோ அதனை ஒரு பொழுதும் சீர்குலைக்க முடியாது.

நான் முதல் அதிகாரத்தில் குறிப்பிட்ட பரலோக ஆலோசனை சங்கத்தை குறித்து சற்று சிந்திக்கவும். *1* இராஜாக்கள் *22*'ம் அதிகாரத்தில் வேதம் கூறுகின்றதை நம்புகீறிர்களா என்று கேட்டேன், அதின் பின்னர் தெய்வீக ஆலோசனை சங்கத்தை குறித்து நான் குறிப்பிட்டேன். தேவன் தீயவனான ஆகாப் மரிக்க வேண்டுமென தீர்மானித்தார் (அது நடந்தே தீரும்). ஆனால் அவன் எவ்வாறு சாக வேண்டுமென்று தீர்மானிக்கும் அதிகாரத்தை தெய்வீக ஆவிகளிடம் விட்டுக்கொடுத்தார் (*1* இராஜா. *22:19-23*).

முன்குறிக்கப்படுதலும் மற்றும் சுதந்திரமும் தேவனுடைய இராஜ்ஜியத்தில் ஒன்றிணைந்து செயல்படுகின்றன. தேவனது திட்டங்கள் ஒரு நாளும் விழ்த்தபடுவதோ அல்லது தற்காலிகமாக நிறுத்தப்படுவதோ இல்லை. பாவம் மற்றும் முரட்டாட்டங்களை மீறி அவர் தனது சுதந்திரமான பிரதிநிதிகளைக் கொண்டு - தன் விருப்பங்களை நிறைவேற்றுவார். C.S. லூயிஸ் ஒரு முறை சொன்னது போல் (பிரேலாண்ட்றா என்ற புஸ்தகத்தில்), "நீங்கள் என்ன செய்தாலும், அதிலிருந்து ஒரு நன்மையை அவரால் உருவாக்க முடியும். ஆனால் நாம் கீழ்படிவதினால் அருளப்படவிருந்த நன்மையல்ல."

நாம் இப்பொழுதும், இனி வரும் நாட்களிலும், எவ்வாறு தேவனுடைய ஆலோசனை சங்கமாக இருக்கின்றோம். தற்போது மனிதர்களை இருளிலிருந்து விடுவிப்பதில் தேவனுடன் பங்களிக்கின்றோம். பொறாமை எண்ணங்களும், தீய குணங்களும் நிறைந்த தேவனுக்கு எதிரான புத்திசாலிகளான தீய சக்திகள் மத்தியில் தேவனுடைய சத்தியங்கங்களை அறிவித்து, மற்றும் அதனை பாதுகாப்பதில் தேவனுடன் பங்கு பெறுகின்றோம். தேவன் விரும்பியவாறு வாழ்வை அனுபவிப்பதில் பங்கு பெறுகின்றோம்.

இவையெல்லாம் வரப்போகும் இராஜ்ஜியத்திற்காக நம்மை பயிற்சிவிக்கின்றது. உலக அலுவல்களில் சிக்கி தெய்வீக கண்ணோட்டத்தை இழந்த கொரிந்து சபையை பார்த்து பவுல் கேட்டது, “நீங்கள் தேவதூரர்களை நியாயதீர்ப்பீர்கள்” என்று அறியீர்களா (*1* கொரி. *6:3*). அவர் அவ்வார்த்தைகளின் மூலம் சிறப்பான ஒன்றை அறிவுறுத்தியுள்ளார்.

## தேசங்கள் மீது நியமிக்கப்படுதல்

இராஜ்ஜியத்தின் முழுமை இன்னும் நிறைவேறவில்லை. அது நடக்கும் போது, இருளின் அதிகாரங்கள் முற்றிலும் முறியடிக்கப்படும். தேசங்களை ஆளும் பிசாசின் சக்திகளான தெய்வங்கள் அனைத்தும் நிரந்திரமாக நீக்கப்பட்டு - மகிமைப்படுத்தப்பட்ட தேவனுடைய மனித குடும்பம் மற்றும் ஆலோசனை சங்கத்தால் மாற்றியமைக்கப்படும். இயேசு வெளிப்படுத்தின விசேஷத்தில் கூறியதை கவணிக்கவும்:

> உங்களுக்குள்ளதை நான் வருமளவும் பற்றிக்கொண்டிருங்கள். ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு, நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றதுபோல, ஜாதிகள்மேல் அதிகாரம் கொடுப்பேன். அவன் இருப்புக்கோலால் அவர்களை ஆளுவான்; அவர்கள் மண்பாண்டங்களைப்போல நொறுக்கப்படுவார்கள். விடிவெள்ளி நட்சத்திரத்தையும் அவனுக்குக் கொடுப்பேன் (வெளி. *2:25-28*)

இயேசு தனது புதிய பூமியில் - ஒரு புதிய உலகளாவிய ஏதேனில் - தனது சிங்காசனத்தில் அமரும் தருணத்தில் - அதனை தன் சகோதர, சகோதரிகளுடன் பகிர்ந்துக் கொள்வார். அதிகாரங்களும் மற்றும் வல்லமைகளும் தூக்கி ஏறியப்பட்டு, அவ்விடத்தில் நாம் நியமிக்கப்படுவோம். தேசங்கள் மீது ஆளுகை செய்யும் அதிகாரம், தேவனுக்கு உண்மையான தேவதூதர்களிடம் அளிக்கப்படாமல் நமக்கு கொடுக்கப்படும் - *நாம் தேவதூதர்களைவிட மேலானவர்களாக* தேவனுடைய புதிய ஏதேன் இராஜ்ஜியத்தில் அமர்த்தப்படுவோம்.

வெளிப்படுத்தின விசேஷம் *2:28* சற்று குழப்பமான வாக்கியமாக தோன்றுகின்றதா? “நான் அவருக்கு அதிகாலை நட்சத்திரத்தை கொடுப்பேன்”? தீய சக்திகள் முறியடிக்கப்பட்டபின் நாம் இயேசுவுடன் இணைந்து தேசங்களை ஆழப்போவதை அது குறிக்கின்றது. “அதிகாலை நட்சத்திரம்” தெய்வீக ஜீவராசிகளை குறிக்கும் பதம் (யோபு *38:7*). அது மேசியாவையும் குறிக்கும். மேசியாவும் ஒரு தெய்வீக ஜீவராசியானபடியால், “நட்சத்திரம்” என்ற சொல் அவரது இராஜ்ஜியத்தை குறிக்க பயன்படுத்தப்பட்டுள்ளது. எண்ணாகமம் *24:17* கூறுவது “ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும், ஒரு செங்கோல் இஸ்ரவேலிலிருந்து எழும்பும்.” வெளிப்படுத்தின விஷேசத்தில் இயேசு தன்னைக் குறித்து இவ்வாறு கூறுகின்றார்: “நான் தாவீதின் வேரும் சந்ததியும், பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமுமாயிருக்கிறேன்” (வெளி. *22:16*).

வெளிப்படுத்தல் *2:25-28’*ல் கூறப்பட்டுள்ள வல்லமையானது, இயேசு தன்னை அதிகாலை நட்சத்திரமான மேசியா என்று குறிப்பிடுவது மட்டுமின்றி, அதிகாலை நட்சத்திரத்தை நமக்கு தருகின்றார் - அவர் தனது இராஜ்ஜியத்தை நமக்கு பகிர்ந்தளிக்கின்றார். நாம் அதனை புரிந்துக்கொள்ளும்படி வெளிப்படுத்தல் *3:20-21’*ல் அவர் மேலும் கூறுவது:

> இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான். நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன். (வெளி. *3:20-21*)

ஏதற்காக நாம் அவரது திவ்விய சுவாபத்தின் பங்காளிகளாக மாற்றப்படுகின்றோம்? ஏதற்காக இயேசு கிறிஸ்து நம்மை அவரது சகோதர, சகோதிரிகளாக தனது ஆலோசனை சங்கத்தில் அறிமுகப்படுத்துகின்றார்? தேவன் விரும்பியவாறு பூமியின் மீதான ஆளுகையை நமக்களிக்கவே. புதிய, உலகளாவிய ஏதேனில் பரலோகம் பூமியில் வந்து வாசம் செய்யும்.

## நித்திய ஏதேன்

ஆதியாகமத்தின் முதல் ஐந்து அதிகாரங்களில், மனிதர்கள் மற்றும் தெய்வீக ஜிவராசிகளைக் உள்ளடக்கிய தேவ இராஜ்ஜியத்தியத்தின் மையமாக ஏதேன் விளங்கியது. எனவே வெளிபடுத்தின விஷேசத்தின் கடைசி அதிகாரம் நம்மை ஏதேனுக்கு திரும்ப அழைத்து செல்வதில் ஆச்சரியமில்லை:

> பின்பு, பளிங்கைப்போல தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டுவருகிறதை எனக்குக் காண்பித்தான். நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள். இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும். அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவருடைய சமுகத்தைத் தரிசிப்பார்கள்; அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும். அங்கே இராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள்மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள்.(வெளி. *22:1-5*)

ஜீவவிருட்சம் தேசங்களை குணப்படுத்தும் என்பதினை கவணித்தீர்களா? துரைதனங்களாலும் மற்றும் வல்லமைகளாலும், தற்போது ஆளப்படும் தேசங்கள், தேவனது புதிய குமாரர்கள் மற்றும் குமாரத்திகளான - *நம்மால்* இயேசுவின் வருகைக்கு பின் ஆளப்படும்.

வெளிப்படுத்தல் புஸ்தகத்தில் ஜீவவிருட்சம் தோன்றுவது இது முதல் முறை அல்ல. முடிவு வரை நிலைத்திருப்பவர்களைக் குறித்து இயேசு கூறியது, வெளிப்படுத்தல் *2:7,11*, "அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன்... ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை." ஜிவவிருட்சத்தின் கனி எதேனில் உள்ள கனி. முதலாம் மரணம் சரீரபிரகாரமான மரணத்தை குறிக்கின்றது, ஆதாம் பாவம் செய்து ஏதேனிலிருந்து விரட்டப்பட்ட பின் அது நடந்தது. தேவனுடைய நியாயதீர்ப்புக்கு முன் எல்லா மனிதரும், விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகள் உயிர்பிக்கப்பட போவதால், இரண்டாம் மரணம் என்பது கடைசி நியாயதீர்ப்பினை குறிக்கின்றது (வெளி. *21:8*). தேவனுடன் புதிய ஏதேனில் வசிப்பவர்கள் இரண்டாம் மரணமடைவதில்லை.

## இதின் முக்கியத்துவம் என்ன

பல கிறிஸ்தவர்கள் மரணத்திற்குப் பின் என்ன நடக்கும் என்பதினை குறித்த தெளிவான அறிவின்றி காணப்படுகின்றனர். அதனைக் குறித்து முழுமையும் வேதத்தில் எழுதப்படவில்லை, ஆனால் சில காரியங்கள் குறிப்பாக அறிவிக்கப்பட்டுள்ளன. நாம் எப்பொழுதும் பாடிக் கொண்டு, யாழ் மீட்டி மேகங்களில் மிதக்கப்போவதில்லை. அழகிய மெத்தைகளில் அமர்ந்து நம்மை பிரிந்து சென்ற குடும்பத்தினருடன் அல்லது பிரபலமான விசுவாசிகளுடன் பேசுவதில் காலம் செலவழிக்கப் போவதில்லை.

மாறாக, ஏதேனில் தேவன் அருளிய வாழ்வை வாழப்போகின்றோம் - தேவன் படைத்த யாவற்றையும் அனுபவிப்பதிலும், மற்றும் அதனை பராமரிப்பதிலும் அலுவலாக இருப்போம், நம்முடன் தேவனுக்கு உத்தமமாயிருக்கும் தேவதூதர்களும் இருப்பர். பரலோகமும், பூமியும் இனி பிரிந்திருப்பதில்லை.

நமது நித்திய நிலை என்னவென்று அறிதல் நமது தற்போதைய சிந்தனைகளை செதுக்க வேண்டும். பவுல் கூறுவது போல், "எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காதுகேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை" (*1* கொரி. *2:9*). இத்தகைய மகத்தான எதிர்காலம் நம்

நிகழ்காலத்தை சரியான கண்ணோட்டத்தில் நாம் காண நமக்கு உதவும். பவுல் மேலே கூறிய வசனங்களை தொடர்ந்து, கொரிந்தியருக்கு அவர் எழுதிய இரண்டாம் நிருபத்தில் கூறியது:

> நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம்... ஆகையால் சகோதரரே, ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள் அறியாதிருக்க எங்களுக்கு மனதில்லை. என்னவெனில், பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று. நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம். (2 கொரி. *1:3-9*)

தேவன் நம் ஜீவனை காக்கின்றவர். ஆனால் நாம் மரித்தால், இயேசுவோடு அவரது சிங்காசனத்தில் அமர்த்தப்படும்படி எழுப்பப்படுவோம் (வெளி. *3:21*).

நமது முடிவை மனதில் கொண்டோ அல்லது அதனை மறந்தவர்களாகவோ நாம் வாழ்கின்றோம். நமது நித்திய நிலையை குறித்த நம் அறிவு நம் நடந்துகொள்ளும் விதத்தை மாற்ற வேண்டும். நீங்கள் விரும்பாத, அற்பமாக எண்ணும், அல்லது நிராகரிக்கும் உங்களோடு பணி புரியும் ஒரு நபருடன் நீங்கள் ஒரு வீட்டில் தங்கியிருக்க வேண்டுமென்று அறிந்தால், அவரோடு ஒப்புரவாக அல்லது நண்பராக நீங்கள் முயற்சி செய்வீர்கள். அப்படியென்றால் நம் சகவிசுவாசிகளை நாம் எவ்வாறு ஏளனமாக நடத்த முடியும்? ஒரு அவிசுவாசியை இயேசுவிடம் கொண்டு வருவதற்கு நாம் ஏன் முயற்சிப்பதில்லை? நாம் நித்திய மனதில் கொண்டோ அல்லது மறந்தோ வாழ்கின்றோம்.

உங்களை மகிழ்ச்சியாக வைப்பதற்கு இயேசு உங்களுக்காக இன்னும் என்ன செய்ய வேண்டும்? நாம் எதற்காக விசுவாசிகளுடன் கௌரவம் பார்க்கின்றோம்? எதற்காக பிறரது கவணத்தை ஈர்க்க, தனிப்பட்ட ஆதாயத்தை தேட முயற்சிக்கின்றோம்? அவர்களது நித்தியத்தை குறித்து பவுல் நினைவுபடுத்த வேண்டிய கொரிந்தியரைக் காட்டிலும் நாம் யோக்கியர்களா? நாம் கிறிஸ்துவோடு ஆழப்போக்கின்றவர்கள் என்பதில் திருப்தியாக அல்லது திருப்தியற்றவர்களாக நாம் வாழ்கின்றோம்.

கிறிஸ்தவனே, நீ யார் என்பதை அறிந்து, தேவன் உனக்காக வைத்திருக்கும் திட்டங்களை அறிந்து வாழ வேண்டிய காலம் இது.

# முடிவுரை

நமது பயணத்தின் முடிவிற்கு வந்துவிட்டோம். இருப்பீனும் நாம் தற்போது தான் தொடங்கியுள்ளோம் என்றாலும் மிகையாகாது. நாம் சில அடிப்படை கேள்விகளைக் குறித்து சிந்தித்தோம்: *வேறே தேவர்கள் உள்ளனவா? அப்படி இருந்தால், அது நாம் வேதத்தை புரிந்துகொள்வதில் என்ன மாற்றத்தை உண்டாக்கும்? நாம் வேதத்தின் பிரபலமான பகுதிகள் மட்டுமின்றி, வழக்கத்திற்கு மாறான மற்றும் அதிகம் அறியப்படாத பகுதிகளை அறிதல் என்ன மாற்றத்தை உருவாக்கும்? வேதம் போதிக்கும் நாம் காணக்கூடாத உலகம் உண்மை என்று அறிதல் நமக்குள் என்ன தாக்கத்தை ஏற்படுத்தும்?* வேதத்தில் கூறப்பட்டுள்ள அசாதரணமான உலகை குறித்து நான் அறிந்தபோது, அது, நான் அறிந்த எல்லாவற்றையும் குறித்த என் கண்ணோட்டத்தை மாற்றியது. அதனை இரண்டு வார்த்தைகளில் என்னால் விள்க்க முடியும்: *அடையாளம்* மற்றும் *நோக்கம்*. இப்புஸ்தகத்தை வாசித்ததினால் நீங்களும் இவ்விரண்டு காரியங்களை குறித்து பரவசமடைந்தீருப்பீர்கள் என நம்புகின்றேன்.

## நம் அடையாளம் - நமக்கு தேவனுடைய குடும்பத்தில் ஒரு வீடு உண்டு

புதிய ஏற்பாடு முழுமையும் காணப்படும் “கிறிஸ்துவுக்குள்” நாம் யார் என்ற போதனையே இப்புஸ்தகம் முழுவதும் விவாதிக்கப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டின் தெய்வங்கள் மெய்யானவை என்பது உன் தேவனாகிய கர்த்தரைத் தவிர வேறே தேவர்கள் உனக்கு இருக்க கூடாது என்ற கட்டளையை நாம் விளங்கிக் கொள்ள உதவுகின்றது. அக்கட்டளை பணம், உடமை அல்லது வாகனங்கள் மீது நமக்கிருக்கும் ஈர்ப்பினை குறித்து கூறவில்லை. அது தேவன் தன் மக்கள் மீது வைத்திருக்கும் தீவிரமான அன்பைக் குறித்து பேசுகின்றது. மெய் தேவனைத் தவிர வேறு எந்த தேவர்கள் பக்கமும் நாம் திரும்பக்கூடாது என்பதினை வழியுறுத்துகின்றது.

தேவன், பிற தேவர்களையும் அவர்களைப் பின்பற்றுபவர்களையும் (“தேசங்களையும்”) தண்டித்ததின் விளைவு கொடூரமானது. நாம் ஒரு நாளில் பாவத்திற்கு அடிமையாய், பிற தேவர்களால் சூறையாடப்பட்டு, தேவனால் கைவிடப்பட்டவர்களாய் வாழ்ந்தோம். தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டு, அவரது வாக்குதத்த அன்பிற்கு புறம்பானவர்களாய் பவுல் கூறுவது போல் வாழ்ந்தோம் (எபே. *2:12*). நாம் தொலைந்துபோனவர்களாய், தேவனது சத்துருக்களாய், பிற தேவர்களை சேவித்தோம் (எபே. *4:18*; கொலோ. *1:21*).

இதனை அறிதல், தேவனால் *தத்து எடுக்கப்படுதல்* மற்றும் *சுதந்திரவாளிகள்* என்ற போதனைகளின் அர்த்தம் என்னவென்று புரிந்துக்கொள்ள உதவும். தேவன் தனது கைகளினால் படைத்த இவ்வுலகில் தன் குடும்பத்துடன் தான் வாழும் திட்டத்தை கைவிடவில்லை. ஆம், பாபேலில் அவர் மனிதர்களை தள்ளிவிட்டார், ஆனால் உடனடியாக தான் உதறிய மனிதர்கள் அனைவரையும் மீட்கும் நோக்கத்துடன் ஆபிரகாமை அழைத்தார் (அப். *10:26-27*).

நாம் காணக்கூடாத ஆவிக்குரிய உலகின் உண்மையை குறித்து அறிதல் வேதாகமத்தை நாம் புரிந்துகொள்வதற்கு அவசியம். அது பழைய ஏற்பாட்டில் காணப்படும் விக்கிரக வழிபாடு எளிதாக எடுத்துக்கொள்ளக் கூடிய ஒரு பாவமல்ல என்பதினை உணர்த்தும். அதுவே பாவம். இஸ்ரவேல் மெய்யான தேவனை தொழுதுகொள்ள அழைக்கப்பட்ட தேசம். அவர்கள் தேவனை மறுதலித்து பிற தேவர்களை பின்தொடர்ந்தபோது சிறைபிடிக்கப்பட்டு, பிற தேசங்களைப் போல் தள்ளப்பட்டனர். ஆகவே தான் வேதத்தில் இரட்சிப்பு என்பது *விசுவாசத்தினால்* என்று போதிக்கப்பட்டுள்ளது. தேவன் நம் நடைமுறையில் மாற்றங்கள் ஏற்படுதைக் காட்டிலும், நாம் மனப்பூர்வமாக அவரில் *நம்பிக்கை வைக்கின்றோமா* என்பதினை தான் பார்க்கின்றார். நாம் தேவாதி தே வன் மீது நம் இருதயத்தில் பற்றுதலாயிருந்தால் அவர் நம்மை இரட்சிப்பார். ஆனால் வேறே தேவர்கள் மீது நம்பிக்கை வைத்தால், அதின் பலனை ஒரு நாள் நாம் அறுவடை செய்வோம்.

இன்று தேவனுக்கு உண்மையாய் இருப்பது என்பது இயேசு சிலுவையில் சம்பாதித்த மீட்பை பற்றிக்கொள்வது, அவரே மாம்சத்தில் வெளிப்பட்ட தேவன். நம் நல்லொழுக்கம் மற்றும் பழக்கவழக்கங்கள் நம்மை தேவனுக்கு அருகில் நம்மை கொண்டு செல்வதில்லை. நாம் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டதால் அவரது நியமங்களை பின்பற்ற வேண்டும். அவரது கட்டளைகள், நாமும்

பிறரும் அழியாதபடி நம்மை பாதுகாத்து, மகிழ்ச்சியான மற்றும் நிறைவான வாழ்வை நோக்கி நம்மை நடத்திச் செல்லும். அது தேவனது குடும்பத்தில் அவரது தெய்வீக குடும்பத்துடன், அவரது இராஜ்ஜியத்தில், புதிய ஏதேனில் வாழப்போகும் வாழ்க்கையை ருசி பார்க்க உதவும்.

## நமது நோக்கம் - ஏதேனை மீட்கும் தேவனது திட்டத்தில் நமக்கு பங்குண்டு

தேவனுடைய குடும்பத்தில் அங்கத்தினராக மாற ஒரே ஒரு நிபந்தனை மட்டும் உள்ளது: அது இயேசு கிறிஸ்துவின் ரூபத்தில் நம்மை தேடி வந்த தேவாதி தேவன் மீது முழுமையான விசுவாசம் வைப்பதே. அவ்விசுவாசம் ஆச்சரியமான ஆசீர்வாதங்களை மட்டுமின்றி, நம் வாழ்வை குறித்த தெளிவையும் நமக்கு கொடுக்கும்.

தேவனது குடும்பத்தின் அங்கத்தினர்களுக்கு ஒரு ஊழியமுண்டு: தேவனது பிரநிதிகளாக அவரது நல்லாட்சியை பூமி முழுவதும் படர செய்து, மற்றும் அவரது இராஜ்ஜியத்தில் அங்கத்தினர்களை சேர்த்தல். அப்போஸ்தலர் 2'ல் தொடங்கிய அவரது திருச்சபையாகிய கிறிஸ்துவின் சரீரத்தினால் உண்டாகும் மகா பெரிய மீட்பினை பரவி பெருக செய்தல். முதல் ஏதேனில் ஏற்பட்ட வீழ்ச்சி பூமி முழுவதும் ஒரு கொடிய வியாதியாய் பெருகியதினை குணப்படுத்தும் மருந்தாக சுவிஷேசம் பாவத்தால் பாதிக்கப்பட்டவர்களை குணமாக்க வேண்டும். நாம் தேவாதி தேவனைக் குறித்த உண்மையை *எடுத்துச்செ ல்பவர்கள்,* எல்லா தேசங்கள் மீதும் அவர் வை த்திருக்கும் அன்பினை அறிவிப்பவர்கள், மற்றும் சிருஷ்டிப்பு முதல் தன் பூலோக வீட்டின் தன் குடுமபத்தினருடன் தேவன் வாழ விரும்புவதை நிறைவேற்ற உழைப்பவர்கள். ஏதேன் மீண்டும் உயிர் பெறும்.

உலகத்தின் கண்டங்கள் ஒவ்வொரு வருடமும் ஒன்றைவிட்டு ஒன்று தூரமாக நகர்கின்றது என்பது உண்மையே. ஆனால் "கண்டங்கள் பிரிந்து செல்லுதல்" மனித உணர்வுகளால் உணர முடியாதது. அதனை ஆராய்ச்சியினால் கிடைக்கப்படும் தகவல்கள் மூலமாகவே நாம் அறிகின்றோம். அதனை போன்றே, தளராது முன்னேறும் தேவனுடைய இராஜ்ஜியமும். சுவிஷேசம் எவ்வாறு ஒவ்வொரு நபராக, இருளின் வல்லமையிலிருந்து, பொய் தேவர்களின் பிடியிலிருந்து விடுவிக்கின்றது என்பதினை நம் கண்களால் காணக்கூடாதது. ஆனால் அது *நிச்சயமாக வளர்ந்து வருகின்றது.*

நம் கண்களால் பார்க்ககூடாமல் இருப்பீனும் தேவன் தன் திட்டத்தை நம் மூலமாக நிறைவேற்றுகின்றார் என்பதினை அறிதல் அவசியம். நம் வாழ்விலும், சரீத்திரத்திலும் தேவன் ஞானமாக செயல்படுகின்றார் என்பதினை விசுவாசியாமல் காணக்கூடாத உலகத்தை நம்புவது சாத்தியமற்றது. தேவனது திட்டமான உலகளாவிய ஏதேனை உருவாக்குவதில் தேவனும், அவருக்கு உண்மையாய் இருக்கும் தேவதூதர்களும் நமக்கு உதவிகரமாக இருக்கின்றனர் என்பதினை தெளிவாக அறிந்து வாழ்தல் அவசியம் (எபி. 1:14).

யாரோ ஒருவர் தேவனுடைய இராஜ்ஜியத்தில் இணைக்கப்படுவதில் மற்றும் பாதுக்காப்படுவதில் நம் பங்களிப்பு அவசியம். பாவ உலகில் ஒவ்வொரு நாளும் இருளின் அதிகாரத்தில் வாழும் மனிதர்களை சந்திக்கும் வாய்ப்பு நமக்களிக்கப்படுகின்றது. *நாம் செய்யும் மற்றும் பேசும் அனைத்து ம்* ஒரு தாக்கத்தை உருவாக்கும் தன்மையுடையது. நாம் வேடிக்கை பார்ப்பவர்களாக இல்லாமல் செய்லபடுகின்றவர்களாய் வாழ வேண்டும். விசுவாசத்தின்படி வாழ்தல் என்பது ஒன்றும் செய்யாமல் இருப்பதல்ல - அது ஒரு நோக்கத்துடன் வாழ்தல்.

# பாவமன்னிப்பிற்கான ஜெபம்

**பாவமன்னிபிற்கான ஜெபம் : ஒரு விலையேற பெற்ற பரிசு**

நாம் அனைவரும் வாழ்வில் ஏதோ ஒரு தருணத்தில் செய்வதே பாவமன்னிப்பிற்கான ஜெபம். மன்னிப்பு என்பது எளிதாக பெற்றுகொள்ளவோ, கொடுக்கவோ முடியாத ஒரு விலைமதிப்பில்லா ஈவு. அது வாழ்வில் இன்றியமையாதது; அது நம் பழைய தவறுகளை மறந்து, புதிய நம்பிக்கையுடன் எதிர்காலத்தை பார்க்க உதவும். இயேசு கிறிஸ்து தன் மரணத்தின் வழியாக மனிதனை மன்னிப்பதற்காகவே இவ்வுலகிற்கு வந்தார்.

**பாவமன்னிபிற்கான ஜெபம் : இயேசு கிறிஸ்துவினால் சாத்தியமாயிற்று**

பாவமன்னிப்பிற்கான ஜெபம் தேவனை நோக்கி ஏறெடுக்கப்படுவது. நாம் ஒருவரை ஒருவர் காயப்படுத்தினாலும், நம் மீறுதல் அனைத்தும் தேவனை காயப்படுத்தும். இது எப்படி என நீங்கள் ஆச்சரியப்படக் கூடும். நம் குற்றங்கள் எவ்வாறு சர்வ வல்லமைக் கொண்ட அகிலத்தை படைத்தவரை காயப்படுத்தும்? அதனைக் குறித்து தேவன் கவலைபடுவாரா? ஆதியாகம்ம *6*'ல், மனிதர்கள் ஒருவரை ஒருவர் காயப்படுத்திக் கொண்டது தேவனை மனஸ்தாபப்பட செய்தது*:* "மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு, தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது" (ஆதியாகமம் *5:5-6*).

சகலத்தையும் அறிந்த தேவன் நம் தீய சிந்தனைகளைக் குறித்து துக்கப்படுகின்றார். எனவே, மெய்யான மன்னிப்பு தேவனிடமிருந்து வர வேண்டும். எனினும், அவரது நீதியின் நிமித்தம், மன்னிப்பு எளிதாக கொடுக்கப்படுவதில்லை. நீதியுள்ள நியாயதிபதியாக தேவன் இருப்பதினால் ஒவ்வொரு பாவமும் தண்டிக்கப்பட வேண்டும். நம் பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டுமென இயேசு கிறிஸ்து நமக்காக சிலுவையில் மரித்தார். அவரது பாடுகள் நம் மீறுதல்களுக்கான தண்டனையை சுமந்து தீர்த்தது. "இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" (மத்தேயு *26:28*).

தனது அன்பின் நிமித்தம், தேவன் நம் மனசாட்சி குற்ற உணர்விலிருந்தும் மற்றும் குற்றம் சுமத்தப்பட்டதிலிருந்தும் விடுபட வேண்டுமென அறிவார். நம் பாவங்கள் மன்னிக்கப்படுவதே நம் மிகப்பெரிய தேவை என்று தேவன் அறிவார். தேவன் நம் தவறுகளுக்காக பாடு அனுபவித்தது மட்டுமல்லாமல், நம் பாவங்களின் விளைவிலிருந்து நம்மை மீட்டு, நாம் பாவம் செய்தால் மன்னிப்பளிக்கும்படி பரிகாரம் செலுத்தினார். அவரது இலவசமான பாவமன்னிப்பை ஏற்றுகொள்வதே நாம் செய்ய வேண்டிய ஒரே காரியம்.

**பாவமன்னிபிற்கான ஜெபம் : தேவனிடம் மன்னிப்புக்காக வின்ணப்பிக்கவும்**

ஒருவேளை துக்கப்படுகின்ற ஒரு ஆத்துமாவிற்கு ஆறுதலான ஒரு பாவமன்னிப்பின் ஜெபத்தை எதிர்பார்த்து நீங்கள் இந்த இணையப்பக்கத்தை தேடி இருக்கலாம். இல்லையென்றால் உங்களை அழமாக காயப்படுத்திய ஒருவரை மன்னிக்க போராடிக் கொண்டிருக்கலாம். இயேசு கிறிஸ்துவை ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ளும் அனைவருக்கும் பாவமன்னிப்பு இலவசமாக அருளப்படுகின்றது. நமது குற்றங்களை தேவனுக்கு முன்பாக ஒப்புக்கொண்டு, அவரிடம் நாம் மன்னிப்பு கேட்டால், அவர் நம்மை மன்னித்து விடுவார்*: "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்"* (*1* யோவான் *1:9*).

நாம் இயேசுவை நிராகரித்தால், தேவனது ஈவான மன்னிப்பை நிராகரிக்கின்றோம். நாம் தேவனுடன் ஒப்புரவாக விருப்பமில்லை என்று தெரிவிக்கின்றோம் (*1* யோவான் *1:10*). நாம் தேவனுடைய மன்னிப்பை ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ நிர்பந்திக்கப்படுவதில்லை, ஆனால் இறுதியில் நம் வாழ்வில் செய்த பாவங்கள் அனைத்திற்கும் தேவனிடம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். தேவன் நம்முடன் ஒப்புரவாக விரும்புகிறார். "*தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்*" (யோவான் *3:16*). நீங்கள் உண்மையாகவே மன்னிக்கப்பட வேண்டிம் என்று விரும்பினால், இயேசுவின் மன்னிப்பை நாடி, அவரை உங்கள் ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ளுங்கள். உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, தேவன் உங்களை மறுரூபமாக்கும் பணியை தொடங்குவார்.

**பாவமன்னிபிற்கான ஜெபம் : புதிய வாழ்வை பெற்றுக்கொள்ளுங்கள்**

பாவமன்னிப்பிற்கான ஜெபம் ஒரு புதிய நம்பிக்கையையும், தொடக்கத்தினையும் நமக்கு அருள்கின்றது. நமது பாவங்கள் அனைத்தும் தேவனால் முற்றிலும் நீக்கப்பட்டுவிட்டது. "*ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்*" (எபிரேயர் *8:12*).

நீங்கள் ஒரு பாவி என்று உணர்ந்து, இயேசு கிறிஸ்து ஒருவரே பாவத்திலிருந்து நம்மை மீட்கும் இரட்சகர் என்பதினை நீங்கள் விசுவாசித்தால், நீங்கள் பாவமன்னிப்பின் ஜெபத்தை புரிந்துக் கொண்டீர்கள். உங்களிடம் கேட்கப்படும் கேள்வி, இயேசு கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டு ஜெபிக்க நீங்கள் ஆயத்தமா? அப்படியென்றால், கிறிஸ்துவை விசுவாசித்து, பாவத்திலிருந்து மனம்திரும்பி, உங்கள் வாழ்வை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு அர்பணியுங்கள்:

> **"பிதாவே, நான் உமது கட்டளைகளை உடைத்தேன், என் பாவங்கள் என்னை உம்மிடமிருந்து பிரித்துள்ளது என்பதினை அறிவேன். நான் செய்த தவறுகளுக்காக என்னை மன்னியும், நாம் உம்மிடம் திரும்ப விரும்புகின்றேன். உம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து என் பாவங்களுக்காக மரித்து, மரணத்திலிருந்து உயிர்தெழுந்து, ஜிவனுள்ளவராய், என் ஜெபத்தை கேட்டுக் கொண்டிருக்கின்றார் என விசுவாசிக்கின்றேன். என் வாழ்வின் தேவனாக, என்னை ஆளும்படி, இந்த நாள் முதல் என் இருதயத்தை ஆட்சி செய்யும்படியாய் இயேசு கிறிஸ்துவை அழைக்கின்றேன். என் வாழ்வின் எஞ்சியுள்ள நாட்களில் உமக்கு கீழ்படிந்து, உம் சித்தம் செய்ய எனக்கு உதவும்படி உம் பரிசுத்த ஆவியானவரை எனக்கு தாரும். இயேசுவின் நாமத்தில், ஆமென்."**

"பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப்போஸ்தலர் *2:38*).

நீங்கள் இயேசுவை இன்று ஏற்றுக்கொண்டிருந்தால், தேவனுடைய குடும்பத்திற்கு உங்களை வரவேற்கின்றோம். நாம் அவருக்குள் வளரும்படி, நமது அர்பணிப்பனிப்பில் நிலைதிருக்கும்படி, பின்வரும் காரியங்களை செய்யும்படி வேதம் கூறுகின்றது.

- இயேசு கிறிஸ்துவின் கட்டளைப்படி ஞானஸ்நானம் பெறவும்.
- கிறிஸ்துவின் மீதான உங்கள் புதிய விசுவாசத்தை குறித்து யாரிடமாவது கூறுங்கள்.
- தேவனுடன் அனுதினமும் நேரம் செலவழிக்கவும். அது மிக நீண்ட நேரமாக இருக்க வேண்டுமென அவசியமில்லை. தினமும் வேதம் வாசித்து, ஜெபிக்கவும். உங்கள் விசுவாசத்திலும் மற்றும் வேதத்தை புரிந்துகொள்ளுதலிலும் வளர தேவன் உங்களுக்கு உதவுமாறு ஜெபிக்கவும்.
- இயேசு பின்பற்றுபவர்களுடன் ஐக்கியத்தை நாடுங்கள். உங்கள் சந்தகங்களுக்கு பதிலளித்து, உங்களுக்கு உதவும் விசுவாச நண்பர்களை கண்டுபிடியுங்கள்.
- தேவனை தொழுது கொள்ள ஒரு நல்ல சபையில் சேருங்கள்.

**நீங்கள் இன்று இயேசுவை பின்பற்றுபவராக மாறினீரா? அமுத்தவும் ஆம்! அல்லது இல்லை**

**நீங்கள் ஏற்கனவே இயேசுவை பின்பற்றுபவரா? இங்கே அமுத்தவும்**

**நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? - நாம் அனைவரும் பாவம் செஉது, தேவனுடைய நியாயதீர்ப்பினை பெற வேண்டியவர்கள். பிதாவாகிய தேவன், தனது குமாரனை விசுவாசிக்கும் அனைவரையும் மீட்கும்படி அவரது குமாரனை அனுப்பினார். வேதவாக்கியங்களின்படி இயேசு, சிருஷ்டிகர் மற்றும் நித்தியமான தேவகுமாரன், அவர் பாவமற்ற வாழ்க்கை வாழ்ந்தவர், அவர் நம்மை மிகவும் நேசித்தபடியால் நம்முடைய பாவங்களை சுமந்து, நமக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மீண்டும் உயிர்தெழுந்தார். இயேசு இருவரே தேவன் என்று நம்பி, "இயேசுவே ஆண்டவர்" என்று அறிக்கை செய்தால், நீங்கள் தேவனுடைய தண்டனையிலிருந்து மீட்கப்பட்டு, நித்தியமாக தேவனுடன் பரலோகத்தில் வாழ முடியும்.**

**உங்கள் பதில் என்ன?**

நான், இன்று இயேசுவை பின்பற்ற விரும்புகின்றேன்

நான், இயேசுவை பின்பற்றுபவன்

எனக்கு சில சந்தேகங்கள் உண்டு

# ஆசிரியடமிருந்து ஒரு வேண்டுகொள்

இயற்கைக்கு அப்பாற்பட்ட என்ற இப்புத்தகம், ஆங்கிலத்தில் *The Unseen Realm: Recovering the Supernatural Worldview of the Bible* (Lexham Press, 2015), என்ற புஸ்தகத்தின் சுருக்கம். அது amazon.com என்ற வளைதளத்தில் கிடைக்கும்.

இயற்கைக்கு அப்பாற்பட்ட என்ற இப்புத்தகம் உங்கள் ஆவிக்குரிய வாழ்விற்கு பிரயோஜனமாக இருக்கும் என நம்புகின்றேன். இதில் கூறப்பட்டுள்ள செய்தியை உணர்ந்த நபர்களின் உதாரத்துவமான நன்கொடைகளால் இப்புத்தகம் பிறருக்கு கொடுக்கப்படுகின்றது. எனவே இப்புத்தகம் தொடர்ந்து இலவசமாக கொடுக்கப்பட உங்கள் காணிக்கைகளை பின்வரும் இணையதளங்கள் முலம் செலுத்தலாம் - miqlat.org or nakedbible.org.

மேலும் பல வேதாகம பாடங்களுக்கு, எனது இணையதளத்தை பயன்படுத்தவும் drmsh.com. எனது செய்திகள் nakedbiblepodcast.com என்ற இணையதளத்தில் உள்ளது. அதில் நவீன கலாச்சாரம், சபை பாகுபாடுகள், மற்றும் பிற மதங்கள் தாக்கங்கள் ஆகியவற்றால் கறைப்பட்டாத வேத போதனைகளை உங்களுக்கு கொடுக்க நான் விரும்புகின்றேன்.

எனது இணையதளத்தை நீங்கள் கவணித்தால், அதில் வேத போதனையை மக்களுக்கு அறிமுகம் செய்யும் விதத்தில் அறிவியல் புனைகதைகளை நான் எழுதியுள்ளேன். நான் எழுதிய புனைகதைகள் (*The Façade* and its sequel, *The Portent)* தற்போது ஆங்கிலத்தில் மட்டும் amazon.com என்ற இணையதளத்தில் கிடைக்கின்றது.